# போராட்டம்

2013 புரட்டாதி | இதழ் 05 | நன்கொடை 30.00 ரூபா


# வடக்கின் தேர்தல் எதிர்ப்பார்பும் எதார்த்தமும்




முன்னிலை சோஷலிஸக் கட்சி யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் மாகாணசபை தேர்தல் சம்பந்தமாக துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தது. மாகாண சபைகள் தொடர்பாக தமது நிலைப்பாடு குறித்து வடபகுதி மக்களை தெளிவுபடுததுவதே இதன் நோக்கமென அக்கட்சியின் ஒரு முக்கியஸ்தர் கூறினார் யாழப்பாண மக்கள் ஆர்வத்துடன் அவற்றைக் பெற்றுக் கொள்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறும் ஏனைய மாகாணங்களிலும் மேற்படி துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது. மு.சோ. கட்சியினர் விநியோகித்த துண்டுப் பிரசுரத்தின் செய்தி கீழே காணப்படுகிறது.

“இன்னும் சில நாட்களில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடக்கவிருக்கிறது. வட மாகாண சபைக்காக வரலாற்றில் முதன்முறையாக நடக்கும் தேர்தல் இதுவாகும். 1987ல் இந்திய மற்றும் இலங்கை ஆட்சியாளர்கள் ஒன்று சேர்ந்து, வடபகுதி மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ற வகையில் மாகாண சபை முறையை அறிமுகப்படுத்தினார்கள். இங்கே, கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக வடக்கில் மாகாண சபையை அமைக்க முடியவில்லை என்பதுதான் நகைப்புப்குறிய விடயம். எப்படியிருந்தாலும் இறுதியாக இப்போது வடக்கில் மாகாண சபை தேர்தல் நடக்கப் போகிறது. பல்வேறு அரசியல் கட்சிகள், பல்வேறு வேட்பாளர்கள் பல்வேறு விடயங்களைக் கூறிக் கொண்டு உங்களிடம் வாக்கு கேட்டு வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு வாக்களிக்குமாறு கேட்கிறார்கள். அதற்காக அவர்கள் பல காரணங்களைக் கூறுகிறார்கள். தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்காக தங்களை வெற்றிபெறச் செய்யுமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கூறுகிறார்கள். பொருளாதார அபிவிருத்தி, வேலை வாய்ப்புக்கள், மற்றும் அடிப்படை வசதிகளை பெற்றுத் தருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூறுகிறது. ஜனநாயக உரிமைகளுக்காக யானை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது. இவர்கள் என்னதான் கதையளந்தாலும், இவர்கள் கேட்பது வாக்கு. அவர்கள் வீடுகளுக்கு வருவதும் மக்களை சந்திப்பதும் வாக்கு கேட்பதற்காகத்தான்.

முன்னிலை சோசலிஸக் கட்சி இம்முறை தேர்தலில் போட்டியிடவிலலை. ஆகவே இம்முறை நாங்கள் உங்களிடம் வாக்கு கேட்டு வரவில்லை. அதனையும் விட முக்கியமான விடயம் சம்பந்தமாக உரையாடவே வருகிறோம். தேர்தலைப் பற்றி எங்களுக்கு எங்களுக்கேயான கருத்தொன்று இருக்கிறது. இந்த முதலாளித்துவ தேர்தல் மக்களின்

**(தொடர்ச்சி 2ம் பக்கத்தில்)**

## நீர் முகாமைத்துவத்திற்கு இஸ்ரவேல்

இலங்கையில் நீர் முகாமைத்துவம் செய்வது குறித்து ஆராய்வதற்காக இஸ்ரேலிய தூதுக்குழுவொன்று இலங்கை வந்துள்ளது. இந்த தூதுக்குழுவை சந்தித்த நீர் முகாமைத்துவ மற்றும் நீர்பாசன அமைச்சர் நிமல் சிறிபால த சில்வா, இலங்கையில் விவசாயிகள் நீரை விரயமாக்குவதால் அதனை முகாமைத்துவம் செய்ய வேண்டுமென்று கூறியுள்ளார். அமைச்சர் நிமல் சிறிபால த சில்வாவின் இந்தக் கூற்றோடு தண்ணீரை விற்பதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பது தெரிகிறது. தற்போதைய நிலையில், தொழிற்சாலை கழிவுகளும், விவசாய ரசாயனங்களும் நீரில் கலப்பதனால், நீர் மாசடைந்திருப்பததோடு, அதன் விளைவாக வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோய் பரவலாகியிருக்கிறது. நாடு பூராவும் காணப்படும் நீர்மாசடைதலை குறித்து பிரச்சினைகளை ஆராயும் போர்வையில் நீரை விற்பதற்காக அரசாங்கம் நில அளவைப் படங்களை தயாரித்து வருகிறது. இஸ்ரேலிய பிரதிநிகள் இலங்கைக்கு வந்திருப்பது அதற்காகத்தான் என்பது தெரிகிறது.

## லங்கெஷயருக்கு மீரகாமத்தில் 100 ஏக்கர்

இங்கிலாந்தின் சென்ட்ரல் லங்கெயர் பல்கலைக் கழகத்தின் கிளையொன்றை அமைப்பதற்காக மீரிகாமத்தின் ஏற்றுமதி ஒழுங்குபடுத்துகை வலயத்தில் 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தெரியவருகிறது. நடக்கவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெறும் சமயத்தில் மேற்படி பல்கலைக் கழகத்திற்காக இளவரசர் சாள்ஸினால்அடிக்கல் நடப்படவிருக்கிறது. இந்த வெளிநாட்டு பல்கலைக் கழக திட்டத்திற்காக அரசாங்கம் 10 வருட வரி விலக்களித்திருப்பதாகத் தெரியவருகிறது.

தவிரவும், வெளிநாட்டு பல்கலைக் கழகம் அமைப்பது சார்ந்து கம்பஹா, புத்தளம், கிளிநொச்சி, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் கண்டி போன்ற நகரங்களில் “சுதந்திர கல்வி வலயங்கள்” அமைக்கப்படவிருப்பதாக அமைச்சின் செயலாளர் கூறுகிறார்.

## ரதுபஸ்வல ஆய்வு சந்தேகம்! சூழல் ஆர்வலர்கள்

நிலத்தடி நீரில் நச்சுக் கழிவுகள் சேர்க்கப்படுவதாக கூறப்படும் ரதுபஸ்வல ஹேலீஸ் வெனிகோஸ் தொழிற்சாலையின் இரசாயண செயற்பாடு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு சந்தேகமாக இருப்பதாக சூழல் ஆர்வலர்கள் கூறுகிறார்கள்.

அது தொடர்பில் சர்வதேச மட்டத்திலான ஆய்வொன்று தேவைப்படுவதாகவும், பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் சரியான தன்மை குறித்து நம்பிக்கை வைக்க முடியாதெனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதற்கிடையில் ரதுபஸ்வல பிரச்சினைக்குத் “தீர்வாக” ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட வாக்குறுதியும் கூட மக்கள் எதிர்ப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு தந்திரமாகுமென்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.



## வடக்கின் தேர்தல் ( 1ம் பக்க தொடர்ச்சி)

விருப்பத்தை விரித்துரைப்பதான ஒன்றாக இருக்குமென நாங்கள் நம்பவில்லை. நடக்கப்போவது என்னவென்றால் பணபலம், குண்டர் பலம், குலம் ஊடகம் போன்ற பல உபாயங்களை பயன்படுத்தி செயற்கையான மக்கள் விருப்பத்தை உருவாக்குவதுதான். வாக்களிப்பது எமது கரங்களாக இருந்தாலும், அதற்காக எங்களது சிந்தனையை வழி நடத்துவது நாங்களல்ல. இப்படியான தேர்தல்களில் இடதுசாரிய இயக்கங்கள் போட்டியிடுவது மாகாண சபை போன்ற நிறுவனங்களுக்குள் நுழைந்துக் கொள்வதற்கோ, சொத்துக்களை குவிப்பதற்கோ அதிகார பலத்திற்கோ அல்ல. முறைக்கு எதிரான போராட்டத்தின் இன்னொரு மேடை என்ற ரீதியிலேயேயாகும். முன்னிலை சோசலிஸக் கட்சி இம்முறை தேர்தல் களத்தில் காலநேரத்தையும், உழைப்பையும், பணத்தையும் விரயமாக்குவதற்காக முக்கியத்துவமளிக்கப்போவதில்லை. இந்த நிலைமை குறித்து - இந்த நிலைமையை மாற்றுவது குறித்து கருத்தடலுக்கே முன்னிலையளிக்கிறது.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடாத்தத் தயாராகிக் கொண்டிருக்கும் சமயத்தில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் வடக்கிற்கு தேர்தல் வேண்டாம் என்று கூறி ஒரு வேலைத் திட்டத்தை முன்னெடுத்தன. முன்னிலை சோசலிஸ க் கட்சி இம்முறை தேர்தலில் போட்டியிடாவிட்டாலும், வடக்கிற்கு தேர்தல் வேண்டுமென்று தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது. அரசாங்கத்தோடு உறவாடும் இனவாதக் கட்சிகள் தென் மாகாண சபையில் அமர்ந்துக் கொண்டு, அதன் வரப்பிரசாதங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கும் அதேவேளை, வடக்கிற்கு மாகாண சபை வேண்டாமென்று கூறுவது அரசியல் மோசடியாகும். நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கு உரிமையான ஒன்றை, இன்னொரு பகுதி மக்களுக்குக் கொடுக்க வேண்டாம் என்று கூறுவதற்குக் காரணம் இனவாதமே அல்லாது வேறொன்றுமல்ல. அந்த இனவாதத்தைத் தோற்கடிக்க வேண்டும். ஆகவே, வடக்கில் உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு நாங்கள் கூறினோம். ஆனால், மாகாண சபைகள் மூலமாக மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுமென நாங்கள் கருதுவதாக அர்த்தமாகாது.

இதுவரை வடக்கில் நிலவிய அடக்குமுறை நிலைமையை, இராணுவ ஆட்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மாகாண சபை அமைவது ஜனநாயகத்திற்கான ஒரு படி என்று யாரேனும் சொல்லக் கூடும். என்றாலும், அரசாங்கம் செலுத்த வேண்டிய கொடுப்பனவாகவே நாங்கள் அதனை கருதுகிறோம்.. மக்களின் எந்த அடிப்படை பிரச்சினையும் மாகாண சபையின் ஊடாக தீர்க்கப்படப் போவதில்லை. ஜனநாயகம் கிடைக்காது. தெற்கின் ஏனைய பகுதிகளில் பல தசாப்தங்களாக அமைக்கப்பட்டிருந்த மாகாண சபைகளின் மூலம் இதனை அறிந்துக் கொள்ள முடியும். சில காலமாக தெற்கில் கடித்துச் சுவை பார்த்த அதே கசப்பான பதார்த்தத்தையே வடக்கிற்கும் தரப்போகிறார்கள். மாகாண சபை தேர்தலின் மூலம் மக்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படாதது மட்டுமல்ல, பிரச்சினைகள் அதிகரிக்கவும் இடமிருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்தக் கொண்டால், இந்த மாகான சபைக்கான பிரச்சாரங்களின் ஊடாக இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைப்பது பாரிய அழிவுக்கான ஆரம்பமேயாகும். அரசாங்கமும், தமிழர் விடுதலை கூட்டமைப்பும் போன்றே எதிர்க் கட்சியைச் சார்ந்த அநேகமான கட்சிகள் இனவாதத்தையே விதைக்கின்றன. தேர்தல் நடக்கும் பகுதிகளில் “நாம் சிங்களவர்” , “முஸ்லிம் பிரதிநித்துவத்தை அதிகரித்துக் கொள்ளல்”, “தமிழ் மக்களின் நம்பிக்கைகளுக்காக” போன்ற வாசகங்களுடனான பதாதைகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. இவர்கள் தங்களது வாக்கு எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்காக நல்லாட்சி, ஜனநாயகம் போன்றவற்றை மட்டுமல்ல சிங்களத் தனித்துவம், தமிழ்த் தனித்துவம், முஸ்லிம் தனித்துவத்தையும் சேர்த்து ஏலமிடுகிறார்கள். அதன் மூலம் வரப்பிரசாதங்களை பெறப்பார்க்கிறார்கள். நாங்கள் இந்த மோசடியில் தொடர்ந்தும் சிக்கிவிடுவோமா என்பது பிரச்சினை. மாகாண சபைகளின் ஊடாக அதிகாரம் பரவலாக்கப்படும், அதன் மூலம் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படும் என்று சிலர கூறுகிறார்கள். நவ தாரளமய முதலாளித்துவம் இங்கே செயல்படுகிறது. அது ஒருபோதும் மக்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கப்போவதில்லை. ஒடுக்கப்பட்ட மக்களிடம் அரச அதிகாரத்தை ஒப்படைக்காது. இதனால் ஆட்சியாளரின் கையில் அதிகமதிகமாக குவித்துக் கொள்வது மட்டுமே நடக்கும். இலாபத்தையும், அதிகாரத்தையுமே நவ தாராளமய முதலாளித்துவம் கேட்கிறது. இவற்றை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். மாகாண சபைகளைப் போன்றே நாடாளுமன்றமும் ஏனைய நிறுவனங்களும் ஒரு கண்கட்டி வித்தை காட்டும் இடமாகும். அது ஒடுக்கப்பட்டவரை ஏமாற்றும் ஒரு கருவி மாத்திரமே. அங்கே வடக்கென்றும் கிழக்கென்றும் பேதம் கிடையாது. தேர்தல்களின் மூலம் ஆட்சியாளரின் அதிகாரம் மக்களிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது. எங்களது வாழ்க்கையைப் பற்றி தீர்மானிக்கும் அதிகாரத்தை நாங்கள் கனவான்களிடம் ஒப்படைப்பது மட்டுமே நடக்கும். ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களது தலைவிதியை தங்கள் கையில் எடுப்பது குறித்து மட்டுமே சிந்திக்க வேண்டும். கலீல் ஜிப்ரான் என்ற அரேபிய கவிஞர் ஒரு முறை கூறினார், அடுத்த சில வருடங்களுக்க நாங்கள் யாரிடமிருந்து அடிவாங்க வேண்டுமென்பதை தீர்மானிப்பதே தேர்தல் என்று. அடுத்த சில வருடங்களுக்கு தம்மை ஆளப்போவது முதலாளித்துவ வர்க்கத்தின் எந்தப் பிரவினர் என்பதை தீர்மானிப்பதே தேர்தல் என கார்ல் மாக்ஸ் கூறுகிறார். ஏன் அப்படி நடக்கிறது? சிங்கள முதலாளித்துவத்திற்குப் பதிலாக தமிழ் முதலாளித்துவத்தின் கைகளுக்கு மாற்றுவதனால் ஜனநாயகம் கிடைக்க மாட்டாது.

இவ்வாறாக தேர்தல் பிரச்சாரத்திற்குள் மறைந்து மூட நம்பிக்கைகளை பரப்புவதோடு, இனவாதத்தை விதைப்பதனால் நாங்கள் எதிர்கொண்டுள்ள துன்பியல் மேலும் ஆழமாகும், 30 வருடகால யுத்தத்திற்கு நாங்கள் பலியாகியிருந்தோம். அந்த யுத்தத்திற்கு இனவாத- யுத்தம் விரும்வி ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, சிங்கள- தமிழ்- முஸ்லிம் ஒடுக்கப்பட்ட மக்களை இன அடிப்படையில் பிரித்த வடக்கின் இனவாதிகளும் பொறுப்புக் கூற வேண்டும். இந்தத் தேர்தலில் அதே பழைய நாடகமே அரஙகேறுகிறது. எந்த மொழி பேசினாலும், எவ்வகையான கலாச்சார மாற்றங்கள் இருந்தாலும், எல்லாவிதமான ஒடுக்கப்பட்ட மக்களினதும் ஒற்றுமையாலேயே அல்லாது விடுதலைக்கான பாதையை பெற்றுக் கொள்ள முடியாது. இலங்கையின் இடதுசாரிய இயக்கம் என்ற வகையிலும், முன்னிலை சோசலிஸக் கட்சி என்ற வகையிலும் நாம், உண்மையான விடுதலைக்கான பாதைக்காகவே முயற்சி செய்கிறோம். அதாவது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு. எல்லா விதமான இனவாதங்களையும் தோற்கடிப்பதற்கு. அதற்காக இடதுசாரியத்தை கட்டியெழுப்ப வேண்டும். மக்களது செயற்பாட்டை வளர்க்க வேண்டும். அதற்காக நாங்கள் கருத்தாடல் செய்வோம். அதற்காக செயற்படுவோம். இம்முறை தேர்தலில் என்ன செய்ய வேண்டும் என்ற விடயத்தோடு மட்டும் நின்று விடாது, எமது வாழ்க்கையின் எதிர்காலத்தைப் பற்றி, எதிர்கால சமுதாயத்தின் தலைவிதி பற்றி பேசுவோம். முன்னிலை சோ‘லிஸக் கட்சி அந்த உரையாடலுக்கு தயாராகவே உள்ளது. அதற்காக நாங்கள் மீண்டும் சந்திப்போம்.”

# இனவாத, மதவாத அழிவுகளை நிறுத்துவோம்

## முன்னிலை சோசலிச கட்சி

கிராண்ட்பாஸ் சம்பவம் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள முன்னிலை சோ‘லிஸக் கட்சி இனவாத, மதவாத அழிவுகளுக்கு முற்றுப்புள்ளியிட முன்வருமாறு அனைத்து மக்களிடமும் கேட்டுக் கொள்கிறது.

“ஆகஸ்ட் 10ம் திகதி கிராண்டபாஸ், சுவர்ண சைத்திய வீதியில் அமைந்துள்ள பள்ளிவாசலை சிலர் தாக்கியதன் பின்னர் ஏற்பட்டுள்ள இனவாத மற்றும் மதவாத மோதல் நிலைமைகள் தொடர்ப்பாக ஒட்டுமொத்த சமூகத்தினதும் கவனம் திரும்ப வேண்டுமென எண்ணுகிறோம். இந்த சம்பவத்தை அடிப்படையாக வைத்து சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் மோதல் நிலையொன்று உருவாகக்கூடிய ஆபத்து காணப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் அந்த மோதல் நிலைக்கான காரணங்களை தேடுவதை நிறுத்துவிட்டு அதற்கான அரசியல் மூலங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுபருவதே சாலச்சிறந்ததாகும் எனக் கருதுகிறோம்.

இந்த சம்பவம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், இப்படியான சம்பவங்கள் நடைபெறுவதற்கான நிலைமைகள் சில காலங்களாகவே உருவாக்கப்பட்டு வந்தமை அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். இதற்கு முன்பிருந்த அரசாங்கங்களைப் போன்றே இந்த அரசாங்கமும் இன்றைய நிலையில், நவ கன்சவேடிவ்வாதத்தோடு கைகோர்த்துக் கொண்டும் அனைத்து பிற்போக்குத்தனங்களை அதற்குள் உறிஞ்சிக் கொண்டும், ஆட்சி செய்வதற்கான தந்திரோபாயமாக இனவாதத்தையும், மதவாதத்தையும் பயன்படுத்தி அவற்றை நியாயப்படுத்திக் கொண்டும் நவ தாராளமய உபாயமார்க்கத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது. பல்வேறு இனவாத மதவாத குழுக்களுக்கு கிடைக்கும் அரசாங்கத்தின் அனுக்கிரகமும், அவற்றைப் போஈப்பதற்காக அரசாங்க பிரபலங்கள் வழங்கும் ஒத்துழைப்பும் யாரும் அறியாததல்ல. இந்த நிலையில் வெடிப்பொருட்கள் நிரப்பப்பட்ட களஞ்சியசாலையா இலங்கை இருப்பதோடு, ஒரு சிறிய தீப்பொறி அனைத்தையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடக் கூடிய ஆபத்து உருவாகியிருக்கிறது. அந்தத் தீப்பொறியின் பக்கம் மாத்திரம் எங்கள் விரல் நீளவில்லை, வெடிப்பொருட்களை குவித்த அனைவரின் பக்கமுமே நீளுகிறது. நாட்டில் மீண்டுமொரு அழிவு ஏற்படுமாயிருந்தால், மதவாதத்தையும் இனவாதத்தையும் போ‘ ‘த்த ஆட்சியாளர்கள் அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

30 வருடகாலமாக சிங்கள - தமிழ் மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்ட இனவாதம், அதன் பிரதிபலனாக நடந்த யுத்தம் நாட்டில் பாரிய அழிவை ஏற்படுத்தியது. அங்கே அனைத்து மனித தர்மங்களும் அழிந்தன. மீண்டும் அப்படியான ஒரு துன்பியல் நாட்டில் ஏற்படாத வண்ணம் செயற்பட வேண்டியது எங்கள் அனைவரினதும் பொறுப்பாகும். ஆகவே சம்பவத்தை உணர்ச்சிக் கொந்தளிப்போடு பார்க்காமல், சமூகத்தின் நண்மைக்காக பொறுப்புடன் செயற்பட வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும்”.

# சம்பூரில் 10000 பேருக்கு தொழில் வாய்ப்பாமே!

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) “சம்பூரில் 10,000 பேருக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கவிருக்கிறது, 10 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வில் மலர்ச்சி ஏற்படஉள்ளது” என்ற கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இந்தஅறிக்கை மகிந்தாவின் தற்போதைய செல்லப்பிள்ளையான கருணா இதை தேர்தல் காலத்துப்பிரச்சார நோக்கமாக வெளியிட்டிருந்தாலும், நிஜமும் அதுவே.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு தமிழ்க்கிராமமே சம்பூராகும். மூன்றுபக்கமும் கடலால் சூழப்பட்ட இப் பிரதேசம், யுத்தத்தின் போது புலிகள், இராணுவம் என்று இருதரப்பாலும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு, இறுதியில் சம்பூரில் விமானத்தாக்குதல் மேற்கொண்டபோது மக்கள் தங்கள் உடமைகளை விட்டுவிட்டு பக்கத்து கிராமங்களில் தஞ்சமடைந்தனர். இந்த மக்களின் காணிகளை சுவீகரித்த அரசு அதனை இந்தியா, பிரேசில், அவுஸ்ரேலிய கம்பனிகளுக்கு மில்லியன் கணக்கான டொலர்களுக்கு குத்தகைக்குவழங்கியுள்ளது. இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் காணிகளில் 97 சதுரக்கிலோமீற்றர் நிலப்பரப்பினை அரசாங்கம் இதற்காக ஒதுக்கியுள்ளதாக ரம்புக்வெல கூறியிருந்தார்.



இந்த நிலங்களில் நிலக்கரிசூளை, இரும்பு உருக்குச்சூளை, பாரிய இயந்திரங்களைப் பொருத்தக்கூடிய வலயமொன்றை மிே‘ல் பல்தேசிய நிறுவனம் அவுஸ்திரேலியா, பிரேசில் மற்றும் இலங்கை ஆகியநாடுகளுடன் இணைந்து உருவாக்குவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதை விட இந்தியா அனல் மின்நிலையம் ஒன்றை கட்டிவருகின்றது.

இதையெல்லாம் பார்க்கும் போது கருணா வெளியிட்ட 10,000 பேருக்கு தொழில் வாய்ப்புக்கிடைக்கும் என்பது சரியான கூற்றே. சிலவேளைகளில் 10,000க்கு மேற்பட்ட மக்களுக்கும் தொழில் வாய்ப்புக்கிடைக்கலாம். வேலை வாய்ப்பு கிடைப்பதால் மக்களின் பிரச்சனை தீர்ந்துவிடாது. அங்கு தான் பிரச்சனையே ஆரம்பமாகப்போகிறது. இந்த நிறுவனங்கள் எதுவும் மக்கள் நலன் கருதி எந்த முதலீட்டையும் செய்வதில்லை. அவர்களது முழு நோக்கமும் இலாபத்தினை அடிப்படையாகக்கொண்டதே. மற்றவர்களின் கஸ்ரதுன்பத்தையோ,வருத்தத்தையோ, இழப்புக்களையோ எள்ளளவும் அவர்கள் பொருட்படுத்தப்போவதில்லை. ஒருவனின் உழைப்பினை எப்படி, எதுவரை, சுரண்டலாமோ அவ்வளவு சுரண்டி இலாபத்தினை திரட்டுவதே இந்த பன்னாட்டு நிறுவனங்களின் நோக்கமாகும்.

எங்கள் மக்கள் அனுபவிக்கவேண்டிய வளங்களை வெளிநாடுகளுக்கு தாரைவார்த்து எங்கள் மக்களின் உழைப்பினை அவர்கள் சுரண்டிக் கொழுக்க, இந்த அரசோ அவர்களிடம் பெறும் குத்தகைப்பணத்தினை சுரட்டியெடுத்து தங்கள் கணக்குகளில் போட்டுவிட்டு, எல்லாச்சுமை களையும் மக்கள் தலையில் திணிப்பதே அரசின் வேலை முறையாகும். அந்தத்தொழிலாளிகளுக்கு எலும்புத்துண்டினைப்போட்டுவிட்டு அந்த மக்களை கூலி அடிமைகளாகத்தொடர்ந்து காலங்காலமாக தங்கள் பிடிக்குள் வைத்திருப்பதே அரசின் திட்டமாகும்.

இந்த மக்கள் தங்களுக்கு கிடைக்கும் வருமானத்தில் நாளாந்த மூன்றுநேர உணவினையே உண்ணமுடியாமல் சிரமப்படப்போவதும், தங்கள் குழந்தை களை கல்வி கற்பிக்கமுடியாது அவர்களையும் அங்குகூலிகளாக்கியும், இதனால் பாலியல் சீரழிவுகளையும் சந்திக்கவேண்டிய நிலமை ஏற்படப் போவதும் உறுதி. இது ““கருணா““ போன்றவர்களுக்கு தெரியாததல்ல. இந்த முதலீட்டில் இலாபமடையப்போவது இவர்போன்ற தரகர்களே ஒழிய மக்கள் அல்ல.

போராட்டம்

400/2, தலவத்துகொட பாதை, மாதிவெல, கோட்டே
தொலைபேசி/தெலைநகல்: 094-112799432
mpssrilanka@gmail.com
http://www.peoplesstruggle.com

# மௌனம் களையும் போராட்டம்

நான்கு தசாப்பதங்களுக்கு அதிகமான காலங்களை கடந்தும் முன் கொண்டு செல்லப்படும் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைக்கு எதிராக பல போராட்டங்கள் உள் நாட்டிலும் உலக அளவிலும் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன. தொடர்ச்சி யாக பல எதிர்ப்பு குரல்கள் முழங்கிக் கொண்டிருக்கின்றன. இப்படி நடந்த பல போராட்டங்களை நடத்திய இயக்கங்களின் செயற்பாட்டாளர்கள் போராட்டங்களுக்கு ஆதரவு குரல் எழுப்பி யவர்கள் என ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயினர். உண்மையில் சொல்லப் போனால் காணாமல் போக செய்யப்பட்டனர். இனம், மொழி, மதம் என வேறுபாடின்றி எதிர்ப்பு குரல் எழுப்பியவர்கள் கடத்தப்பட்டு காணாமல் போக செய்யப்பட்டனர். போரா ட்டங்களை மழுங்கடிக்க செய்வதே இதன் நோக்கம். இடையிடையே அரசி யல் எதிரிகளும் பயங்கரவாத சாயம் பூசப்பட்டு கடத்தப்பட்டனர். காணாமல் போனவர்கள் தொடர்பாக பதில் கூறுமாறு வலியுறுத்தி போராட்டங்களும் தொடர்ந்து வருகின்றன. தொய்வு நிலையிலிருந்த போராட்டங்கள் நவி பிள்ளையின் வருகையுடன் மீண்டும் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது. இந்த காலகட்டத்திலே தான் ஒரு சிறிய இடைவெளிக்கு பின் போராட்டம் இதழும் மீண்டும் வெளிவர ஆரம்பித்திருக்கின்றது. பத்திரிக்கை வெளியிட வேண்டும் என்ற காரணத்திற்காக வெளியிடப்படாமல் உழைக்கும் வர்க்கத்தின் போராட்டத்திற்கு குரல் கொடுக்க வேண்டிய அவசியத்தின் பேரில், உழைக்கும் மக்களின் போராட்டத்தில் கருத்தியியல் தாக்கங்களை செலுத்த வேண்டியதின் பேரில் தேவையின் காரணமாக, அழுத்தம் காரணமாக வெளிகொணரப்பட்டதே போராட்டம் இதழாகும். எமது பணியில் எம்மை திடமாக திடப்படுத்தி கொள்ளவும் சுயவிமர்சன படுத்தி சரியான பாதையை உறுதிபடுத்தவும் ஒரு சிறிய இடைவெளியை காலத்தின் கட்டாயம் கருதி கடக்க வேண்டிய தேவையை கடந்து மீண்டும் போராட்டத்தை எம் உறவுகளின் உருக்கமான போராட்டம் மௌனம் கலையும் நேரத்தில் நாமும் மௌனம் கலைந்திருக்கின்றோம். ஒடுக்குமுறை இருக்கும் வரை மக்கள் போராட்டங்கள் ஓய்ந்திடாது. அது வரை போராட்டத்தின் குரலும் ஓய்திடாது.

இவ்வருடக் கடைசியில் இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாடு நடைபெறவிருக்கிறது. அரசாங்கம் வீழ்ந்திருக்கும் படுகுழியிலிருந்து மீள்வதற்கு இந்த மாநாட்டையே நம்பிக்கொண்டிருக்கிறது. மாநாடு வெற்றிகரமாக நடந்தேறினால் சர்வதேச அரசியலுக்குள் ராஜதந்திர ரீதியிலான நற்பெயரை பெற்றுக்கொள்ள முடியும். இந்த நிலையில் முழு நாட்டையும் ஒற்றுமைப்படுத்தியிருப்பதாக உலகத்துக்கே பறைசாற்றிக்கொள்கிறது. நாட்டின் ஒட்டுமொத்த சனத்தொகையை எடுத்துக் கொண்டாலும், ஒட்டுமொத்த வாக்காளர்களை எடுத்துக் கொண்டாலும் குறிப்பிட்ட ஒரு சிலர் தான் அரசாங்கத்துக்கு சார்பாக செயல்படுகிறார்கள் இவர்களை வைத்து அரசாங்கம் மக்களுக்கு காட்ட முயற்சிக்கும் சித்திரம் போலியானது என்பதை மக்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் தனது முழுச் சக்தியையும் பிரயோகித்து அரச இயந்திரத்தை முடுக்கிவிட்டிருப்பதோடு, அடக்குமுறையை மேலும் விரிவாக்கிக் கொண்டிருக்கிறது. அவசர அவசரமாக வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதிலிருந்து, தயாசிரி போன்ற மெகா ஸ்டார்களை தமது கும்பலோடு சேர்த்துக்கொள்வது வரை எல்லாத் துறைகளிலும் இந்த அரச இயந்திரம் செயற்படுகிறது. இதற்கிடையில் பயங்கரத்தின் அரசியலும் வீறுநடை கொண்டிருக்கிறது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளைப் பார்க்கும்போது நவ தாராளமயத்தின் கோட்பாடுகள் இலங்கையில் எடுபடவில்லை என்பது தெரிகிறது. அது மட்டுமல்ல, நவ தாராளமயத்தின் அடிப்படை முகாம்களாக இருந்த ஐரோப்பிய நாடுகளும் அந்தக் கோட்பாட்டைக் கடைபிடிப்பதாகத் தெரியவில்லை. அது தனியாகப் பேச வேண்டிய விடயம். அந்த அனைத்து இடங்களிலும் இனவாதமும் ஏகாதிப த்தியவாதமும் தலைதூக்கிக்கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கம் முதலாளித்துவ நிலையிலிருந்தாலும் கூட இனவாதத்துக்கு எதிராக பேசுவதில்லை. ஜனநாயகத்தைப் பற்றி வாயே திறப்பதில்லை. ஆகக் குறைந்தது கொள்கையின் அடிப்படையிலாவது அரசியல் செய்ய வேண்டுமெனக் கூறும் மிலிந்த மொரகொட போன்றவர்களின் நிலையும் இதுதான். இந்த அரசாங்கத்தில் துமிந்த சில்வா, மர்வின் சில்வா போன்றவர்களின் அந்தஸ்தில்தான் அவரும் இருக்கிறார். தாராளமயக் கருத்துக்களை பாதுகாக்க வேண்டிய மாபெரும் கடமையை வாசு, டியூ, திஸ்ஸ போன்ற பழைய இடதுசாரிகள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தாராளமய பாத்திரத்தையே இடதுசாரியத்தின் பாத்திரமாக மக்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். தெற்கின் சிங்கள மக்கள் மத்தியில் நவ தாராளமயம் வேரூன்றி வரும் நிலையில் வடக்கின் தமிழ் சமூகத்திற்குள் என்ன நடந்துக் கொண்டிருக்கிறது?

# தெற்கின் தாராளமயமும் அடக்குமுறையும்

**வட மாகாண சபையை அமைப்பதினாலோ, விக்னேஸ்வரன் முதலமைச்சர் ஆவதாலோ குறைந்த பட்சம் இராணுவமய பிரச்சினையாவது தீர்க்கப்படுமென நாங்கள் எதிர் பார்க்கவில்லை. ரணிலின் வார்த்தையில் சொல்வதாய் இருந்தால், அவர் ஒரு “ரோயலிஸ்ட்”**



சுபர் ஸ்டார் அரசியல்தான் வடக்கிற்கும் உரிமையாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. வடமாகாணத்தில் அரசியல் செயல்பட்டுக் கொண்டிருப்பதை வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு களம் இறங்கியிருப்பதிலிருந்து தெரிகிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு நீண்ட வாதப் பிரதிவாதங்களுக்கும், கருத்து முரண்பாடுகளுக்கும் பின்னர் தனது முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரனைத் தெரிவு செய்துள்ளது. விக்னேஸ்வரன் எப்படிப்பட்டவர்? ரணிலின் வார்த்தையில் சொல்வதாய் இருந்தால், அவர் ஒரு “ரோயலி ஸ்ட்” கொழும்பில் வரப்பிரசாதம் பெற்ற குடும்பப் பின்னணியைக் கொண்டவர். உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர். ஆங்கிலத்தை தனது தாய் மொழியாகக் கருதுபவர். சுருக்கமாகச் சொல்வதாயிருந்தால் தமிழ் மேட்டுக்குடி தனது முதலமைச்சர் வேட்பாளராக, சிங்கள மேட்டுக் குடியினரோடு நெருக்கமாக உறவாடக் கூடிய ஒருவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. யுத்தத்தினால் மடிந்த முல்லைத்தீவு குடிமக்களுக்கு, பட்டினியால் வாடும் வன்னி மக்களுக்கு சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு, காணாமல்போன தனது உறவினர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்குமாறு குரலெழுப்பும் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிநிதித்துவம் செய்வதற்காக மீண்டும் ஒருமுறை அன்று செல்வநாயகம் பிரதிநிதித்துவம் செய்த ‘டை கோட்’ வர்க்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இறுதியாக ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களது உதிரத்திற்கும், கண்ணீருக்கும் பதில் சொல்ல வேண்டிய தலைமையை நோக்கி தமிழ் சமூகத்தின் செல்வாக்கு மிக்க அரசியல் பயணித்துக் கொண்டிருப்பதாகத் தெரி-யவில்லை. போலி சர்வதேசத்திற்கு பதில் கூறக் கூடிய, இந்தியாவுக்கு பதில் சொல்லக்கூடிய சிவில் சமூகத்திற்கு பதில் கூறக்கூடிய கருவாத்தோட்டத்திற்கு பதில் சொல்ல வேண்டிய தலைமைத்துவத்தின் பக்கமே பயணிக்கிறது. இந்த நிலைமையை வர்க்க ரீதியான கோட்பாட்டின் மூலம் புரிந்து கொள்வது குறித்து கடுமையான விவாதமொன்று தேவைப்பட்டிருக்கிறது. வடக்கின் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும் தமது பிரதிநிதித்துவத்தை உறுதி செய்துக் கொள்ளும் நோக்கத்திலும் தமிழ் சமூகத்திற்குள் தோன்றியிருக்கும் உத்வேகம் தற்போதைய அடக்குமுறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது ஓரளவு முன்னேற்றமாகத்தான் தெரிகிறது.. என்றாலும் வட மாகாணசபையை அமைப்பதினாலோ, விக்னேஸ்வரன் முதலமைச்சராவதாலோ குறைந்தளவு ராணுவமய பிர்ச்சினையாவது தீர்க்கப்படுமென நாங்கள் எதிர்பார்க்கவில்லை. விக்னேஸ்வரன் என்ற கதாபாத்திரம், சிங்கள - தமிழ்- முஸ்லிம் ஒடுக்கப்பட்ட மக்களை ஏனையவர்களுக்காக போராட்டக் களத்திற்கு அழைக்கும் அரசியல் மழுங்கடிக்கப்படும் பட்சத்தில் இதைவிட மாற்றமான பிரதிபலனை எதிர்பார்க்க முடியாது.

## பிள்ளையின் வருகை

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் செயலாளர் நவநீதம் பிள்ளை ஆகஸ்ட் 25ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ததோடு, ஆகஸ்ட் 31ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்தார். அவரின் வருகை அரசியலுக்கு வழங்கும் செய்தி என்ன? தமிழ் சமூகத்திலுள்ள பெரும்பாலானோர் அவருடைய வருகையை தம்மை மீட்பதற்கான வருகையாகவே கருதுகிறார்கள் என்பது ஊடகங்களின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது நன்றாகவே அறியக் கூடியதாக இருக்கிறது. யுத்தகாலத்தில் நடந்த மனிதநேயத்துக்கு எதிரான சில சம்பவங்கள் தொடர்பாக, அந்த படுபாதகச் செயல்களுக்காக தமக்கு நீதியைப் பெற்றுத்தருவார் என தமிழ் மக்கள் நம்பிக்கையோடு எதிர்பார்திருக்கிறார்கள். தற்போது தமிழ் சமூகம் முகம் கொடுத்திருக்கும் இன்னல்களுக்கு எதிராக அவர் தலையீடு செய்வார் என நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். வடமாகாணம் தொடர்ந்தும் இராணுவ கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. கடத்தப்படுவதிலிருந்து காணாமலாக்குவது கொலை செய்வது வரை பல செய்திகள் கிடைத்தவண்ணம் இருக்கின்றது. இவை அனைத்தையும் ஒருபுறம் வைத்துவிட்டு அரசாங்கம் வடக்கில் தேர்தலை நடத்தப் போகிறது. ஆனால் யாராலும் வாய்திறக்க முடியாது. தேர்தல் மேடை என்பது சில காலங்களுக்கு முன்னால் வானொலியில் ஒலிபர்ப்பாகிய ‘ ஒரு நிமிடம் மட்டுமே’ என்ற நிகழ்ச்சியைப் போன்றிருக்கிறது. தேர்தலைப் பற்றி பேச வேண்டும் ஆனால், “அரசியல்” என்ற வார்த்தையை தவிர்க்க வேண்டும். இதனால்தான், நவநீதம் பிள்ளை வந்து தங்களை இந்த நரகத்திலிருந்து மீட்டெடுப்பார் என்று தமிழ் மக்கள் எதிர்ப்பார்த்திருக்கிறார்கள்.

பிள்ளையின் வரவோடு சிங்கள சமூகம் வேறொரு கருத்தாடலை முன்வைத்திருக்கிறது. பொது மக்களின் வழக்காற்றில் சொல்வதாயிருந்தால், சிங்கள சமூகத்திற்கு நவநீதம் பிள்ளை ஒரு ‘அபாயக் குறி’. யுத்தத்தின் பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளாக அவருக்கிருந்த மனக்குழப்பத்துடனேயே இலங்கைக்கு வருகிறார். ராஜபக்ஷ சர்வாதிகாரத்திற்கு அவர் குறித்து முரண்பாடான அணுகுமுறைகளும், குரோத மனப்பான்மையும் உருவாவதற்குக் காரணம் இந்த குழப்பமான உறவுகளின் தன்மைதான். அவர் கடந்த காலம் பூராவும் மனித உரிமைகள் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு அழுத்தத்தைக் கொடுத்தவராகும். சிங்கள பொது மக்களைப் பொருத்தவரையில் குரோத மனப்பான்யுடன் அவரை வேறொரு கோணத்திலேயே பார்க்கிறார்கள். ஒருபுறம் நவநீதம் பிள்ளை என்ற பெயர் கூட சிங்கள மக்களுக்கு வேறொரு செய்தியைக் கூறுகிறது. அவருடைய தமிழ் உறவை பெரும்பான்மையான சிங்கள மக்கள் சந்தேகக் கண்கொண்டே பார்க்கிறார்கள். மறுபுறம் உலக அரசியல் அமைப்பொன்றின் பிரதிநிதியாகவே அவர் இங்கு வருகிறார். அதனால் உலக மட்டத்திலும்கூட ஓரளவு எதிர்ப்பும் இருக்கிறது. காலாந்திரமாக மேற்கத்திய நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் எதிராக நாட்டில் தோன்றிய எதிர்ப்பையம், அரபுநாடுகள் உட்பட உலகம் பூராவும் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆக்கிரமிப்புக் கொள்கை சம்பந்தமாக வெறுப்பையும் சேர்த்தே சிங்கள மக்கள் மத்தியில் அவருக்கு எதிர்ப்பு கிளம்பியிருக்கின்றது. ஆகவே, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் முன்னறிவித்தலாகவே அவரது இந்தப்பயணத்தை சிங்கள சமூகம் பார்க்கிறது,

# மத்திய மாகான தேர்தலில் மலையக தொழிற்சங்கங்கள்

# நெஞ்சில் உரமுமின்றி... நேர்மை திறனுமின்றி...

சிலவருடங்களுக்கு முன் மகாரஜா நிறுவனத்தின் சிங்கள தொலைக்காட்சி சேவையான சிரச தொலைக்காட்சியில் பிரவீனா என்ற பெயரில் இந்திய தொலைக்காட்சி நெடுந் தொடர் ஒன்று சிங்களத்தில் ஒலியூட்டப்பட்டு ஒளிபரப்பபட்டு வந்தது. அந்த நாடகத்தின் கதைப்படி நாயகி பிரவீனா அனுராத என்பவருடன் திருமணம் முடித்து வாழ்வார். சேர்ந்து வியாபாரமும் செய்வார்கள். அவர்களுக்கு சினேகா, பிரேம் என்று இரண்டு பிள்ளைகள் உண்டு. இவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்ப்பட்டு பிரிந்து விடுவார்கள். பின் பிரவீனா, பாலாஜி என்பவரை திருமணம் செய்வார். இவர்களுக்கு பிரியா என்று ஒரு மகள். அனுராதவிற்கு கமலினி என்பவருடன் குடும்ப வாழ்க்கை அமைத்து கருத்து முரண்பாட்டால் பிரிந்து, பின் சங்கீதா என்பவருடன் குடும்பம் நடத்துகின்றார். கமலினிக்கு ஏற்கனவே திருமணமாகி மகேஸ் என்று ஒரு மகன் இருக்கிறார். மகேஸ் அனுராத உடன் வசிக்கின்றான். இடையில் பிரவீனா பலாஜிக்கிடையில் கருத்து வேறுப்பாடு விவாகரத்துக்கு நீதிமன்றம் ஏறுகின்றார்கள். பலாஜிக்கும் பிரவீனாவிற்கு முன் ஒரு மனைவியும் பிள்ளைகளும் உண்டு. இதற்கிடையில் பிரவீ-னாவி ற்கு விபத்தொன்றில் அடிப்பட்டு "நடுவுல கொஞ்சம் பக்கத்தை காணோம்". அனுராதவுடன் வாழ்ந்தது மட்டும் தான் நினைவிலிருக்கிறது. குணமாக வேண்டுமென்றால் அனுராதவுடன் வாழ்ந்தாக வேண்டும். வாழ்கிறார்கள். மீண்டும் பழைய காதல் துளிர் விடுகிறது. இடையில் பலாஜியும் கமலினியும் டூயட் பாடுகின்றார்கள். அதற்குள் பிள்ளைகளும் காதலிக்கிறார்கள். பெற்றோர் ஐந்து பேர் ஏற்படுத்திய குழப்பம் போதாதென்று அவர்களின் பிள்ளைகள் நான்கு பேர் அவர்களின் துணைகள் என பெரிய பட்டாளமாக சேர்ந்து கும்மியடிக்கின்றார்கள். கடைசியில் யார் யார் யாரிற்கு சொந்தம் யார் யாரின் பிள்ளைகள் என்ன உறவுமுறைகள் என்று பெரிய குழப்பமே வந்து விடுகிறது.

இது போல தான் இன்றைய மலையக தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் நிலையும். மலையக தோட்ட தொழிலாளர்களை பிரதானமான கொண்ட அரசியலை குறிக்கவே மலையக அரசியல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் தொழிலாளர் நலன்களுக்காக அமைக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் பாராளுமன்ற பாதையை தேர்ந்தெடுத்து தம்மை கட்சிகளாக பதிவு செய்து கொண்டு தேர்தலில் போட்டியிட்டு பாரளுமன்ற உறுப்பினர்களை பெற்று கொண்டது. அரசியல் கட்சிகளாக பதிவு செய்தாலும் இன்றும் கோடிகோடியாய் கிடைக்கும் சந்தா பணத்தினை இலக்கு வைத்து இன்னும் தொழிற்சங்க அமைப்பிலே இவை இயங்குகின்றன. இன்று ஏகப்பட்ட தொழிற்சங்கங்கள் முளைத்திருக்கின்றது. ஒவ்வொரு அமைப்பிலிருந்தும் வெளியேறுபவர்கள் புதிதுபுதிதாக தொழிற்சங்கங்களை அமைத்து கொள்கின்றார்கள். ஒட்டு மொத்தமாக இந்த அமைப்புக்களையும் அதன் செயற்பாட்டாளர்களையும் பார்த்தோம் என்றால் முதல் சொன்ன பிரவீனா நாடகம் பரவாயில்லை என்று எண்ணத்தோன்றும்.

மலையகத்தினை பொறுத்தவரை ஆரம்பகால பிரதான தொழிற்சங்கங்கள் செங்கொடி சங்கமும், இலங்கை தொழிலாளர் காங்கிரசும் ஆகும். செங்கொடி சங்கம் இடதுசாரி கொள்கையுடன் இயங்கியது. காலபோக்கில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனி பெரும் சக்தியாக வளர்ந்தது. இதிலிருந்து பிரிந்து சென்றவர் பிரிந்து சென்றவர்களில் இருந்து பிரிந்து சென்றவர்கள் என ஏக பட்ட தொழிற்சங்கங்கள் வந்துவிட்டன. தொழிற்சங்கங்கள் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிணக்குகளையும் தமது உரிமைகளையும் வென்றெடுப்பதற்காக உருவாக்கப்பட்டவை. பலம் மிக்க அதிகாரவர்த்தினை எதிர்த்து நிற்கும் வலுவை ஏற்படுத்தி கொள்ள உருவாக்கப்பட்டவையே தொழிற்சங்கங்கள் ஆகும். இன்று மலையகத்தின் தொழிற்சங்கள் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக போராடுவதினை விடுத்து அபிவிருத்தி என்ற மாய அரசியலிற்குள் தொழிலாளர்களை சிக்க வைத்துள்ளனர். பாதைகளை அமைத்து கூரைதகடுகளை வழங்கி கோயில்களை புனரமைத்து மலையகம் எழுகிறது எனக்காட்டி தொழிலாளர்களின் வாக்குகளை பெற்று பதவி மற்றும் அதிகார சுகபோகங்களை அனுபவித்ததினை விட இவர்கள் பெரிதாக சாதித்தது ஒன்றுமில்லை. நூற்று கணக்கான தொழிற்ச்சங்கங்கள். பிரிந்தவர்கள் அனைவரும் கருத்து முரண்பாடுகளையே காரணமாக சொன்னார்கள். அப்படியானால் நூற்றுக்கணக்கான கொள்கைகள் அருவிகள் போல் உலவுகின்றனவா என்ன?

**"அண்மையில் மலையகத்தில் புதிய பாதைகள் நோக்கிய வெகுவிரைவில் தோழர்களே"** என ஒருவர் தொடர்ந்து தன்னை அறிமுகப்படுத்தி கொண்டிருந்தார். யாராடா இந்த லெனின் என்று தேடிய போது தான் அண்மையில் பத்தோடு பதினொன்றாக ஆரம்பிக்கப்பட்ட புதிய தொழிலாளர் முன்னனியின் தலைவரும் மனோகணேசன் அவர்களின் புதிய சனநாயக முன்னனியின் கலைக்கப்பட்ட மத்திய மாகான சபையின் உறுப்பினருமான முரளிரகுநாதன் என்பவர் என தெரிய வந்தது. இவரிடம் மலையக தொழிலாளிர்களின் விடுதலைக்கான, முதலாளிவர்க்கத்தின் சுரண்டலிலிருந்து தொழிலாளர்களை மீட்பதற்கான புதிய பாதை என்னவென்று கேட்டதற்கு அவர் அளித்த பதில் மலையக தொழிற்சங்கங்களின் இன்றைய நிலையை புடம் போட்டு காட்டுகிறது. அவருடனான உரையாடல் அவசியம் கருதி இங்கு பதிவு செய்யப்படுகின்றது.

***புதிதாக நீங்கள் செய்ய போவதென்ன? தொழிலாளர் விடுதலைக்காக நீங்கள் தெரிவு செய்யும் பாதை என்ன ?***

*இரண்டு வருடம் பொறுத்திருங்கள்.*

***அப்படியானால் தற்போது பதில் இல்லையா உங்களிடம்? தொழி-லாளர்களை அடிமைபடுத்தி சுரண்டிவரும் சமூக முறையிலிருந்து தொழிலாளர்களை மீட்கும் திட்டம் இல்லையா உங்களிடம்?***

*நீங்கள் யாருக்கு வக்காளம். உங்கள் வார்த்தைகளை கவ-னமாக பாவியுங்கள். நீங்கள் சுரண்டி வரும் தலைமைக்கு ஆதரவானவர் போலிருக்கு. நீங்கள் சமூக விரோதி போலிருக்கு. நல்ல மனிதர்கள் உங்கள் கண்களுக்கு தெரிவதில்லை. காட்டி கொடுக்கும் பேர்வழி நீங்கள்.*

***ஐயா உங்களிடம் கொள்கையை தானே கேட்டேன். ஏன் அவதாறு கதைக்கின்றீர்கள். இதுவா உங்கள் புதிய வழி கொள்கையை கூறும் நேர்மையும் நெஞ்சுறுதியும் இல்லையா? முதலாளிவர்க்கம் தன் மூலதனத்தினை பெருக்கிட தொழிலாளர்களின் உழைப்பினை சுரண்டி வருகிறது. இதிலிருந்து தொழிலாளர்களை மீட்க வெற்று கோசங்களை தாண்டி உங்களிடம் திட்டங்கள் இருக்கின்றனவா?***

*இனிவரும் உங்கள் கருத்துக்களை கருத்திலெடுக்க மாட்டேன்.*

***மக்களின் கேள்விக்கு பதிலில்லையா உங்களிடம் அதன் காரண-மாக தான் ஒழிந்து கொள்வேன் என்கின்றீர்களா?***

*துரோகிகளுக்கும் இரட்டை வேட அரசியல் வேடதாரி-களுக்கும் எதற்கு பதில். நீங்கள் இரட்டை வேட அரசியல் தலைமைகளின் அடிவருடி*

***ஐயா கொள்கையை கேட்டால் துரோகி என்கின்றீர்களே?***

*உண்மையான சமூகசெயலனுக்கு தான் எனது பதில் துரோ-ாகிகளுக்கு எனது பதில் இல்லை. அரசிடம் பணம் பெற்று இரட்டைவேடம் போடுபவர்களுக்கு பதில் கூறமாட்டேன்.*

***நீங்கள் நீங்கள் என்னை தவறாக விளங்கி வழமையான உங்கள் சேறடிப்பை நடத்துகின்றீர்கள் என நினைக்கின்றேன்.. நான் ஒரு மார்க்சியவாதி முன்னிலை சோசலிச கட்சியை சேர்ந்தவன். முதலாளிதுவத்திற்கு எதிரான புரட்சியவாதிகள் புரிகிறதா.. அரசிடம் பணம்பெற்றேன் என்கின்றீர்கள் எந்த அரசிடம். அரசிற்கும் அரசாங்கத்திற்கும் வித்தியாசம் தெரியவில்லை உங்களுக்கு பொறுப்பில்லாமல் அவதாறு கதைக்கின்றீர்களே இது தான் உங்கள் சமூக அக்கறையா?***

*பதில் இல்லை*

***சரி சொல்ல கொள்கை தெரியா விட்டால். இல்லா விட்டால் விடுங்கள்... இருந்திருந்தால் சொல்லியிருப்பீர்கள் தானே... உங்கள் அமைப்பு சமூக சனநாயக கொள்கையை கொண்டதாக கூறிக்கொள்கிறது. இதையாவது தெரிந்து கொள்ளுங்கள்... இந்த கொள்கையில் புதிய பாதை உருவாக்கும் தத்துவத்தை நீங்கள் தான் உருவாக்கிட உலகிற்கு சொல்லிக்கொடுக்க வேண்டும்***


*இதற்கும் பதில் இல்லை*

இதுதான் மலையக அரசியல் கட்சிகளினதும் தொழிற்சங்கங்களினதும் நிலைமை. ஒன்றில் தொழிலாளர் பிரச்சினையின் பொருளாதார, வர்க்க காரணங்களை மறைத்து பிரச்சினைகளை உணர்ச்சி மயமாக்கி இன்னும் பிற தில்லுமுல்லுகளையும் செய்து பதவிகளை பெற்று சுகபோகங்களை அனுபவித்துகொண்டு அவற்றில் கொஞ்சத்தை மக்களுக்கு கிள்ளியெறிந்து கொண்டு அரசியல் நடத்துவது, அல்லது உண்மையாகவே தொழிலாளர் விடுதலை குறித்து ஆவா இருந்தாலும் அதற்கான விஞ்ஞான பூர்வமான வழி தெரியாமல் ஏற்கனவே போடப்பட்ட பாதையில் உருவாக்கப்பட்ட அரசியல் பண்பாட்டில் வழி தெரியாமல் பயணிப்பது என்ற நிலையிலேயே மலையக தொழிற்சங்கவாதிகளும் அரசியல்வாதிகளும் இருக்கின்றார்கள். இப்பந்தியில் உரையாடல் இடமபெற்ற ஐயா முரளி ரகுநாதன் அவர்கள் இதில் எந்த பிரிவில் அடங்குவார் என்று தெரியவில்லை. ஆனால் நிச்சயமாக இரண்டில் ஒன்றிற்குள் தான் அவரும் இருக்கின்றார்.













தொழிற்ச்சங்கங்களாகவும் கட்சிகளாகவும் இயங்கும் மலையக அமைப்புக்கள் தோட்டதொழிலாளர்களுடன் மலையகத்திலே உருவாகியிருக்கும் நடுத்தர வர்க்க தமிழர்கள் மத்தியிலும் இன்று செயற்படுகின்றன. இந்த நிலையில் தொழிற்சங்க அரசியல் தொழிலாளர்களுக்கு இது வரை விடுதலையை பெற்று தரும் பாதையை கூட காட்டவில்லை.

தொழிலாளர்களின் பிரதான பிரச்சினை பொருளாதார பிரச்சினையாகும். உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை. தொழிலாளர்கள் தொடர்ந்து அடிமையாகவும் உழைப்பை விற்க வேண்டிய கட்டாயத்திற்குற்பட்டவனாகவும் தொடர்ந்து முதலாளிகளுக்கு உழைத்து கொடுப்பவனாகவும் இருக்க வேண்டும் என திட்டமிட்ட வகையில் ஒரு சமூக வாழ்க்கை முறைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். தனியார் கம்பனிகளில் வேலை செய்பவர்களுக்கு அவர்கள் தங்கி வேலைசெய்வதற்காக விடுதிகள் வழங்கப்படும். விடுதியில் தங்கி வேலை செய்பவர்கள் வேலையை கைவிடும் போது விடுதியை விட்டு வெளியேறி விட வேண்டும். கிட்டதட்ட தோட்ட தொழிலாளர்களின் நிலைமையும் இது தான். லயன்கள் என்ற பெயரில் விடுதி வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இங்கு வேலைக்காலம் முடிந்த பின் வெளியேறுவதற்கு பதிலாக தன் பிள்ளைகளை வேலைக்கு அனுப்ப வேண்டும். இது தொடர்ச்சியாக நடைபெற வேண்டுமென்றால் தொடர்ச்சியான வறுமையிலும் தங்கி வாழும் நிலையிலும் தொழிலாளர்கள் வாழ வைக்கப்படல் வேண்டும். அதன் காரணமாக தான் தொழிலாளர்கள் வறுமையிலும் நிலவுரிமை அற்றவர்களாகவும் வாழ வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இதற்காக சாதாரண சூழலிலிருந்து வேறுப்பட்ட பெருந் தோட்டங்கள் எனும் கட்டமைப்பிற்குள் வாழ வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த கட்டமைப்பு இன்னும் பல சமூக பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது.

எனவே தொழிலாளர்களுக்கு இரண்டு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். ஒன்று தொழில் உரிமைகளை வென்றெடுப்பதற்கான பொருளாதார போராட்டங்களை நடத்துவது. மற்றது நிலஉரித்துடைய மனிதனாக வாழும் உரிமையை வென்றெடுப்பதற்கான அரசியல் போராட்டங்களை நடத்துவது.

**(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)**

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்க முற்று முழுதாக சிங்களவரைக் கொண்டு உருவான இலங்கை இராணுவம் தான், சிங்கள மக்கள் போராடும் போது பாய்ந்து குதறுகின்றது. தமிழ் மக்கள் தங்கள் உரிமையைக் கேட்ட போது ஒடுக்கிய அதே இராணுவம் தான், குடிக்க சுத்தமான நீரை கேட்ட போது ஒடுக்கின்றது. மக்கள் தங்கள் உரிமைகளை கோரி போராடும் போது, ஒடுக்கும் கைக் கூலி இராணுவம் தான் இலங்கை இராணுவம்.

**குடிக்க சுத்தமான குடிநீர் கேட்ட போராடிய மக்கள் மீது, பாய்ந்து குதறியது அரச பயங்கரவாதம். மூன்று பேர் கொல்லப்பட, 50 மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பொது மக்களின் சொத்துகள் சேதமாக்கப்பட்டது. இராணுவ வன்முறைக்கு அஞ்சி தேவலாயத்தில் புகலிடம் பெற்ற மக்களை, இராணுவம் அடித்து துவைத்துள்ளது. சுதந்திரமாக தகவல்களை சேகரிக்கவும், தெரிவிக்கவும் முடியாத வண்ணம், ஊடகங்கள் மிரட்டப்படுகின்றன. அரச பயங்கரவரத்தை மூடி மறைக்கும் வண்ணம், அனைத்தையும் கண்காணிக்கின்றது. விசாரணையின் பெயரில் இராணுவ விசாரணைக்கு உத்தரவுவிட்டு நாடகமாடுகின்றது. விசாரணை பெயரில், மக்களையும் ஊடகவியளாளர்களையும் தனது இராணுவ முகாமுக்கு வருமாறு மிரட்டி வருகின்றது. வெலிவேரியாவுக்கு இராணுவத்தை யார் வரவழைத்தது, யார் துப்பாக்கி பிரயோகத்துக்கு உத்தரவை வழங்கியது என்று எதையும் கண்டறிய முடியாதுள்ளதாக கூறுகின்ற பாசிச கோமாளிகளின் கேலிக் கூத்துகளின் பின்னணியில் தான், விசாரணைகள் அனைத்தும் அரங்கேற்றப்படுகின்றது.**

# இராணுவ ஆட்சியும் வெலிவேரிய படுகொலையும்



இன்று சிவில் சமூக கட்டமைப்புக்கு பதில் அனைத்தையும் இராணுவ மயமாக்கிவரும் அரச பயங்கரவாதம் மூலம், குடும்ப சர்வாதிகாரமாக தன்னை முன்னிறுத்துகின்றது. யார் இராணுவத்துக்கு உத்தரவிட்டது என்பது கண்டறிய முடியாத விவகாரமாக மாறிவிடும் போது, யார் இதன் பின்னணியி ல் உள்ளனர் என்பது வெட்ட வெளிச்சமா கிவிடுகின்றது.

இந்த பின்புலத்தில் மக்கள் அரசிடம் கோரியது "தமிழீழத்தை" அல்ல. தங்கள் சுற்றுச் சூழலை பாதுகாப்பதன் மூலம், உடலுக்கு ஆரோக்கியமான குடிக்கும் நீரை உத்தரவாதப்படுத்தி தரும்படி தம்மை ஆள்வோரிடம் கோரினர்.

கொழும்பில் இருந்து 20 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கம்பஹா மாவட்டத்தில் இருந்த கையுறை தயாரிக்கும் தொழி ற்சாலையின் கழிவு நீர், நிலத்தடி நீரை மாசுபடுத்தி வந்தது. இதனால் 15க்கு மேற்பட்ட கிராம மக்களின் குடிநீர் நஞ்சா கிய நிலையில், அரச அதிகாரிகளிடம் முறையிட்டனர். நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். அரசுடன் நடந்த உயர்மட்ட பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து தோல்வி பெற்ற நிலையில், வெலிவெரியாவில் ஆயி ரக்கணக்கில் திரண்ட மக்கள் ஜனநாயக வழியில் வீதியில் இறங்கினர். தங்கள் அடிப்படை தேவையான குடிநீரை மக்கள் கோரியதை, மக்கள் விரோத அரசால் பொறுத்துக் கொள்ள முடியாது பன்னாட்டு தரகு நிறுவனத்துக்காக பாய்ந்து குதறியது.

இலங்கையில் மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனமான ஹேலீஸ் குழுமத்தைச் சேர்ந்த டிப்ட் புராடக்ட்ஸ் என்ற கையுறை தயா ரிக்கும் தொழிற்சாலைக்காகவே, மக்கள் மேல் அரச பயங்கரவாதத்தை ஏவியது. இந்திய முதலீட்டாளர்களான பாலாஜி ஷி ப்பிங் இன் முக்கிய பங்குதார நிறுவன மும் கூட. இந்த பின்னணியில் ஆளும் வர்க்கங்களும் ஆளும் தரப்புகளுக்கும் பெயரவிலான இருந்த இடைவெளி அருகி வரும் பாசிசப் பின்னணியில், அரச பயங்கரவாதம் மிகக் குரூரமான வடிவத்தை பெற்றுவருவதை வெலிவெரியா சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் மக்கள் தங்கள் உரிமையைக் கேட்ட போது ஒடுக்கிய அதே இராணுவம் தான், குடிக்க சுத்தமான நீரை கேட்ட போது ஒடுக்கின்றது. மக்கள் தங்கள் உரிமை களை கோரி போராடும் போது, ஒடுக்கும் கைக் கூலி இராணுவம் தான் இலங்கை இராணுவம்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்க முற்றுமுழுதாக சிங்களவரைக் கொண்டு உருவான இலங்கை இராணுவம் தான், சிங்கள மக்கள் போராடும் போது பாய்ந்து குதறுகின்றது. முள்ளிவாய்கால் போன்ற அதே வன்முறையையும், அதே படு கொலைகளையும் அரங்கேற்றி அதை இன்று மூடிமறைக்க முனைகின்றது. வெலிவேரிய படுகொலை, "இராணுவம்" பற்றிய பொது விம்பங்களையே தகர்த்து இருக்கின்றது.

தமிழர்கள் "சிங்கள இராணுவமாகவும்" சிங்களவர்கள் "தங்களுடைய இராணுவ மாகவும்" கற்பித்திருந்த பொது நம்பி க்கைகளையும், அனுமானங்களையும், முடிவுகளையும் தகர்த்து இருக்கின்றது. இலங்கை இராணுவத்தை இனி இலங்கை மக்கள் இன ரீதியாக அணுக முடியாது என்பதையும், இலங்கை அனைத்து மக்களும் உணரும் வண்ணம் வெலிவெரியா சம்பவம் உணர்த்தி நிற்கின்றது.

அரச பயங்கரவாதம் என்ற வெடி குண்டு சிங்கள அரசு, "சிங்கள இராணுவமும் என்ற புனித விம்பங்களை தகர்த்து இருக்கின்றது. சிங்கள இராணுவமாக இனவாதம் மூலம் மையப்படுத்திய எதிர்ப்பு மற்றும் ஆதரவு அரசியலை வெலிவெரியா படுகொலை முடிவுக்கு கொண்டு வந்திருக்கின்றது.


மூலதனத்தின் சுரண்டல் செயற்பாட்டை பாதுகாப்பதே அரசு என்பதை, இனம் காட்டி இருக்கின்றது. அரசு கூறும் நாட்டின் அபிவிருத்தி. மக்களின் வேலை வாய்ப்பு என்பது எல்லாம் மூலதனத்தின் சுரண்டலே. அரசு மக்களின் நலனுக்காக அல்ல, மூலதன த்தின் நலனுக்காகவே செயற்படுகின்றது என்பதை, அரச பயங்கரவாதம் மூலம் மக்களுக்கு உணர வைத்து இருக்கின்றது.

சுற்றுச் சூழலை அழித்து, நிலத்தடி நீரை நஞ்சாக்கும் செயலை ஆதரித்த அரசின் செயல் தேசபக்த செயலா என்று கேள்வி யை இன்று எழுப்பி இருக்கின்றது. இதை எதிர்த்த மக்களின் செயற்பாடு தான், தேசபக்த செயற்பாடு என்பதை மட்டுமின்றி, அரசுக்கு எதிரான தேச பக்த போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியத்தை மக்களுக்கு உணர்த்தி இருக்கின்றது. அரசு யாருடன் நிற்கின்றது என்ற உண்மையை, சிங்கள மக்கள் மேலான தனது அரச பயங்கரவாதம் மூலம் போட்டு உடைத் திருக்கின்றது. இதுவரை தமிழ்மக்களை ஒடுக்கும் தேசபக்த சக்தியாக கட்டமைத்த போலியான பேரினவாத தேசியவாதத்தை, அனைவரும் இனம் காண வைத்திருகின்றது. அரசின் தேசபக்தி என்பது சுரண்ட உதவு வதும், சுரண்டலை பாதுகாப்பதும் தான்.

நீண்ட காலமாக மக்களை மதத்தின் பெயராலும், இனத்தின் பெயரால் பிரித்து வைத்திருந்தவர்கள் இவர்கள் தான். இதன் மூலம் மக்களை எதிரியாகவும், நண்ப னாகவும் சித்தரித்த, தங்கள் மக்கள் விரோத போக்குகளை இனித் தொடர முடியாது. சிங்கள மக்களுக்கு தாங்கள் யார் என்பதை, அரச பயங்கரவாதம் மூலம் வலாற்றுப் பாடத்தைக் கற்பித்து கொடு த்து இருக்கின்றனர்.

அபிவிருத்தி என்பது மக்களை கொள்ளை இடுவதற்கே, மக்களை வாழ வைப்பதற் கல்ல. கொள்ளையிடுபவனுக்கு சுற்றுச் சூழலையிட்டு அக்கறைப்படுதில்லை. மக்க ளின் வாழ்வையிட்டு கவலைப்படுவதில்லை. தனது பணப்பையை பெருக்கிக் கொள்ளும் சுரண்டலில் மட்டும் தான் அது அக்கறை கொண்டது. கூலிக்கு மராடிக்கும் இராணுவம் போல், அரசு கூட முதலாளியின் எடுபிடி.

கூலி இராணுவத்தை பௌத்த சிங்கள தேசபக்த இராணுவமாக காட்டியது போல், சுரண்டலை மக்களுக்கான வேலை வாய்ப்பாகவும் நாட்டின் அபிவிருத்தியாக காட்டி மோசடி செய்ததை, வெலிவேரியா மக்கள் மேலான அரச பயங்கரவாதம் மூலம் நிர் வாணமாக்கி இருக்கின்றது. மனிதனின் போராட்டமே வாழ்வாகிவிட்ட நிலையில், எந்த உண்மைகளையும் புதைக்க முடியாது. மக்களைச் சுரண்டி வாழும் வர்க்க அமைப்பில், மக்கள் ஒடுக்கப்படுவதும், சுரண்டப்படுவதை பாதுகாப்பதே அரசு என்பதும், இதற்கு எதிராக போராடுவதே மக்களின் வாழ்வாகிவிட்டது. இதைத்தான் வெலிவேரியா மக்கள், அனைத்து மக்களுக்கும் உணர்த்தி நிற்கின்றனர்.



# அரச மரத்தடி பள்ளிவாசல்



தாக்குதலிற்குள்ளான பள்ளிவாசலும் விசாரனை நடத்தும் பொலிசாரும்



சம்பவ இடத்தில் தடி பொல்லுகளுடன் குழுமியிருப்பவர்களும் கடமைகளில் ஈடுபட்டிருக்கும் பொலிசாரும் இராணுவத்தினரும்

பாருங்கள்! எங்களுடைய மக்கள் எவ்வளவு நல்லிணக்கத்தோடு செயல்படுகிறார்கள்! பள்ளிவாசலுக்காக அரச மரத்தையே வெட்டிச்சாய்த்து விட்டார்களே! சிலர் அவ்வாறு சொல்லும் போது, மேலும் சிலர் இப்படியும் சொல்கிறார்கள், துலுக்கர்களுடைய பள்ளவாசலுக்காக அரச மரத்தை வெட்டி பெரிய அழிவைத் தேடிக் கொண்டு விட்டார்கள்! பெரிய அநியாயம்! இரண்டு பக்கத்தாலும் இப்படிக் கதைக்கும் போது, உண்மையிலேயே அரச மரத்தை ஏன் வெட்டினார்கள் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இந்த கிரான்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவத்தில் விடை காணப்படாத இன்னொரு பக்கமும் இருக்கிறது. அதாவது, பள்ளிவாசலைத் தாக்கியது யார்? என்பதை பொலிஸாரால் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. எந்த பௌத்த அடிப்படைவாத குழுவும் தாக்குதலுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வரவுமில்லை. அதற்குப் பதிலாக பௌத்தர்களின் சார்பில் சமாதானப்படுத்துவதற்காக சம்பிக ரணவக என்ற அடிப்படைவாதி முன்வந்தார். சம்பிக ரணவக என்பவர் நல்லிணக்கத்தை விரும்பும் ஒருவரா? இல்லை. சம்பிக ரணவக என்பவர் இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் நல்லிணக்கத்தை சீர்குலைப்பதற்கு அயராது பாடுபடும் மகான். ஏனைய மதங்களின் மீது  வெறுப்பைக் கக்குபவர். அப்படியானால் சம்பிக ரணவக சமாதானம் பேசுவதற்காக அவ்விடத்துக்கு ஏன் வந்தார்?

ஏற்கனவே நடந்த முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது நடந்து கொண்ட விதத்திலேயே கிரான்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்கப்பட்ட அன்றும் பொலிஸார் நடந்து கொண்டார்கள். சம்பவத்தை மூடி மறைக்க முயற்சித்தார்கள். ஆனால், நீரில் மிதக்கும் இறப்பர் பந்தைப் போன்று அமிழ்த்த முடியவில்லை. மிகக் குறுகிய காலத்துக்குள் சர்வதேச ஊடகங்களுக்கு இந்தச் சம்பவம் சென்று விட்டது. அமெரிக்கா உள்ளிட்ட மூன்று மேற்கத்திய நாடுகளின் இலங்கைக்கான தூதுவராலயங்கள் சம்பவத்தை உடனடியாகவே கண்டித்தன. பீபீசீ, அல்ஜஸீரா போன்ற உலகின் பிரபலமான ஊடகங்களில் புகைப்படங்களுடன் சம்பவம் காட்டப்பட்டது. இந்த நிலையில் அப்படியான ஒரு சம்பவம் நடக்காததைப் போன்று அரசாங்கம் செயற்பட முயற்சித்தாலும், சர்வதேச ஊடகங்கள் காரணமாக அந்த முயற்சி கைகூடவில்லை.

வெலிவேரிய சம்பவத்தைப் போன்றே இந்தச் சம்பவத்தின் போதும் நாட்டின் தலைவர் மௌனமாகவே இருந்தார். வெலிவேரிய சம்பவத்தில் ஜனாதிபதி மௌனமாக இருந்தமைக்கு காரணம் இருக்கலாம். ஆனால், கிரான்ட்பாஸ் சம்பவத்தின் போது மௌனமாக இருப்பதற்கு காரணம் என்ன? இதனால், வெலிவேரிய சம்பவத்துக்கு பொறுப்பு கூற வேண்டியவர்களே கிரான்ட்பாஸ் சம்பவத்துக்கும் பொறுப்புக் கூற வேண்டியவர்களா என்ற சந்தேகம் எழுவது இயல்பல்லவா!

இப்போது சம்பவத்தை சமாதானமாக முடித்துக்கொள்ளாவிட்டால் முஸ்லிம்கள் கோபாவேசமடையலாம். அது அரசாங்கத்தை மேலும் இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிடும். ஐ.நா. மனித உரிமை செயலாளர் இலங்கைக்கு வரவுள்ள நிலையில், பொதுநலவாய சபையின் தலைமைப் பதவிக்காக ஜனாதிபதி கனவு கண்டு கொண்டிருக்கும் நிலையில், இந்த களேபரங்களுக்கு மத்தியில் முஸ்லிம்களும் தூண்டப்பட்டால் பிரச்சினைகள் அதிகமாகிவிடும் என்பதை உணர்ந்த அரசாங்கம், மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரித்து தீர்வு காண்பதற்காக முஸ்லிம்களின் சார்பாக பய்ஸர் முஸ்தபாவையும் பௌத்தர்களின் சார்ப்பில் சம்பிக ரணவகவையும் அனுப்பி வைத்தது. எடுக்கப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கை என்னவென்றால், வணக்க வழிபாடுகளை செய்வதற்கு புதிய பள்ளிவாசலில் இடமளிப்பதுதான். ஆனால், அதற்கு குறுக்காக ஒரு தடை விழுந்தது.

அதாவது புதிய பள்ளிவாசலுக்கு அருகாமையில் இருந்த விகாரை இதற்கு தடையாக இருந்தது. பள்ளிவாசல் விகாரைக்குப் பக்கத்தில் வந்தால் என்ன நடக்கும் என்பது தலைவர்களுகக் நன்றாகவே தெரியும். பள்ளிவாசல் அவ்விடத்துக்கு வந்தால், சுற்றியுள்ள காணிகளின் விலை மேலும் அதிகரித்துவிடும். ஏனென்றால் பள்ளிவாசலுக்கு அண்மித்து தமது வாசஸ்தலங்களை அமைத்துக் கொள்ள முஸ்லிம்கள் விரும்புவார்கள். அதற்குக் காரணம் ஐந்து வேளை தொழுகைக்காக விரைவில் பள்ளிவாசலுக்கு சென்றுவிட முடியும். இவ்வாறு காணி விலை அதிகரிக்கும் போது சிங்கள பௌத்த குடியிருப்பாளர்கள் தமது காணிகளை அதிக விலைக்கு விற்றுவிட்டு அதில் ஒரு பகுதியை வட்டி பெறும் நோக்கத்தில் வங்கியில் வைப்பிலிட்டுவிட்டு, எஞ்சிய பணத்தைக் கொண்டு சன நெரிசல் குறைந்த பிரதேசங்களில் குறைந்த விலைக்கு காணிகள் வாங்கி அங்கு குடிபெயர்ந்து விடுவார்கள். இப்படி நடந்தால். சிங்கள பௌத்த மக்கள் அங்கிருந்து வெளியேறும் பட்சத்தில் பிக்குகளுக்கு கிடைக்க வேண்டிய அன்னதானம் அம்போ! பௌத்தர்களின் முக்கிய நாட்களில் மருந்துக்குக் கூட ஒரு சிங்கள பௌத்தரை அப்பகுதியில் தேடிக்கொள்ள முடியாது போகும்.

சம்பிக ரணவக போன்றவர்களுக்கு இது நன்றாகவே தெரியும். ஆகவே செய்ய வேண்டியது என்னவென்றால் பள்ளிவாசலை பழைய இடத்துக்கே அனுப்பி விடுவதற்கு நடவடிக்கை எடுப்பதுதான். பள்ளிவாசலை பழைய இடத்துக்கு அனுப்புவதில் முஸ்லிம்களுக்கு உடன்பாடு கிடையாது. அதற்குக் காரணம் பள்ளிவாசலை விஸ்தரிப்பதற்கு இடம் போதாது. இதுவரை தான் கடைபிடித்து வந்த முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகளை கைவிட்டு பரோபகாரியின் பாத்திரத்தில் நடிக்க வேண்டிய நிலை சம்பிக ரணவகவுக்கு ஏற்பட்டது. அரச மரத்தை வெட்டிச்சாய்து விட்டு பழைய பள்ளிவாசலை விஸ்தரிப்பதற்கு இடமளிப்பது என்று முடிவு காணப்பட்டது. இது சம்பிக ரணவகவின் திட்டமாக காணப்பட்டாலும், மேலிடத்திலிருந்து அனுமதி கிடைக்கப்பெற்ற ஒன்றுதான். மேலிடத்து அனுமதி கிடைக்காமலிருந்தால் இப்படியான ஒரு தீர்மானத்தை எடுத்திருக்க முடியாது. ஏனென்றால், நகர அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான காணியை பள்ளிவாசலுக்கு ஒப்படைக்கும் அதிகாரம் சம்பிகவுக்கு கிடையாது.

இறுதியாக அடிவாங்கிய கிரான்ட்பாஸ் முஸ்லிம் மக்களையும், நெருக்கடிக்கு காரணமாயிருந்த விகாரையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களையும் சந்தோசப்படுத்துவதற்காக ஒதுங்கியிருந்த அரச மரத்தை வெட்டிச்சாய்க்க வேண்டியேற்பட்டது. உண்மையிலேயே இது முஸ்லிம் மக்கள் எதிர்பார்த்த ஒன்றல்ல. இது ஒரு குழு தனது இருப்புக்காக எடுத்த கேவலமான முயற்சியாகும்.


# பால்மா தடை



## மக்கள் மேலான அக்கறையா?

## உண்மை மீதான பொய்கள்

> “ஒரு சமுதாயம் ஏழ்மையைக் குறைக்காமல் தன் செல்வத்தைப் பெருக்குகிறது என்றால்; அச் சமுதாயத்தில் மக்கள் தொகையை விட குற்றங்கள் வேகமாக அதிகரிக்கின்றன என்றால் அச் சமுதாய அமைப்பின் மையத்தில் அழுகிப்போன ஏதோ ஒன்று இருக்கவேண்டும்”




பொன்டாரா என்ற பன்னாட்டு நிறுவணத்தின் உற்பத்தியான அங்கர், மெலிபன், டயமன்ட் பால்மாவில் டி.சி.டி. (டைசை யான்டியாமைட்) என்ற இரசாயனப் பொருள் கலந்துள்ளதாக கூறி தடை செய்த அரசு, மக்கள் நலனில் இருந்து இதைச் செய்யவில்லை. மக்கள் நலன் சார்ந்த அக்கறையிலான முடிவுவல்ல, வேறு சொந்த நலன்கள் சார்ந்த முடிவாகும். இலங்கை அரசு மக்களின் உடல் நலத்தில் அக்கறை கொண்ட ஒரு அரசு அல்ல. வெலிவேரியாவில் சுத்தமான நீரை கேட்ட மக்களையே, சுட்டுக் கொன்ற அரசு அல்லவா இது.

இரசாயனம் அங்கர், மெலிபன், டயமன்ட் பால்மாவில் மட்டுமல்ல, எல்லா உணவு சங்கிலித் தொடரிலும் காணப்படுகின்றது. வடமத்திய மாகாணத்தில் அதிகரித்த சிறுநீரகம் தொடர்பான நோய்களுக்கு காரணம் விவசாய உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இரசாயான உரவகைகளும், கிருமிநாசினிகளும் காரணமாக இருக்கின்றது. இந்த வகையில் ஆசனிக், கட்மியம், ஈயம் என்பன நிலத்திலும், நிலத்தடி நீரிலும், உற்பத்தி பொருட்களிலும் காணப்படுவதுடன் பலவித நோய்கள் உருவாகின்றது. இதை உணவாகக் கொள்ளும் கால்நடை உணவுகள் ஊடாகவும், மனித உடலில் புகுகின்றது.

இரண்டாம் உலக யுத்தத்தில் பயன்படுத்திய வெடிமருந்துகள் உரமாக, இரசயான பதார்த்தங்கள் கிருமிநாசினியாக மாற்றப்பட்டு இன்று விவசாயத்தில் திணிக்கப்பட்டது. இது தான் இலங்கை அரசின் விவசாயக் கொள்கை கூட. பன்னாட்டு நிறுவணங்களில் இலாப நோக்கில் விவசாயத்தில் புகுத்தப்பட்ட இரசாயனப் பொருட்கள் உடலில் கலப்பது என்பது, உணவு உற்பத்தியுடன் பிணைக்கப்பட்ட ஒன்றாக இன்று மாறி இருக்கின்றது. இலங்கை அரசின் விவசாயக் கொள்கை என்பது உணவை நஞ்சாக்கல் தானே ஒழிய இதற்கு எதிரானதல்ல.

பன்னாட்டு பால் பவுடர் உற்பத்தி என்பது அதிக லாபம் கொண்ட, குறை ந்த விலையில் பாலை கறக்கின்ற முறையுடன் பின்னிப் பிணைந்தது. மிருகங்களை விரைவான கொழுக்க வைக்கவும், அதிக பால் கறக்கவும் பயன்படுத்தும் இரசாயனங்கள், மிருக உணவு ஊடாக மனித உடலுக்கு செல்லும் அதே நேரம், அதே செயற்பாட்டை மனித உடலுக்குள்ளும் செய்கின்றது.

இதில் எந்த அளவுக்கு உடலில் இரசயானத்தின் அளவு கலக்க முடியும் என்பது தொடர்பாக கூட, அவர்கள் தான் தங்கள் விற்பனை பாதிக்காத வண்ணம் ஒரு உலக அளவீட்டை கொடுத்து விடுகின்றனர்.

இதற்கு மாறாக இன்று உலகளவில் சுற்றுச்சுழல் மற்றும் தங்கள் உண்ணும் உணவு பற்றி விழிப்புணர்வு, இயற்கை உணவை நோக்கியதாக மாறிவருகின்றது. மக்கள் இரண்டாக பிரிந்து நுகர்வதும், சந்தை இரண்டும் தனிதனி அடையாளங்களுடன் மேற்கில் இயற்கை சார்ந்த உற்பத்தியும் நுகர்வும் அதிகரித்து வருகின்றது.

இயற்கை உற்பத்தி செயற்கை உற்பத்தியை மிஞ்சும் அதே நேரம், செயற்கை உணவுகள் மேற்கில் தேங்குவதால் அதை ஏழைநாடுகளில் சந்தையில் திணிக்கப்படுவதும், மேற்கு பயன்பாட்டில் குறையும் இரசாயன உரங்களை ஏழைநாடுகளில் பயன்படுவது அதிகரிக்கின்றது. இந்த வகையில் ஏழை நாடுகளில் சிறு விவசாயிகளிடம் இருந்து நிலத்தை பறித்து, பண்ணை உற்பத்தி முறை புகுத்தப்பட்டு இரசாயன உரங்களால் நஞ்சுட்டப்பட்ட செயற்கை உணவு உற்பத்தி பெருக்கப்படுகின்றது.

உலகளாவில் இயற்கை விவசாயத்தை மறுத்து, இராசாயனப் பொருட்கள் கொண்ட விவசாயமாக மாறியது முதல், உணவுப் பொருட்களில் இராசாயனப் பொருட்கள் கலந்து தான் காணப்படுகின்றது. இந்த வகையில் உணவு சங்கிலித் தொடரில் டி.சி.டி. (டைசையான்டியாமைட்) என்ற இரசாயனப் பொருள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பயிர் செழிப்புக்காக பயன்படுத்தப்படும் அமோனியா என்ற இரசாயன கலவை, நிலத்தில் காணப்படும் பற்றீரியாவை நைத்திரேட்டாகவும் நைத்திரோக்சைட்டாக மாற்றுகின்றது. இவ்விரு வாயுக்களும் பச்சைக்கு குடில் விளைவை ஏற்படுத்துவதாலும், நிலத்தில் காணப்படும் பக்றீரியா மாற்றத்தை தடுப்பதற்காக, டி.சி.டி.எனும் இரசாயனம் பயன்படுத்தப்படுகின்றது. இந்த டி.சி.டி. மனித உடலில் சேரும் போது சிறுநீரகம் தொடர்பான நோயும், புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றது. இதே போன்ற டி.சி.டி. (டைசையான்டியாமைட்) இலத்திரனியல், பொருட்கள், மருந்துவகை உற்பத்தியிலும், உணவுப் பொதி செய்யும் முறையிலும் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.

அதிக லாபத்தை மைய்யமாக கொண்ட பன்னாட்டு உலக உணவு உற்பத்தியிலான உணவுச் சங்கிலி தொடரில், இராசாயனப் பொருட்கள் கொண்ட ஒன்றாக மாறிவிட்டது. இயற்கை அல்லாத உணவு அணைத்தும், இரசாயனப் பொருட்களின் கலவை ஆகிவிட்டது. அங்கர், மெலிபன், டயமன்ட் பால் மா உற்பத்திக்கான பால் உற்பத்திக்கான உணவுச் சங்கிலித் தொடரில், மிக நீண்ட காலமாகவே டி.சி.டி. (டைசையான்டியாமைட்) கலந்துதான் காணப்படுகின்றது.

அரசு இன்று திடீரென கூறுவது போல், இன்று நேற்று அல்ல. இந்த உண்மையை மறைத்துதான் அரசு இயங்குகின்றது. இந்த பின்புலத்தில் இலங்கை மக்களின் உள்ளூர் திரவ பால் நுகர்வை தடுத்து நிறுத்திய அரசு, பன்னாட்டு சந்தையைத் திறந்து பால்மா நுகர்வை ஊக்குவித்த காலம் முதலே இந்த இராசாயனப் பொருட்கள் மக்களின் உணவில் திணித்து வருகின்றது. குழந்தைகளுக்கு தாய்மார் பால் கொடுக்கும் இயற்கை முறையை இல்லாதாக்கி, செயற்கையான இரசாயன பால்மா உணவைத் திணித்தது. மக்கள் தங்கள் நுகர்வில் எதை நுகர்கின்றனர் என்ற பொது அறிவை இல்லாதாக்கி, இரசாயன நஞ்சு கலந்த பன்னாட்டு புண்ணாக்குகளை மக்களின் நுகர்வில் திணித்து விட்டவர்கள் வேறு யாருமல்ல இந்த அரசு தான்.

இயற்கை சார்ந்த தேசிய உணவு, தேசிய உற்பத்திகளை பன்னாட்டு நிறுவனங்களுடன் சேர்ந்து அழிக்கும் அரசு, செயற்கையான பன்னாட்டு உணவுகளையே மக்களின் அன்றாட உணவாக்கின்றனர். இயற்கை மற்றும் தேசிய உணவு கூறுகளை அழித்துவிடுவது தான், அரசின் பொருளாதார மற்றும் விவசாயக் கொள்கையாக இருக்கின்றது. அங்கர், மெலிபன், டயமன்ட் உற்பத்தி செய்யும் பொன்டாரா என்ற பன்னாட்டு நிறுவணம், இன்று உலக பால் உற்பத்தியில் ஐந்தில் ஒன்றை கட்டுப்படுத்துகின்றது. இதற்கு துணை போன உலக அரசுகளில், இலங்கை அரசும் அடங்கும்.

இலங்கை அரசு மக்களின் உடல் ஆரோக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய கொள்கைளைக் கொண்டு செயற்பட்டதல்ல, செயற்படப்போவதுமில்லை. மாறாக பன்னாட்டு நிறுவனங்களினதும், தரகு முதலாளிகளின் நலன் சார்ந்த கொள்கை யைக் கொண்டு, நாட்டை சுடுகாடாக்கின்றது. திரவப் பாலுக்கு பதில் பால்மா உணவை அத்தியாவசிமான நுகர்வாக இணைந்த பின்புலத்தில், கூட்டு சுரண்டலே காரணமாகும். உலகில் உள்ள மற்ற எந்த நாடுகளை விடவும், பால் மா அதிகம் நுகரப்படும் பண்பாட்டைக் கொண்ட நாடுகளில் இலங்கை முன்னணி வகிக்கின்றது.

இது இலங்கை மக்களின் உணவுப் பண்பாடாக இருக்காத போதும், தரகு முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் இணைத்து உருவாக்கிய உணவு பண்பாடுதான் இலங்கையில் உள்ள பால்மா உணவாகும்.

இவர்கள் உருவாக்கியதை ஏன் இன்று சர்ச்சைக்குள்ளாகின்றது. பால்மா பதில் திரவ பாலை மீளக் கொண்டு வருவதற்காகவா!? இல்லை. இரசாயன கலவை அற்ற இயற்கையான பால்மாவை மக்களுக்கு கொடுக்கவா!? இல்லை. அங்கர், மெலிபன், டயமன்ட் அல்லாத பால்மா இராசாயன கலவையற்ற இயற்கை சார்ந்த உணவு சங்கிலியில் இருந்து பெறப்படுகின்றதா!? இல்லை. இலங்கை மக்களின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை கொண்டு இயற்கை சார்ந்த பால் உணவை மக்களுக்கு கொடுக்கவா இந்த தடை!? இல்லை. ஆக உண்மை தெளிவாகப் புதைக்கப்படுகின்றது.

மாறாக அங்கர், மெலிபன், டயமன்ட் விநியோகத்தில் உள்ள உள்ளூர் லாபத்தை தமதாக்கும் தரகு முதலாளிகளுக்குள்ளான முரண்பாடுகளும், விநியோகத்தை ஏகபோகமாக்கும் முரண்பாடுகளும், இழுபறிகளும் தான் இந்த இரசாயனம் பற்றி கூச்சலாலும் பிரச்சாரமுமாகும். அத்துடன் தங்கள் உற்பத்தியான பால்மாவை விற்கவும், அதிக லாபத்தை தரக் கூடிய வேறு பால்மாவை சந்தைப்படுத்தவும், அறிமுகப்படுத்தவும் முனையும் தரகுமுதலாளிகளும், வேறு பன்னாட்டு நிறுவனங்களும் சேர்ந்து செய்யும் முயற்சி தான் இரசாயனம் பற்றிய திடீர் கண்டுபிடிப்புகள்.

இந்தப் பின்னணியில் உள்ள சூக்குமத்தை தெரிந்து கொள்வோம். இன்று “பொன்டேரா” பால்மா விநியோகத்துக்கான அங்கீகாரத்தைப் பெற சுமார் 100 மில்லியன் ரூபா (10 கோடி) மூலதன உத்தவாதம் கொண்டதான, சிறு தரகு முதலாளி முறை பொதுவாக காணப்படுகின்றது. 400 கிராம் பக்கற்றுக்கு 15 ரூபா லாபம் கிடைக்கும் வண்ணம், சந்தைக்கு எடுத்துச் செல்லும் பால்மா தரகர்கள், அதில் ஒரு பகுதியை சிறு வியாபரிகளுடன் பகிர்கின்றனர். இன்றைய இந்த முறையை தடுத்து, முழுமையாக ஏக போகமாக்க முனைகின்றது, பெரிய தரகு முதலாளி நிறுவனமான “கொத்மலை மில்க் பிரடக்ட்ஸ்” மற்றும் ”காகில்ஸ்” பல்பொருள் அங்காடியும். இவ் இரண்டும் ஓரே முகாமைத்துவத்தைக் கொண்டதும், மகிந்த குடும்பத்துடன் நெருங்கிய உறவைக் கொண்டதுமாகும்.

பால்மா விநியோகத்தில் ஏகபோகத்தை ஏற்படுத்தி அதிக லாபத்தை பெறவும், பேரம் பேசவும் முனைகின்றனர். சிறு தரகு போட்டியாளர்களை சந்தையில் இருந்து அகற்ற முனைகின்றனர். இதன் முதற்கட்டமாக அங்கர், மெலிபன், டயமன்ட் பால்மாவை தங்கள் “காகில்ஸ்” பல்பொருள் அங்காடி மூலம், வாங்கிய விலைக்கே மீண்டும் விற்கத் தொடங்கினர்.

சிறு தரகு முதலாளிகள் முரண்பட்ட நிலையில், பொன்டாரா கட்டுப்படுத்தக் கூடிய இந்த ஏகபோகத்துக்கு உடன்பட மறுத்த நிலையில் முரண்பாடுகள் தோன்றியது. வாங்கிய விலைக்கு விற்பதை மறுத்த பொன்டாரா, இடையில் ஒரு விலைக்கு விற்க உத்தரவிட்டது. இதை மறுத்து முழுமையான ஏகபோகம் அல்லது அதை உருவாக்கும் வண்ணம் தனக்கு போட்டியாளரை சந்தையில் இருந்து அகற்ற முனைந்ததன் மூலம், முரண்பாடுகள் முற்றின. வாங்கிய விலைக்கு தொடர்ந்து விற்றதால், பொன்டாரா “காகில்ஸ்” பல்பொருள் அங்காடிகான பால்மா விநியோகத்தை நிறுத்தியது. இதற்கு பதிலடியாக பொன்டாரா பிற பால் உற்பத்தி (யோக்கற்) விற்பதை நிறுத்தப் போவதாக மிரட்டியது. பொன்டாராவின் 60 சதவீதமான யோக்கற் விற்பனை இதனுடாகவே நடந்து வந்தது.

இந்த நிலையில் “அங்கர் உற்பத்திகளை” சந்தையில் விற்பனை செய்யக்கூடாது என அரசாங்க தாதியர் சங்கத்தினால் ஒரு தடையுத்தரவை நீதிமன்றம் மூலம் ஏற்படுத்தினர். இதை அடுத்து தமக்குச் சொந்தமான “கொத்மலை மில்க் புரடக்ஸ்” நிறுவனத்தின் பால்மா உற்பத்திகளை பெருமளவுக்க சந்தைக்கு கொண்டுவந்தனர். இதே நேரம் ஸ்ட்ரை அட்வடைசிங் விளம்பர நிறுவனம் தன் மரபுகளை மீறி, உலர் பால்மா உற்பத்திகளில் உள்ள பாதிப்புகள் குறித்து, வர்த்தகர்களுக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்கொன்றை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடத்தியது. இவை தான் பால்மாவில் டி.சி.டி. (டைசையான்டியாமைட்) என்ற இரசாயனப் பொருள் பற்றிய பிரச்சாரம்.


யுத்தத்தின் பின்பாக உருவான திடீர் தரகு முதலாளிகளும், சர்வதேச முரண்பாட்டுக்குள் சிக்கியுள்ள அரசின் கொள்கையைப் பயன்படுத்தி பிழைத்துக் கொள்ள முனையும் தரகு முதலாளிகளும், சந்தையை ஆக்கிரமித்துள்ளவர்களை அகற்ற முனைகின்றனர். முஸ்லிம் வியாபார நிலையங்களை கைப்பற்ற மசூதிகள் எதிரான தாக்குதல் போல், தங்கள் உற்பத்தி மற்றும் ஏக போகத்தை நிறுவ அங்கர் உற்பத்தில் இரசாயனம் என்ற பிரச்சாரங்களை முன்னெடுக்கின்றளர். நாட்டை ஆளும் குடும்ப சாவாதிகார ஆட்சியை பயன்படுத்தி, இதை நிறைவு செய்ய முனைகின்றனர். பால் மா பற்றிய இந்த பிரச்சாரம், உண்மைகள் மீது உண்மையின் பாலானதல்ல, பொய்மையானது. மக்களின் பெயரில் மூடிமறைக்கப்பட்டு அரசு ஆதரவு பெற்ற குற்றங்கள் மிக வேகமாக அதிகரித்து வருகின்றது.

மார்க்ஸ் கூறியது போல் “ஒரு சமுதாயம் ஏழ்மையைக் குறைக்காமல் தன் செல்வத்தைப் பெருக்குகிறது என்றால், அச் சமுதாயத்தில் மக்கள் தொகையைவிட குற்றங்கள் வேகமாக அதிகரிக்கின்றன என்றால் அச் சமுதாய அமைப்பின் மையத்தில் அழுகிப்போன ஏதோ ஒன்று இருக்கவேண்டும்” அதுதான் இது.

# நவ தாராளமய பலியாகும் சமூ

2011 நவம்பர் 16ம் திகதி கொழும்பு பண்டாரநாயக ஞாபகார்த்த மண்டபத்தில் ஜனாதிபதியின் தலைமையில் நடந்த கூட்டத்தில் அரசாங்கத்தின் செயல் திட்டமொன்று வெளியிடப்பட்டது. 2000மாம் ஆண்டு இலக்கம் 49 நகர மற்றும் கிராம நிர்மாணம்( திருத்தம்) சட்டமூலத்தின் 3 (1) உறுப்புரைக்கு ஏற்ப ஜனாதிபதியால் 2011 ஜனவரி 13ம் திகதி நியமிக்கப்பட்ட தேசிய இயற்பியல் நிர்மாண சபையின் மூலம் 2011 மற்றும் 2030க்கிடையிலான 20 வருடகாலத்துக்குமாக தயாரிக்கப்பட்ட இந்தத் திட்டம் "தேசிய இயற்பியல் வரைவு" (National Physical Plan) என பெயரிடப்பட்டுள்ளது. இந்த வரைவு தொடர்பான அரசாங்கத்தின் விளக்கத்திற்கு ஏற்ப, இலங்கையின் பூகோள அமைப்பை அடிப்படையாகக் கொண்டு அதனை பஞ்ச மகா சக்திகளின் கேந்திரஸ்தானமாக்குவதேயாகும்.

2010 ஆண்டு வெளியிடப்பட்ட "மஹிந்த சிந்தனை முன்னோக்கு" என்ற அறிக்கையில் முதன் முதலாக இந்த "பஞ்ச மகா சக்தி" குறித்த கோட்பாடு முன்வைக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப இலங்கையில் ஆசியாவின் மத்திய நிலையமொன்றும், கடல்சார் மத்தியநிலையமொன்றும், வான்சார் நிலையமொன்றும், மின்வலு மத்திய நிலையமொன்றும், வர்த்தக மத்திய நிலையமொன்றும், கல்வி மத்திய நிலையமொன்றும் அமைக்கப்படவிருக்கின்றது. இதன் மூலமாக பொருளாதார, சமூக, மற்றும் கலாச்சார துறைகளுக்குள் நவ தாராளமய மறுசீரமைப்பை மேற்கொண்டு, அதனை பொருளாதாரத்தின் முக்கிய சக்தியாக மாற்றுவதோடு, விவசாயம் மற்றும் கைத்தொழில்கள் படிப்படியாக அழிக்கப்பட்டுவிடும். கல்வி, சுகாதார சேவை, போக்குவரத்து போன்றவை தனியார்மயப்படுத்தப்பட்டு அதன் சுமை குடிமக்கள் மீது சுமத்தப்படும். ஒட்டுமொத்த சமூகமும், ஒட்டுமொத்த கலாச்சாரமும் அதற்காக மீளமைக்கப்படும். மேற்படி நவ தாராளமய திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கும் பெயர்தான் 'தேசிய இயற்பியல் வரைவு' என்பது. முந்தைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் "மீண்டும் எழுச்சி பெறும் இலங்கை" என்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததும் இந்த வரைவுதான்.




## உத்தேச குடிப் பரம்பல்

தேசிய இயற்பியல் வரைவின் பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாச்சார பின்விளைவுகள் சம்பந்தமாக உரையாடுவது பாரதூரமான விடயமாகும். சூழல் மீதான அழுத்தம், சமூக மற்றும் கலாச்சார மட்டத்திலான அழுத்தம் குறித்து சுருக்கமான திறனாய்வொன்றை மேற்கொள்வதே இந்த கட்டுரையின் நோக்கமாகும், அதற்காக வேண்டி இந்த தேசிய இயற்பியல் வரைவில் உள்ள சில முக்கிய திட்டங்கள குறித்து கருத்துக்களை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த வரைவின் பிரதான இலக்காக இருப்பது, நவ தாராளமயத்தின் முதலாவது கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதேயாகும்.

1. 2005 ஜுலை 4ம் திகதி இந்தியா, சீனா உள்ளிட்ட 36 நாடுகளோடு ஒப்பமிடப்பட்ட ஒப்பந்தத்திற்கு ஏற்ப, இலங்கையில் அதிவேக பாதை தொகுதிகளை அமைத்து அவற்றை ஆசிய அதிவேக நெடுஞ்சாலை வலையமைப்போடு 2016 ல் இணைத்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப தற்போது அமைக்கப்பட்டு வரும் கட்டுநாயக - காலி அதிவேக நெடுஞ்சாலைக்கு மேலதிகமாக மாத்தறை - ஹம்பாந்தோட்டை, கொழும்பு - கண்டி, மன்னார் - ஹம்பாந்தோட்டை, ஹம்பாந்தோட்டை - அம்பாறை ஆகிய பிரதேசங்களுக்கிடையிலும் அதிவேக நெடுஞ்சாலைகளும் அமைக்க உத்தேசிக்கபட்டுள்ளது. இந்த அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளும் ஒன்றோடொன்று இணைக்கப்படுவதோடு, இறுதியாக மன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஷ்கோடி வரை செல்லக் கூடிய அதிவேக நெடுஞ்சாலை வழியாக ஆசியாவின் அதிவேக நெடுஞ்சாலையோடு இணைக்கப்படும்.

அதிநகர்ப்புற வலயம் உள்ளடங்கிய நிலம் உத்தேச மக்கள் தொகையில்,

மேல் மாகாண நகர வலயம் கம்பஹாவிலிருந்து கொழும்பு மற்றும், களுத்துறை வரையும், 35 இலட்சம்.

தெற்கு நகர வலயம் காலியிலிருந்து மாத்தறை வரையும், மற்றும் அம்பாந்தோட்டை, தனமல்வில அண்டிய பிரசேங்கள் வரை 10 இலட்சம்.

மற்றும் கிழக்கு நகர வலயம் அம்பாறையிலிருந்து மட்டக்களப்பு வரை 10 இலட்சமுமாக மற்றும்

வடமத்திய நகர வலயம் திருகோணமலை,பொலன்னறுவை அனுராதபுரம், மற்றும் தம்புள்ள வரை 40 லட்சம்.

யாழ்ப்பானம் நகர வலயம் மன்னார் மற்றும், கிளிநொச்சியிலிருந்து பருத்தித்துறை வரை 10 இலட்சம்

தேசிய இயற்பியல் வரைவின் கீழ் அதி நகர்ப்புற சனத்தொகையாக வலயமாக கணிப்பிடப்பட்டுள்ளது

2. கட்டுநாயகா விமான நிலையம் விரிவாக்கப்படுவதோடு, தற்போது நிர்மாணிக்கப்பட்டிருக்கும் மத்தள விமான நிலையத்தைத் தவிர ஹிங்குரக்கொடவில் சர்வதேச விமான நிலையமொன்றும், கண்டி, நூரளை மற்றும் தம்புள்ளயில் புதிய விமான நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. பலாலி, திருகோணமலை, புத்தளம், மட்டக்களப்பு, களுத்துறை, அம்பாறை, வவுனியா, அனுராதபுரம், காலி, ரத்மலான ஆகிய விமான நிலையங்கள் புணரமைக்கப்படும். இதற்கேற்ப, 2030 ஆகும்போது இலங்கையில் 19 விமான நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

3. இலங்கையில் 5 அதி நகர்ப்புற வலயங்களை குறிப்பிட்டு, வெளி நாட்டு முதலீட்டாளர்களுக்காக அவை திறந்து விடப்படும். இந்தப் பிரதேசங்களில் புதிதாக லட்சக்கணக்கான மக்கள் குடியேற்றப்பட்டு அங்கு மக்கள் கலந்து வாழ்வதில் மாற்றங்கள் கொண்டுவரப்படும். கொழும்பு நகரில் வாழும் குறைந்த வருமானமுடைய மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு நடுத்தர வர்க்கத்தினரின் விகிதாரத்தை அதிகரிப்பதன் ஊடாக அங்கு வர்க்கக் கலவை மாற்றப்படும். மேற் குறித்த அதிநகர்புற பிரதேசங்கள் இவ்வாறு அமையும்.


4. சிலாபத்திலிருந்து வடக்கு மற்றும் தெற்கிற்கு அனுராதபுரம், பொலன்னறுவை, கண்டி போன்ற வரலாற்று சிறப்பு மிக்க பிரதேசங்களும், பிபிலை, நில்கல போன்ற சூழல் பாது காப்பு வலயங்களும், சிறப்பு உல்லாசப் பிரயாண வலயங்களாக பெயரிடப்படும். இவை கடற்கரையை அண்டிய உல்லாச பயணத்திற்கான நிலம், தொல்லியல் உல்லாச பிரயாண நிலம் மற்றும் சூழல் சார்ந்த உல்லாச பயண நிலம் என வகை படுத்தப்படும். இந்தப் பிரதேசங்களில் ஹோட்டல்கள் அமைத்தல் மற்றும் சிறப்பு உல்லாச பயண வசதிகளுக்காக தற்போதைய சட்டங்களில மாற்றங்கள் கொண்டு வரப்படும்.

> **அதன் வேலிகளை உடைத்துக் கொண்டு வெளியே வரும் யானைகள் 'வெறிபிடித்த யானைகள்" என அடையாளப்படுத்தப்பட்டு, தனியாருக்கு கொடுப்பதற்காக சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.**

5. மின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நீர் மின் உலை, அனல் மின் உலை மற்றும் அணு மின் உலைகள் அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. லாகுகல, யால, உடவலவை தேசிய வனப் பூங்கா ஊடாக மட்டக்களப்பிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை Fiber Optics தகவல் தொடர்பு வலையமைப்பொன்று நிறுவப்படும்.


7. நிலக் கடலை, பாம் ஒயில், பழம், மரக்கறி மற்றும் வர்த்தக மர வகைகள் பயிரிடுவதற்காக அனுராதபுரம் மற்றும் மொணராகல மாவட்டங்களிலும், வட மாகாணத்தின் மொத்த நிலத்தில் மூன்றில் ஒரு பங்கு நிலமும் " சிறப்பு விவசாய வலயம்" என பெயரிடப்படும்.




ஆசியாவின் உத்தேச அதிவேக நெடுஞ்சாலை மற்றும் புகையிரத பாதை

8. தற்போதைய மாவத்தகம, பொல்கஹவெல, மீரிகம, கட்டுநாயக, பியகம, ஹொரண, சீத்தாவக, கொக்கல, மிரிஜ்ஜவெல, வதுபிட்டிவல, மல்வத்தை மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களை ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களாக விரிவாக்கப்படுவதோடு, முல்லைத்தீவு, மாங்குளம், மன்னார், கப்பல்துறை, தம்புள்ளை, மட்டக்களப்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகியன பிரதேசங்களில் புதிய ஏற்றுமதி தயாரிப்பு வலயங்கள் நிறுவப்படும்.


இந்த வரைவில் அடங்கியுள்ள புதிய




# கொள்ளைக்கு கமும் சூழலும்

அதி வேக நெடுஞ்சாலைகள் அனைத்தும் சூழல் பாதுகாப்பு நிலங்கள் ஊடாகவே அமைக்கப்படுகின்றன. உதாரணமாக, உலக உரிமையாக பெயரிடப்பட்டுள்ளதும், மிகத் தொன்மையான காடாக அறியப்பட்டுள்ளதுமான சிங்கராஜ வனம் இரண்டு முறை இரண்டாக்கப்படுகிறது. அதிவேக நெடுஞ்சாலை மற்றும் கேபில்கள் அமைக்கும் நடவடிக்கைகள் காரணமாக இரண்டாகப் பிரிக்கப்படும். முழு காட்டின் பரப்பளவில் 39வீதமாகும். அதே போன்று அதி நாகரிக பிரதேசங்கள் அமைத்தல், சிறப்பு உல்லாசப் பிரயாண வலயங்களை அமைத்தல் போன்றவற்றின் ஊடாக பாரிய காடழிப்பும் நடந்து கொண்டிருக்கிறது. பிபிலை-நில்கல பகுதி இயற்கை சூழல் பாதுகாப்பு உல்லாசப் பயண வலயமாக பெயரிடப்பட்டு, அங்கு ஹோட்டல்கள் அமைப்பதற்கு அனுமதியளித்திருக்கின்றமை பாரதூரமான சூழல் அழிவுகளை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. அதிவேக நெடுஞ்சாலைகள், தொலைதொடர்பு கேபில் அமைத்தல், மற்றும் உல்லாசப் பயணத்துக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல் போன்றவற்றின் காரணமாக அழிவுகள் ஏற்படக்கூடியதும், சூழல் ரீதியில் முக்கியத்துவமிக்க இடங்களாகவும் உள்ள உடவளவை தேசிய வனப்பூங்கா, வெடஹிர மலை, லுனுகம்வெஹெர, பாந்துநாகல, வீரவில, நிமலவ, புன்தல, உஸ்ஸசன்கொட, கதிர்காமம், கட்டகமுவ, ருஹுனு யால, சாகம, புத்தங்கள, உல்பஸ்ஸ, எகொடயாய, மஹகனதராவ, அனுராதபுரம், மிஹிந்தலை, ரிடிகல, கஹகஸ்ல, பல்லெகலை, சீகிரிய, மின்னேரிய, கிரிதலே, எலஹெர, பகமூன, கவுடுல்ல, சோமாவதிய ஹெவல் ஹெடவர்க், சுண்டிக்குளம், வில்பத்து, யோதவெவ, செங்கலடி, மதடு காப்பு பகுதி, முதுராஜவலை, கலமெட்டிய, பெரியகச்சி, பிபில, நில்கல, ஆகிய பகுதிகள் இருக்கின்றன.


இவற்றில் சில இயற்கை வனப் பாதுகாப்புகளாக இருப்பதோடு, மேலும் சில இயற்கை சரணாலயங்களாகும். 1983 ஆகும்போது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 27 வீதமாக காணப்பட்ட காடுகள் 2011 ஆகும்போது 18.8 வீதமாக குறைந்து காணப்பட்டது. இயற்பியல் வரைவு செயற்படும் பட்சத்தில், 2030 ஆகும்போது, இலங்கையின் வனப் பிரதேசம் 13.0 வீதமாக குறைந்து விடும்.




தொன்மையான காடுகளை அழிப்பதில் உலகின் 4வது இடத்தில் இருக்கும் இலங்கை, இந்த வரைவிற்கு ஏற்ப, இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்திற்கு முன்னேறக் கூடும்.

காடுகள் அழிக்கப்படுவதன் காரணமாக நிலத்திற்கு அடியிலான நீர் குறைந்து வருவதோடு, இலங்கையிலிருக்கும் 103 நதிகளில் பெரும்பாலானவை நீர் வற்றிய ஆறுகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. தற்போதைய திட்டங்களுக்கு ஏற்ப, நீர்பற்றாக் குறையை உருவாக்கி நீரை விற்பனைப் பொருளாக ஆக்குவதன் மூலம், ஒடுக்கப்பட்ட மக்களின் தண்ணீர் உரிமை பறிக்கப்படக்கூடிய ஆபத்தும் இருக்கின்றது. உலகிலேயே உயிரியல் பன்முகத்தைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேருகிறது, இலங்கைக்கு மாத்திரம் இயற்கையாகவே உரித்தான சிறப்பு தாவர வகைகள் 89ம், விஷேட விலங்கினங்கள் 330ம் உள்ளன. இலங்கையில் மாத்திரம் 125 விஷேட ஊர்வனங்கள் காணப்படுவதோடு, சிறப்பு கலப்பினங்கள் 96வீதமுமாகும். சூழல் அழிப்போடு, இந்த மதிப்புவாய்ந்த உயிரினங்களும் அழிந்து விடும்.

காடுகள் அழிக்கப்படுவதனால் உருவாகும் அடுத்த பிரச்சினை என்னவென்றால், யானை மற்றும் மனிதர்களுக்கிடையிலான மோதல். யானைகளின் எண்ணிக்கை குறையக் கூடிய நிலை உருவாகக் கூடும். 2008ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட " தேசிய யானைகள் முகாமைத்துவ கொள்கை" மூலம் காடுகள் அழிக்கப்படுவதால், இடம் பெயரும் யானைகள் 50 வர்க்க கிலோ மீட்டர் விஸ்தீரணமுள்ள சிறிய காடுகளுக்கு அடைக்கப்பட்டு விடும்.




அதன் வேலிகளை உடைத்துக் கொண்டு வெளியே வரும் யானைகள் "வெறிபிடித்த யானைகள்" என அடையாளப்படுத்தப்பட்டு, தனியாருக்கு கொடுப்பதற்காக சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இயற்பியல் வரைவு நடைமுறை படுத்தப்படும் கையோடு இந்த நிலை மேலும் மோசமடையும்.

மறுபுறம், அரசாங்கம் தனது வரைவின் மூலம் விவசாயிகளுக்கு காணி வழங்கப் போவதில்லை. பன்னாட்டு நிறுவனங்களுக்கே காணி வழங்கப்படும். நாட்டின் பல பிரதேசங்கள் " வர்த்தக விவசாய வலயங்களாக" பெயரிடப்பட்டுள்ளதோடு, அவற்றில் மரக்கறி, பழ வகைகள், நிலக்கடலை, பாம் ஒயில், மற்றும் வர்த்தகத்திற்கான மரங்கள் நடல், போன்றவற்றிற்காக பன்னாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும். வட மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியை இதற்காக ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. "வர்த்தக விவசாய வலயம்" அமைக்கப்படுவதன் மூலம், விவசாய தொழிற்றுறை அழிக்கப்பட்டு நிர்க்கதிக்குள்ளாகும் விவசாயிகள் நிறுவனங்களில் அடிமைகளாக வேலை செய்ய நேரிடும், இவ்வாறு நிறுவனங்களுக்கு நிலம் வழங்குவதனால் மேலும் பல பாதிப்புக்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. இந்த நிறுவனங்கள் இலாபத்தை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு செயற்படுவதனால், மனித உயிர்களைப் பற்றியோ, சூழல் அழிவைப்பற்றியோ கவலைப்படாமல், விவசாய இரசாயனத்தை அதிகளவில் பயன்படுத்தும். அதன் காரணமாக நிலத்திற்கடியிலான நீர், மண், மற்றும் உயிரினங்கள் அழிக்கப்படும். தற்போது 'டோல்' மற்றும் 'சீ.ஜ.சீ ' நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 65,000 ஏக்கர் நிலத்தில் நடந்திருக்கும் அழிவுகளைப் பார்க்கும்போது இதனை அறிந்து கொள்ள முடியும். தற்போது பாரிய பிரச்சினையாக காணப்படும் சிறுநீரக செயலிழப்பு நோய் போன்றவை மேலும் அதிகரிக்கக் கூடும். வர்த்தக விவசாய வலயங்கள் மூலம், பாரிய சூழல் அழிவுகளும், சமூக ரீதியிலான சீரழிவுகளும் ஏற்பட்டு நிறுவனங்களின் இலாபம் மேலும், மேலும் உயர்ந்து செல்லும். மறு பக்கத்தில் இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் அதிவேக நெடுஞ்சாலைகளின் நீளம் 11,697 கிலோ மீட்டர்களாகும். அவற்றை அமைப்பதற்காக 280.7 மில்லியன் கன மீட்டர் மண் தேவைப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு பெருமளவில் மலைகள் வெட்டப்படவிருப்பதோடு, அந்த மண் நெடுஞ்சாலை அமைப்பதற்கு பயன்படுத்தப்படும். இதனால், மண்ணின் சமநிலை சிதைவதோடு, பூகோள மாற்றத்தினால் வடிகால் முறைகளில் கூட மாற்றம் ஏற்படும். இது வறட்சி, வெள்ளம், மண்சரிவு போன்ற இடர்களுக்கு காரணமாக இருக்கும்.

இலங்கையின் மக்கள் பரம்பல் முறையை மாற்றியமைப்பதே இயற்பியல் வரைவின் நோக்கமாக இருக்கின்றது. அதன்படி மக்கட் தொகையில் பெரும்பாலானவர்களை நகர் புறங்களில் குடியேற்றி விட்டு, எஞ்சிய நிலங்கள் விடுவிக்கப்படும். இவ்வாறு நிலம் விடுவிக்கப்படுவது உல்லாசப் பயணத்துறைக்கு அல்லது பல்தேசிய நிறுவனங்களுக்கு நிலம் வழங்குவதற்காகவேயாகும். இதில் கேலிக்குறிய விடயம் என்னவென்றால், முன்வைக்கப்பட்டிருக்கும் விளக்கங்களும், வாதங்களும் தான். மக்களை தமது இருப்பிடங்களிலிருந்து அகற்றிவிட்டு, இந்த திட்டத்திற்கு ஏற்ப மீள் குடியேற்றம் செய்வதற்காக முன்வைக்கப்பட்டிருக்கும் ஒரு விடயம் என்னவென்றால், "அனுமதியற்ற குடியிருப்பாளர்கள்" என்பதுதான். இவ்வாறு "அனுமதியற்ற" லேபலை ஒட்டி லட்சக்கணக்கான ஒடுக்கப்பட்ட மக்கள் நகரங்களிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். இதிலுள்ள பாரதூரமான விடயம் என்னவென்றால் கொழும்பு நகரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதோடு, கண்டி, காலி போன்ற நகரங்களிலும் இந்த திட்டம் செயற்படுத்தப்படும். ஒடுக்கப்பட்ட

தொடர்ச்சி 15ம் பக்கம்



**மத அடிப்படைவாத சக்திகளின் கைகளிலிருந்து அதிகாரத்தைப் பறிப்பது என்று காட்டப்பட்ட நாடக மேடையில் பிரதான பாத்திரமாகிய எகிப்திய இராணுவம் என்ற பாத்திரத்தில் மிகத் திறம்பட நடித்ததே ஏகாதிபத்தியங்கள் தான். காற்று இருந்தது அவர்கள் தூற்றிக் கொண்டார்கள். அறுவடை அவர்கள் கைகளில் தான். எகிப்திய இராணுவமே ஹோஸ்னி முபாரக்கின் தூணாகவே இருந்தது என்பதையும் இங்கு மீணடும் நினைவுபடுத் துங்கள். ஏகாதிபத்தியங்களின் மற்றும் இன்றைய இந்த எகிப்திய இராணுவத்தின் ஆதரவாளர்களின் "ஜனநாயகத் தாகம்" இன்னும் நன்றாகப் புலப்படும்.**



# எகிப்தில் புரட்சி(சீ)யா?

துனிசியாவில் ஏற்றிப் போற்றப்பட்ட "அரபு வசந்தம்" எகிப்து வரை பரவி வெடித்து. புரட்சி வசந்தம் அங்கு பூத்துக் குலுங்குகின்றது என வர்ணிக்கின்றனர் இந்த மக்கள் தன்னெழுச்சியை தறிகெட்ட வழியில் விளக்குபவர்கள். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக எகிப்தில் பாசிச சர்வாதிகார ஆட்சியில் அமர்ந்திருந்தவர் ஹோஸ்னி முபாரக். அந்த பாசிச சர்வாதிகார ஆட்சியை கடந்த 30 ஆண்டு காலங்களிலும் தூக்கிப் பிடித்திருந்தது இன்று வரையுமுள்ள எகிப்திய இராணுவம்.

துனிசியாவைப் பின்பற்றி ஹோஸ்னி முபாரக்கின் பாசிச சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக எழுந்த மக்களின் தன்னெழுச்சியான போராட்டம் பெப்ரவரி 11 திகதி 2011 இல் ஹோஸ்னி முபாரக்கினை ஆட்சியில் இருந்து தூக்கியெறிந்தது. இங்கு மீண்டும் கவனிக்க வேண்டியது என்னவெனில் ஹோஸ்னி முபாரக்கின் பாசிச சர்வாதிகார ஆட்சியியை அதன் முதுகெலும்பாக நின்று தூக்கிப் பிடித்திருந்த எகிப்திய இராணுவம் தனது கட்டமைப்பில் எந்த துளி அசைவுகளோ மாற்றங்களோ இன்றி அசைக்கப்படாமல் தொடர்ந்து இருந்தது என்பதாகும்.

இந்த தனிநபருடைய பாசிச ஆட்சிக்கு, எவையெல்லாம் எகிப்திய இராணுவம் போல் துணை நின்றனவோ அவையெல்லாம் நின்று நிலைத்திருக்க ஹோஸ்னி முபாரக் என்ற தனிநபர் மட்டும் தூக்கி எறியப்பட்ட தாகவே எகிப்திய மக்களின் தன்னெழுச்சி முடிந்து போனது. அதிகாரக் கட்டமைப்பென்ற கட்டிலில் அழுக்காகத் தெரிந்த ஹோஸ்னி முபாரக் என்ற மெத்தை தூக்கி வீசப்பட்டது. தாங்கி நிற்கும் கட்டிலை மறைத்து இந்த மெத்தையை மட்டும் தெரிவு செய்யும் ஜனநாயக தேர்தல் என்ற மோசடியில் முதல் தடவையாக நடாத்தப்பட்ட அதிபர் தேர்தலில் வெறுமனே ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிராக மட்டும் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட பிரச்சாரத்தினால் (எழுச்சியொன்று புரட்சியாக மாறி விடாதபடி கவனம் கொண்டிருந்த சக்திகளினால்) முஸ்லிம் சகோரத்துவ அமைப்பின் பேராதரவு பெற்ற முகமது மோர்சி 52 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். அடுப்பில் இருந்து நெருப்பில் விழுந்த கதையாக இது மாறிப்போனது. நாடாளாவிய ரீதியில் சீரான அமைப்புருவாக்கல் கொண்டிருந்த மதவாத முஸ்லீம் சகோதரத்துவக் கட்சியின் பிரச்சாரத்தின் மூலம் முகமது மோர்சிக்கு வெற்றி வாய்ப்புக் கிட்டியது.
அதிபரான இரண்டொரு மாதங்களியே ஹோஸ்னி முபாரக்குக்கு ஆதரவான (எதிர் மறையில் எகிப்திய இராணுவத்துக்கு சாதகமான) சக்திகளும் மதவுணர்வு கொண்ட சிறுபான்மை பிற மத ஆதரவு சக்திகளும், முதலாளித்துவ அமைப்பு க்களும் முகமது மோர்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர்.

எகிப்திய இராணுவமோ மோர்சியின் அதிபருக்கான அதிகாரங்களை களைந்தெடுக்கும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. அவையாவன:

**1.** மோர்சிக்கு எதிராக எகிப்திய இராணுவத்தின் ஆதரவு பெற்ற அகமது சாபிக் அதிபர் தேர்தலில் நிறுத்தப்பட்டார். அகமது சாபிக்கின் பின்னணியைப் பார்த்தோமாகில் அவர் ஹோஸ்னி முபாரக் ஆட்சியில் பிரதம மந்திரியாக இருந்தவராவார். தேர்தலில் பங்குகொள்ள முடியாது என்ற தடை இவர் மேல் இருந்தும் உச்ச நீதிமன்ற உத்தரவின் மூலம் சாபிக் தேர்தலில் பங்குகொள்ள முடியாதிருந்த தடை நீக்கப்பட்டது.

**2.** நாட்டின் அதிபர், நாட்டின் இராணுவத்தின் தலைவராக இருப்பது நீக்கப்பட்டு இராணுவத்தின் நேரடிப் பொறுப்புக்கு அது மாற்றப்பட்டது.

**3.** இராணுவ அதிகாரிகளுக்கு பதவி வழங்கும் அதிகாரம் மற்றும் விசாரணைகள் மற்றும் பதவி நீக்கும் அதிகாரம் என்பன நாட்டின் அதிபர் கரங்களில் இருந்தவையாகும். அவை யாவும் பிடுங்கப்பட்டு இராணுவத்தின் தலைமைப் பீடத்தின் கைகளுக்கு மாற்றப்பபட்டன.

**4.** இராணுவ நடவடிக்கைகளை உள்நாட்டிலோ வெளிநாட்டு இராணுவ நடவடிக்கைகளுக்காகவோ உத்தரவிடும் நாட்டின் அதிபர் கைகளில் இருந்த உரிமை இராணுவத்தின் தலைமையின் கைகளுக்கு மாற்றப்பட்டது.

**5.** புதிய நாடாளுமன்றத்தை இராணுவம் கலைத்தமை.

அதிகார இழுபறிகளோடும் நாட்டின் அதிபர் கைளில் குவிந்திருந்த இராணுவத்தை கட்டளையடும் சக்தியும் சதிகளால் பிடுங்கப்பட்ட வெற்று அதிபராகவும் மோர்சி எகிப்திய இராணுவத்தின் சதிவலைகளால் "சுற்றி வளைக்கப்பட்டார்".

ஜனநாயக வழிமுறைகளை போற்றுவதாக வாய்பிளக்கும் ஏகாதிபத்தியங்கள் தாங்கள் போற்றும் அதே வழிமுறைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபருக்கு எதிராக, எகிப்திய இராணுவம் தனது கைகளில் அதிகாரங்களை ஒவ்வொன்றாக பிடுங்கியெடுப்பதை கள்ள மௌனத்துடனும் பின்கதவாலும் ஊக்குவித்துக் கொண்டிருந்தன. இங்கு மோர்சியின் அதிகாரங்களுக்கும் மத அடிப்படை வாதத்துக்கும் வக்காலத்து வாங்குவதாக இதை எடுத்துக் கொள்ளக் கூடாது. மத அடிப்படைவாத சக்திகளின் கைகளிலிருந்து அதிகாரத்தைப் பறிப்பது என்று காட்டப்பட்ட நாடக மேடையில் பிரதான பாத்திரமாகிய எகிப்திய இராணுவம் என்ற பாத்திரத்தில் மிகத் திறம்பட நடித்ததே ஏகாதிபத்தியங்கள் தான். காற்று இருந்தது அவர்கள் தூற்றிக் கொண்டார்கள். அறுவடை அவர்கள் கைகளில் தான். எகிப்திய இராணுவமே ஹோஸ்னி முபாரக்கின் தூணாகவே இருந்தது என்பதையும் இங்கு மீணடும் நினைவுபடுத் துங்கள். ஏகாதிபத்தியங்களின் மற்றும் இன்றைய இந்த எகிப்திய இராணுவத்தின் ஆதரவாளர்களின் "ஜனநாயகத் தாகம்" இன்னும் நன்றாகப் புலப்படும்.

மறுபுறத்தில் மோர்சியோ தன்னிடம் எஞ்சியிருந்த அதிகாரங்களை முஸ்லீம் சகோதரத்துவக் கட்சியின் அரசியல் நிகழ்ச்சி நிரல்களை ஏதுவாக்க பயன்படுத்தினார். அரசியல் சாசனங்கள் சம்பந்தமான நீதிமன்ற அதிகாரங்களை இரத்து செய்தார். முடிவுகள் மீதான நீதிமன்றத் தலையீடுகளை தடை செய்தார்.

இன்னொரு புறத்தில் பொருளாதார ரீதியில் ஏகாதிபத்திய நிதி மூலதனங்களிடமிருந்து நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு கடன்களை பெற்றுக்கொண்டார். தன்னை எதிர்த்த சக்திகளின் மீதும் தொழிலாளர் அமைப்புக்கள் சங்கங்கள் மீது கொடிய அடக்குமுறைகளை ஏவி விட்டார். காசாப் பிரச்சனையில் இஸ்ரேல் அமெரிக்க நிலைப்பாட்டிற்கு ஆதரவாக நடந்து கொண்டார். மக்களினது கோபங்கள் ஹோஸ்னி முபாரக் என்ற தனிநபரை நோக்கி மட்டுமே ஒருங்கு குவிக்கப்பட்டிருந்ததால் முன்னரே குறிப்பிட்டபடி ஹோஸ்னி முபாரக் இடத்தில் ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சியினைத் தாங்கிப் பிடித்திருந்த அதன் முதுகெலும்பான எகி ப்திய இராணுவம் ஹோஸ்னி முபாரக்கினைப் பலிக்கடாவாக்கி தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. இந்த நிலையில் மோர்சி அதற்கு இடையூறாக இருந்தபடியால் மட்டுமே மோர்சியின் மீது "முஸ்லீம் சகோதரத்துவ கட்சியினுடைய அடிப்படையில் அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்க முனைகின்றார்" என்ற குற்றச்சாட்டு மோர்சியின் ஏனைய மக்கள் விரோத நடவடிக்கைகள் எல்லாம் புதைந்து போய்விடும்படி பெரியளவில் பிரச்சாரப்படுத்தப்பட்டு மோர்சி விரோதம் மக்கள் மத்தியில் தூபமிடப்பட்டது.

மக்களின் எழுச்சி இங்கும் அங்குமாக அலைக்கழிக்கப்பட்டது. நேற்றைய இலக்கு முபாரக். முபாரக்கின் வீழ்ச்சிக்குப் பின்னர் தேர்தல். தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மோர்சி. இன்று இராணுவம் ஏகாதிபத்தியங்கள் பீற்றிக்கொ ள்ளும் ஜனநாயக தேர்தலில் மூலம் பதவிக்கு வந்த மோர்சியை பதவி நீக்கம் செய்து பின்னர் கைது செய்து சிறையிலடைத்து இராணுவ ஆட்சியை நிலைநிறுத்தியுள்ளது. அதற்கெதிராக கிளர்ந்தெழும் மக்களை வீதிகளில் தெருக்களில் உயிர்பலி கொண்டு வருகின்றது. மோர்சியின் எதிர்ப்பாளர்களும் ஆதரவாளர்களும் என தெருக்களில் மோதவிடப்ட்டு பலிகொள்ளளப்படுகின்றனர். எகிப்திய இராணுவம் தனது இராணுவ ஆட்சியின் கோரங்களை நிகழ்த்தி வருகின்றது. சவூதி அரேபியாவும் ஐக்கிய அரபுக் குடியரசும் எகிப்தின் இராணுவ ஆட்சியை ஆதரித்து வாழ்த்துச் செய்தியையும் அனுப்பியுள்ளது. மக்களின் உண்மையான எதிரிகளோ மக்களைத் திசைதிருப்பி விட்ட களிப்பில் ஜன நாயகம் மனித உரிமை என்ற தங்களது மாயவேடங்கள் கலைந்துவிடாமல் தொடர்ந்து கொண்டே இருக்கிறார்கள். மக்கள் ஆட்சியை இராணுவம் கவிழ்ப்பது கவலைக்குரியது என அமெரிக்காவும் பிரித்தானியாவும் அறிக்கை வேறு விட்டு இராணுவச் சதியையும் ஆட்சிக்கவிழ்ப்பையும் பின்புறமிருந்து ஆட்டுவிக்கிறார்கள். எகிப்தில் தேர்தல்கள் நடாத்தப்பட்டு ஜனநாயகத்துக்கு நாடு திரும்ப வேண்டும் என்று அறிக்கை விட்டு ஐக்கிய நாடுகள் சபையோ என்றும் போலவே தனது கோமாளி வேடத்தை தொடர்கிறது.



# சிதைக்கப்படும் யோனிகள்

## சிதைக்கப்பட்ட பெண்களது உடலும்,உயிரும் வாழ்நாள் முழுதும் மரணத்தில் வாழும்

மழை போல் பொழிந்து தள்ள பட்டுக்கொண்டிருந்த குண்டுக ளிடம் இருந்து தப்ப பதுங்கு குழிகளை தேடி பாய்ந்து ஓடினா ர்கள். காடுகளிற்குள் பாம்புகள் சீறிக் கொண்டிருந்த பற்றைகளி ற்கு பக்கத்தில் பயந்து ஒளிந்திருந் தார்கள். ஆண்களிற்கும்,பெண்களி ற்கும் மரணம் அங்கு பொதுவாக இருந்தது. ஆனால் பெண்கள் மீது அங்கு இன்னுமொரு கொலை நடந்தது. அது மரணத்தை விட கொடுமையானது. மரணத்துடன் எல்லாம் முடிந்து விடும். ஆனால் கரும் பச்சை சீருடை அணிந் தவர்களால் சிதைக்கப்பட்ட பெண்களது உடலும்,உயிரும் வாழ்நாள் முழுதும் மரணத் தில் வாழும். அவர்கள் சிறுமி கள், இளம் யுவதிகள், நடுத்தர வயது பெண்கள், உடல் தளர்ந்த முதியவர்கள் என்று எவரையும் விட்டு வைக்கவில்லை. இறந்த பெண் போராளிகளின் உடல்களை கூட வெறி கொண்டு சிதைத்தார்கள்.



பிரான்சிஸ் காரிசன் எழுதிய ஈழம், சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள் என்ற நூலில் வன்னி போர்ப் பிரதே சத்திற்கு வெளியில் வவுனியாவில் மணிமொழி என்ற பெண்ணிற்கு வவுனி யா காவல் நிலையத்தில் நடந்த கொ டுமைகளை பதிவு செய்கிறார். மணிமொழி வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார். அது முடிந்து விட்டது என்று அவர் நினைக்கை யில் இன்னொரு சி.ஐ.டி வந்தான். அவனும் அவரை வன்புணர்வு செய்தான். “அவர்கள் மிருகங்களைப் போல. நான் அழுதேன். அந்த நேரம் நான் நாற்பது நாள் கர்ப்பிணி. இரத்தம் கசிந்தது. கருச்சிதைவு ஏற்பட்டது. இலஞ்சம் கொடுத்து வீடு வந்த பிறகு நான் இருமுறை தற்கொலைக்கு முயற்சி செய்தேன். எனக்கு நிம் மதி என்பதே இல்லாமல் போய் விட்டது”



இவை யுத்தத்தின் மரணப்பிடிக்குள் சிக்குண்டு உலகத்தின் பார்வைக்கு வராமல், பதிவுகள்,சாட்சி யங்கள் எதுவுமின்றி அப் பெண்களினதும்,அவர்களி னது குடும்பத்தினரினதும் மனங்களில் மட்டும் கால காலத்திற்கும் தேங்கிப் போய் நிற்கும் கொடுமைகள் என்றால் போர் நடக்காத மற்றப்பிரதேசங்கள், இன ஒடுக்குமுறைக்கு உட்படாத சிங்கள இனப்பெண்க ளிற்கும் இதே மாதிரி கொடுமைகள் தான் நடக்கி ன்றன. ஒவ்வொரு தொண்ணூறு நிமிடத்திற்கும் ஒரு இலங்கைப் பெண் பாலியல் வன்முறைக்குள்ளா க்கப்படுகிறாள். ஒவ்வொரு வருடமும் பாலியல் வன்முறைகள் கூடிக்கொண்டே செல்கின்றன. 2008 இல் 1582 பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்க ளில் 1157 பேர் பதினாறு வயது கூட தாண் டாத சிறுமிகள். 2012 இல் 1653 பெண்கள் வன்கொடுமைக் ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களில் 1405 பேர் சிறுமிகள்.

இப்படியான குற்றச்சாட்டுக்கள் எழும் போ- தெல்லாம் இலங்கை அரசின் நற் பெயரை க்கெடுக்க சதி, தேசத்தை காட்டிக் கொ டுக்கும் பயங்கரவாதிகளின் பச்சைப் பொய்கள், இலங்கையை இன்னொரு சொர்க்கமாக மாற்ற இருக்கும் ஜனாதி- பதிக்கு அபகீர்த்தி உண்டு பண்ணும் அயோக்கியர்களின் அலம்பல்கள் என்று அதிபர் முதல் அமைச்சர்பெரும- க்கள் வரை அலறித் திரிவார்கள். ஆனால் இந்த புள்ளிவி பரங்களை அவர்களால் மாற்றவோ, மறுக்கவோ முடியாது. ஏனெனில் இந்த புள்ளிவிபரங்களை கொடுத்த- வர் அமைச்சர் தினேஸ் குணவர்த்தனா. கொடுத்த இடம் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றம். பொலிசில் முறைப்பாடு செய்த வன்முறைகளே இத்தனை ஆயிரம் என்றால் பதிவு செய்யப்படாத வன்கொடுமைகள் எத்தனை ஆயிரம் இருக்கும். அரசியல்வாதிகளாலும்,அதிகாரவர்க்கத் தாலும்,ஆயுதப்படைகளாலும் கதறக்,கதற கசக்கி எறியப்பட்ட பின்பு காற்றோடு கலந்த கதறல்கள் எத் தனை ஆயிரம் இருக்கும்.

சிறுவயது பெண்கள் பெரும்பாலும் அவர்களி- ற்கு தெரிந்தவர்களாலேயே வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். குடும்பத்தவர்கள், உறவினர்கள், அயலவர்கள், ஆசிரியர்கள், மதகுருக்கள் என்று பலதரப்பினராலும் அவர்கள் துன்புறுத்தப் படுகிறார்கள். கட்டற்ற ஊடகவளர்ச்சி காரணமாக வீட்டிற்குள்ளேயே வந்து விழும் அழிவுக் கலாச்சாரத்தின் கழிவுகள், அதிகரித்து வரும் மதுபாவனை,வறுமை காரண- மாக மனைவிகள் வெளிநாட்டி- ற்கு வேலைக்கு போக தனித்து விடப்படும் கணவர்கள்,பாலியல் கல்வியை பள்ளிகளில் கற்பித் தால் உலகமே அழிந்து விடும் என்று ஊளையிடும் கலாச்சாரக் காவலர்கள் என்பன இக்கு- ற்றங்களிற்கு பெரும்பாலான காரணிகளாக அமைகின்றன.




காவல் துறையும், நீதி மன்றங்களும் கடுமையான நடவடிக்கை எடுத்து குற்றவாளி- களை தண்டிக்க வேண்டும் என்று சீர்திருத்தவாதிகள் கோருகின்ற- னர். களவு, கொலை, ஊழல், லஞ்சம், அதிகார துஸ்பிரயோ கம் என்று உடல் முழுக்க சேறு பூசிக்கொண்டிருக்கும் இலங்கை யின் அதிகாரவர்க்கம்,குற்றங்க ளின் பிறப்பிடம் எப்படி நடவடி க்கை எடுக்கும். பெண்கள் தம க்கு எதிரான வன்முறைகளிற்கு எதிராக போராட துணிச்சலாக முன்வரவேண்டும். வன்முறைகளிற்கு எதிரான அமைப்பாக அணி திரள வேண்டும். சமுதாயத்தின் மற்றப் பிரச்சனைகளிற்காக போரிடும் முற்போ- க்கு அணிகளுடன் இணைந்து போராட வேண்டும்.

ஏனெனில் பெண்களிற்கு எதிரான வன்முறைகளை வெறுமனே சட்டம், ஒழு ங்கு, நீதி என்பவற்றால் நிறுத்தி விட முடியாது. ஓரளவிற்கு முதலாளித்துவ ஜனநாயகம் நிலவுகிற நாடுகளிலே கூட சட்டங்களினாலே பாலியல் குற்றங்களை குறைக்க முடியவில்லை, தடுக்க முடியவி ல்லை. பெண்களை போகப் பொருளாக, நுகர்வுப் பண்டமாக மட்டும் சித்தரிக்கும் வணிகக் கலாச்சாரம், முதலாளித்துவ பொருளாதாரம் இருக்கும் வரை அவள் விடுதலையாக முடியாது. அவளை அசு த்தமானவளாக, சமமற்றவளாக நடத்தும் மதங்களை உடைக்காமல் அவள் விடு- தலை பெறமுடியாது. உயர்வு, தாழ்வு இல்லாத சமுதாயத்தில் ஆணும் பெ ண்ணும் இணையானவர்கள் என்னும் பண்பாடு நிலவும் வாழ்க்கை முறையில் ஏனைய விலங்குகள் உடைபடும் போது பெண்ணின் விலங்குகளும் உடைபடும்.



**“மனித உழைப்பும், உழைப்பு சார்ந்த மனிதர்களின் கூட்டுவாழ்வும் தான் விஞ்ஞானத்தின் ஆதாரம். இன்று அப்படித்தான். உழைப்பிற்கான பொது உடமையின்றி தனிமைப்பட்டுப் போன விஞ்ஞானமும், ஆய்வுகூடத்தில் கண்டறியும் நுட்பக் கருவி சார்ந்த அறிவும் கூட, கூட்டு உழைப்பில் மட்டும் தான் மனிதனின் தேவைக்கு ஏற்ப மாற்றிப் பயன்படுத்த முடியும்.”**



மார்க்சியம் - 05

# விஞ்ஞானம் என்றால் என்ன? எங்கிருந்து தோன்றுகிறது?

உழைத்து வாழும் ஒவ்வொரு மனிதனும் உழைப்பைச் செலுத்தும் போது, உழைப்புக்கு உள்ளாக்கும் பொருட்கள் பற்றிய அறிவைக் கொண்டிருக்கின்றான். இந்த அறிவு தான் விஞ்ஞானம். இந்த உழைப்புத் தான் விஞ்ஞானத்தின் மூலம். இரண்டையும் ஒன்றிலிருந்து வேறொன்றாகப் பிரிக்க முடியாது. உழைப்பும் அறிவும் இணைந்தது தான் விஞ்ஞானமாகவும், மனித வாழ்வுக்கான அடிப்படையாகவும் இருக்கின்றது.

“விஞ்ஞானம் என்னும் அழியா ஒளி அறியாமை என்னும் திரைக்குப் பின்னே பிரகாசிக்கிறது” என்றார் கார்ல் மார்க்ஸ். இந்த அழியா ஒளியை மனிதர்கள் தமக்குள் கொண்டிருப்பதை அறியா வண்ணம், அறியாமைக்குள் அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றது இன்றைய தனிவுடைமைச் சமூக அமைப்பு. உழைத்து வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும், ஒரு விஞ்ஞானிதான். இதை அறியாது வைத்திருப்பதன் மூலம், அறியாமையைத் திணித்து தனிமனித அறிவை விஞ்ஞானமாக்குகின்ற தனிவுடமை அமைப்பு இது. சமூகத்திற்கு பொருள் பற்றி இருக்கும் பொது அறிவுக்கும், தனிமனிதனுக்கு பொருள் பற்றி இருக்கின்ற கூர்மையான வேறுபட்ட அறிவுக்கும் இடையிலான முரண்பாடும், வளர்ச்சியும் தான் புதிய அறிவாகின்றது. இந்த முரண்பாட்டையும், அறிவையும் முன்னிறுத்துகின்ற தனிவுடமை, பொது அறிவை நிராகரித்து அதை அறியாமையாக மாற்றி விடுகின்றது. முரண்பாடும், வளர்ச்சியும் அது சார்ந்த அறிவும், எல்லா மனிதரிடையேயும் காணப்படுகின்றது. ஆனால் மூலதனத்தை விரிவாக்கும் சந்தையைச் சாராத போது, அறிவு மலடாக்கப்படுகின்றது. சந்தை சார்ந்ததையும், சந்தையை நோக்கியதையும் விஞ்ஞானமாக காட்டுகின்ற தனிவுடமை அமைப்பானது, அது அல்லாத அனைத்தையும் அறியாமையின் கூறாக்குகின்றது. சந்தை சார்ந்த அறிவை முன்னிறுத்தி அதை நுகர்வு வெறியாக்கி அதை மனிதனின் பொது அறிவாக்குகின்றது. நுகர்வும், நுகர்வு வெறியும் அறிவு சார்ந்த விஞ்ஞானமல்ல. இது அறியாமை. உழைப்பு சார்ந்த அறிவும், உழைப்பும் தான் விஞ்ஞானம். இது தான் அழியா ஒளி.

நாம் சமூக விஞ்ஞானம் என்றால், சமூகத்துக்கும் விஞ்ஞானத்துக்குமான மனித உறவும் முரணும் கொண்ட மனித வாழ்வு சார்ந்த கூறு என்பதைப் பார்த்தோம். இந்த வகையில் விஞ்ஞானம் என்றால் என்ன என்று பார்ப்போம். மனித உழைப்பைக் கொண்டு தனக்கு தேவையான பயன்பாட்டு பொருளாக இயற்கையை மாற்றி அமைக்கும் பொருள் பற்றிய அறிவே விஞ்ஞானம். இதனால் தான் மார்க்ஸ் “உழைப்பு தான் எல்லா செல்வங்களுக்கும் மதிப்பளிக்கும் மூலம்” என்றார். மனித உழைப்புக்கு வெளியில், இயற்கை மட்டும் தான் உண்டு. இயற்கையை புரிந்து கொள்ளாத வரை, அவன் குரங்கு தான். மனித உழைப்புக்கு வெளியில் எந்த மனிதக் கூறும் கிடையாது. அது மிருகத் தன்மையாகும். அனைத்தும் மனித உழைப்பு சார்ந்தது. மனித உழைப்பை பொருள் மீது செலுத்தும் போது, மனிதனுக்குள்ள அறிவு தான் விஞ்ஞானம். உழைப்புக்கு வெளியில் விஞ்ஞானம் என்பது கற்பிதமானது. அதாவது உழைப்புக்கு வெளியில் அறிவு இருக்கவும் முடியாது, இயங்கவும் முடியாது.

உழைப்பில் இருந்து தன்னை பிரித்து தனித்து இயங்கும் அறிவு சார்ந்த விஞ்ஞானம், உண்மையில் உழைப்பைச் சுரண்டுகின்ற அறிவு சார்ந்த தனிவுடைமைச் சுரண்டலாகும். இது உழைக்கின்ற அனைத்து மனிதனும், உழைப்பு சார்ந்து விஞ்ஞானியாக இருக்கின்றான் என்ற உண்மையை மறுக்கின்றது. மனித உழைப்புக்கும், அது சார்ந்த வாழ்வுக்கும் வெளியில் அறிவு சார்ந்த விஞ்ஞானம் கிடையாது. இருப்பதாக நம்புவதும், கூறுவதும், மனிதன் மீதான அறிவு சார்ந்த சுரண்டலாகும். இது தனிவுடமை சார்ந்த கூறு.

மனித சமுதாயத்தை மையப்படுத்தாத, சாராத எதுவும் உண்மையல்ல. கார்ல் மார்க்ஸ் கூறியது போல், எதற்கும் “மனிதன் என்பதற்கு மேலான எந்தக் கவுரவமும் இல்லை” மனிதனுக்கு மேல் எந்தப் பொருளுக்கும், எந்த அறிவுக்கும் எந்த பெறுமதியும் கிடையாது. அதற்கு கௌரவமும் கிடையாது. மனிதனை மனிதன் சுரண்டும் இன்றைய தனிவுடமை உலகில் எதிர்மறையாக இவை காட்டப்பட்டு சிந்திக்கப்படுவதே அறிவாகவும், விஞ்ஞானமாகவும் திணிக்கப்படுகின்றது. இது மனிதனை மனிதனாக மதிக்காது, அவனை கௌரவமற்றவனாக்கி தனிவுடமைக்கு அடிமையாக்குகின்றது. இதில் இருந்துதான் பண்பாடுகள் உருவாகின்றது. இந்த பண்பாடு மனிதனை அடிமையாக்குகின்றது. இதனால்தான் மார்க்ஸ் “தலை வணங்குவதையும் கெஞ்சுவதையும் நான் பெரிதும் வெறுக்கிறேன்” என்றார். மனிதனை மனிதனாக பரஸ்பரம் கௌரவிக்காத தனிவுடமை அமைப்பு தான், தன்னை தலைவணங்குமாறும் தன்னிடம் கெஞ்சுமாறும் கோருகின்றது.

மனிதன் சமூகமாக கூடி உழைத்து வாழ்வதற்குப் பதில், உழைப்பைச் சுரண்டுவதன் மூலம் அடிமைத்தனத்தை மனிதன் மீது திணிக்கின்றது. மனிதன் உழைப்பில் இருந்து அன்னியமாகி, உழைப்புக்கும், தன் உழைப்பு சார்ந்த பொருளுக்கும் அடிமையாகின்றான். அதாவது தன் உழைப்புக்கும், தன் உழைப்பிலான பொருளுக்கும் எஜமானாக இருக்க வேண்டிய மனிதன், அதற்கு அடிமையாகின்றான். அடிமைத்தனத்தையே நுகர்வின் வரைமுறையற்ற வெறித்தனத்துக்குள் நுகர்ந்து வாழ்வதே மனித சுதந்திரமாகக் காட்டி அதை மனித அறிவாக்குகின்றனர். மனிதன் தனக்காக தான் உழைத்து வாழவில்லை. உயிர் வாழும் நிர்ப்பந்தம் காரணமாக, பிறருக்காக உழைப்பதன் மூலம் வாழ்கின்றான். மார்க்ஸ் கூறியது போல் “ஒருவன் தனக்காக தன்னுடைய வாழ்க்கைக்காக உழைக்கும்போது தான் அசலான மனிதனாகிறான்” இதுவல்லாத மனிதன் போலிதான். தனிவுடைமையை அடிப்படையாக கொண்டு பிறருக்காக உழைக்கும் இன்றைய உலகில், மனிதன் மனிதனாக அதாவது அசலாக வாழவில்லை. போலியாக வாழ்கின்றான். பிறருக்காக உழைக்கின்ற போது, பிறர் சார்ந்து தான் தனக்கான வாழ்வை அமைக்கின்றான். இதனால் உழைப்பில் போலித்தனமும், செயற்கையான மனிதத்தன்மையும் மனித உறவாகின்றது. மனிதனின் தனக்காக தான் உழைத்து வாழும் பொது இயல்புக்கு முரணான, போலியான வாழ்க்கையையும் சமூகக் கட்டமைப்புக்களையும் கொண்டது தான் இன்றைய தனிவுடமைச் சமூக அமைப்பு முறையாகும்.

மனித இயல்பு இதற்கு நேர்மாறானது. மனிதன் தனக்காக தான் உழைத்து வாழும் அறிவைக் கொண்டு இருந்தான். அந்த உழைப்பை செலுத்தும் பொருட்கள் தனிவுடமையானதால், உழைப்பை மட்டும் கொண்ட மக்கள் சமூகமாகவும், தனிவுடமையைக் கொண்ட சிறிய சுரண்டல் அமைப்பாகவும் பிளவுபட்டுள்ளது. தனிவுடமையைக் கொண்டு உழைப்பில் இருந்து மனித அறிவைப் பிரித்ததன் மூலம், விஞ்ஞானம் தனிவுடமையானது. தனிவுடமையற்ற மனிதன், தன் உழைப்பை மட்டும் விற்கும் நிலைக்கு தாழ்த்தப்பட்டான்.

மனிதனின் உழைப்பு தான் விஞ்ஞானத்தின் ஆதாரம். தனிவுடமை அமைப்பில் உழைப்பும் விஞ்ஞானமும் பிரிந்து சுரண்டல் வடிவமாகி விடுகின்றது. இதற்கு நேர்மாறானதே மனித தோற்றம். எப்போது மனிதன் இயற்கையைச் சார்ந்து வாழாமல் உழைப்புச் சார்ந்து வாழத் தொடங்கினானோ, அப்போதே பொருள் பற்றிய அறிவும், மனிதனுடன் வளரத்தொடங்கியது. தன் வாழ்வின் தேவையையொட்டி பொருளை இயற்கையில் தெரிந்து கொண்டிருந்த மனிதன், உழைப்பு மூலம் தனது தேவைக்கு அதை பயன்படுத்தத் தொடங்கிய அறிவு தான் விஞ்ஞானம். அன்று தடியை பயன்படுத்தியது முதல் இன்று தொடு திரையை தொட்டு இயங்க வைக்கும் எந்த செயற்பாடாகவும் இருக்கட்டும், அவை அனைத்தும் மனித வாழ்வுக்கு அடிப்படையானவை. அறிவு வளர்ச்சி மனித வரலாற்றில் இருந்து விலகியதில்லை, அவை தனித்தனியாக பிரித்து பார்க்க முடியாதவை. மனிதன் இன்றைய அறிவு நிலையை வந்தடைய பல ஆயிரம் வருட அறிவு மட்டுமின்றி, அதன் தொடர்ச்சியும் இன்றி சாத்தியமற்றதாகும்.

மனித உழைப்பும், உழைப்பு சார்ந்த மனிதர்களின் கூட்டுவாழ்வும் தான் விஞ்ஞானத்தின் ஆதாரம். இன்று அப்படித்தான். உழைப்பிற்கான பொது உடமையின்றி தனிமைப்பட்டுப் போன விஞ்ஞானமும், ஆய்வுகூடத்தில் கண்டறியும் நுட்பக் கருவி சார்ந்த அறிவும் கூட, கூட்டு உழைப்பில் மட்டும் தான் மனிதனின் தேவைக்கு ஏற்ப மாற்றிப் பயன்படுத்த முடியும். தனிவுடமையாகி தனிமைப்பட்டு போன அறிவு கூட, மனிதனின் கூட்டு உழைப்பின்றி பயன்படுத்த முடியாது. ஆக தனிவுடமை அமைப்பில் கூட, உழைப்புக்கு வெளியில் எதுவும் கிடையாது. தனிவுடமை அறிவு ஆயிரம் ஆயிரம் வருட மனித அறிவுக்கு வெளியில் இருந்து உருவாவதில்லை.

மனிதன் உழைப்பை நிராகரித்தால், இயற்கையை மட்டும் சார்ந்து வாழும் மிருக நிலையைக் குறிக்கும். ஆக உழையாது வாழ்தல் என்பது, பண்பு ரீதியாக மிருகத்தனமாகும். மற்றவன் உழைப்பைச் சுரண்டி வாழ்வது உழைப்பல்ல, பண்புரீதியாக அது காட்டுமிராண்டித்தனமானது. உழைப்பும், கூட்டுவாழ்வும் தான் மனிதனுக்குரிய பண்புக் கூறாகும். மனித அறமாகும்.

மனிதன் இயற்கை சார்ந்து வாழ்ந்த காலத்தில், அவன் மனிதக் குரங்குக்கு முந்தைய குரங்காக இருந்தான். அதாவது குரங்கு நிலையில் குரங்கு மனிதனும், குரங்கு மனிதனில் இருந்து மனிதனுமாக பரிணமிக்க காரணமாக இருந்தது, பொருளை தனது வாழ்வுக்கு ஏற்ப பயன்படுத்திய உழைப்புத்தான். இயற்கையில் வாழ்வதற்கான போராட்டம், இயற்கையான பொருட்கள் மேலான மனித உழைப்பாக பரிணமிக்கின்றது. இயற்கையைக் கடந்து, இயற்கையைப் பயன்படுத்தி தன் தேவையைப் பூர்த்திசெய்த போதான உழைப்பும், அது சார்ந்த அறிவும் தான் விஞ்ஞானமானது. தனிவுடமை அமைப்பில் கூட கூட்டு உழைப்புதான் மனித வாழ்வின் ஆதாரமாக இருக்கின்றது.

இயற்கையில் வாழ்ந்த போதும், இயற்கை மீதான உழைப்புச் சார்ந்து வாழ்ந்த போதும், மனிதனின் கூட்டு உழைப்பு மனித வாழ்வுக்கு ஆதாரமாக இருந்தது. மனித அறிவும் கூட, கூட்டாக இருந்தது. பாடவும், ஆடவும், உழைக்கவும், பொருளைக் கண்டறியவும். தன்னை தற்காக்கவும் மனிதனின் கூட்டு உழைப்பும் வாழ்வும் அவசியமானதாக இருந்தது.

**(தொடர்ச்சி 2ம் பக்கத்தில்)**





**மாதம் ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாவை பிள்ளைகளின் கல்விக்காக செலவழிக்க கூடியவரா நீங்கள், அப்படியானால் அடுத்த பக்கத்திற்கு செல்லுங்கள், இது உங்களுக்கு தேவையில்லாத விடயம். பிள்ளைகளை வைத்தியராக அல்லது பொறியியலாளர்களாக்கிட கனவுக்கானும் சாதாரண உழைக்கும் வர்க்க பெற்றோர்களுக்கானது இப்பந்தி. எந்த ஒரு பெற்றோர்க்கும் இருக்கும் கனவு இது. அநேகமாக நிறைவேறா விடினும் கண்ட கனவை நனவாக்கிட அவர்கள் வேலைத் தளங்களில் உழைப்பை விற்றுப்படும்பாடு பிள்ளைகளுக்கு கல்வி என்பதினை வழங்கி மேம்பட்ட நிலைக்கு அழைத்து செல்கிறது.**



# மாணவர்–தொழிலாளர் கூட்டிணைவே இலவசக் கல்வியை வென்றெடுக்கும் !

தன் மழலை செல்வங்களை நினைத்தப்படி வைத்தியர்களாகவோ பொறியியலாளர்களாகவோ ஆக்கிட முடியாவிடினும் கனவேனும் காணக் கூடியதாகவுள்ளது. குறைந்த பட்ச கல்வி அறிவையேனும் பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்க கூடியதாக உள்ளது. இதற்கு காரணம் கல்வி இலவசமாக கிடைப்பதாகும். ஆனால் தொடர்ந்து நிலைமை இப்படியே இருக்க போவதில்லை. அரசு இது வரை இலவசமாக வழங்கி வந்த கல்வியை மெல்ல மெல்ல தனியார் கைகளில் ஒப்படைத்து வருகின்றது. எதிர் காலத்தில் பெற்றோர்களிடம் எவ்வளவு பணம் இருக்கின்றதோ அந்தளவிற்கு தான் பிள்ளைகள் கல்வி கற்க முடியும் என்ற நிலை உருவாகி வருகின்றது.

இதனை பெற்றோர்கள் தற்போதும் உணர ஆரம்பித்திருக்கின்றார்கள். வீட்டில் உயர்தரம், சாதாரண தரம் அல்லது புலமை பரீசில் பரீட்சைக்கு தோற்றும் பிள்ளைகள் இருக்கும் பெற்றோர்களுக்கு இது தொடர்பான நல்ல அனுபவம் இருக்கும். தனியார் வகுப்புக்களுக்கு சென்றால் தான் நல்ல பெறுபேறுகளை பெற முடியும் என்ற நிலை. மாதாமாதம் ஆயிரக்கணக்கில் மேலதிக வகுப்பு கட்டணங்களிற்காக செலிவழிக்க முடிந்தவர்களாலேயே மேற்படிப்பு பட்டபடிப்பு தொடர்பாக சிந்திக்க முடியும். இதனை தவிர பாடசாலைகளில் அறவிடப்படும் கட்டணங்களும் அதிகம். தற்போது பாடசாலைகளில் பெற்றோர்கள் சிரமதான பணிகளிலும் ஈடுபட வேண்டியுள்ளது. தற்போது பெற்றோர்களாக இருப்பவர்கள் மாணவர்களாக இருந்த போது காணப்பட்ட நிலைமைக்கும் தற்போதைய நிலைமைக்கும் பாரிய வித்தியாசங்கள் ஏற்ப்பட்டுள்ளன. முன்பு பாடசாலையில் சீருடைகள், பாடபுத்தகங்கள் என்பன இலவசமாக வழங்கப்பட்டன. உணவு நிவாரண அட்டைகள் வழங்கப்பட்டன. அரச பேரூந்துகளில் பயணிக்க பருவ சீட்டுக்கள் வழங்கப்பட்டன. பாடசாலைகளில் தவணைக் கட்டணமாக வருடாந்தம் சிறு தொகையே அறவிடப்பட்டது. ஆனால் இன்று நிலைமை வேறு. உணவு நிவாரண அட்டை நிறுத்தப்பட்டு இருபது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. பாடசாலைகளில் அறவிடப்படும் கட்டணங்களிற்கு அளவே இல்லை. இன்று பாடசாலைகளுக்கு வர்ணம் பூசுவது, பாடசாலை சூழலை சுத்தம் செய்வது, பாடசாலை காவலாளிக்கு சம்பளம் கொடுப்பது என பாடசாலையை நடத்தும் முழுபொறுப்பும் பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள், பாடசாலை மாணவர் சங்கங்கள் ஊடாக பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாடசாலையில் கற்பிக்கப்படுவது சரியில்லை என அனைவரும் மேலதிக வகுப்புக்களை தேடி செல்கின்றார்கள். பாடசாலை கல்வி பின்தள்ளப்பட்டு தனியார் மேலதிக வகுப்புக்கள் முதன்மையானதாக்கப்படுகின்றன. பாடசாலை ஆசிரியர்களை தவிர்த்து இன்று பிரபலமான தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் தோன்றியுள்ளனர். பாடசாலை ஆசிரியர்கள் மீதான நம்பிக்கையும் மரியாதையும் இல்லாது போயுள்ளது. பாடசாலை பாடபுத்தகங்களிற்கு மேலதிகமாக பல புத்தகங்கள் கடைகளில் வாங்கச் சொல்லப்படுகின்றது. மொத்தத்தில் பிள்ளைகளுக்கு கல்வி அறிவை பெற்றுக் கொடுக்க அதிகளவிளான பணத்தினை செலவு செய்ய வேண்டியுள்ளது. இலவச கல்வி என்ற பெயர் இன்னும் பாவனையில் இருப்பதற்கு காரணம் பாடபுத்தகங்களும் பாடசாலை சீருடைகளும் இலவசமாக வழங்கப்படுவது மாத்திரமே ஆகும். மெல்ல மெல்ல அந்த இலவசங்களையும் இல்லாது செய்யும் திட்டங்கள் மெல்ல மெல்ல கொண்டுவரப்படுகின்றன. இதற்கு எதிராக “அரசாங்கம் பாடபுத்தகங்களை பணத்திற்கு விற்க முயல்கிறது” என விமர்சனங்கள் கிளம்பி போது, “இல்லை,இல்லை நாம் ஒரு போதும் இலவச பாடபுத்தக விநியோகத்தினை நிறுத்த போவதில்லை, பாடசாலைகளில் இலவசமாக விநியோகிக்கும் அதே வேளை ஏனையோரும் சர்வதேச பாடசாலைகளில் கற்கும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் குறிப்பிட்டளவில், அரசாங்க பாடபுத்தகங்களை கடைகளில் பணத்திற்கு விற்பனை செய்ய போகின்றோமே ஒழிய இலவச பாடபுத்தக விநியோகத்தினை ஒருபோதும் நிறுத்தும் திட்டம் இல்லை” என அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் எதிர்ப்பு கிளப்பிய எதிர்கட்சிகளும் இது விற்பனையாகாது என்று அந்த விடயத்தினை மறந்தவிட்டன. மேலோட்டமாக பார்க்கும் போது சின்னதொரு விடயமாக தோன்றினாலும் இது பாரதூரமானதொரு விடயமாகும். காரணம் நடக்க போவது இது தான். அரசாங்கம் கடைகளில் பாடபுத்தகங்களை விநியோகிக்கும் அதே வேளை பாடசாலைகளில் இலவசமாக விநியோகப்பதினையும் நிறுத்தப்போவதில்லை. அரசாங்கம் பாடபுத்தக விநியோகிகத்தினை நிறுத்தினால் பாரிய எதிர்ப்புக்களை சந்திக்க நேரிடும். ஆகவே இலவச விநியோகம் நடக்கும் ஆனால் முன்னர் போல் அல்ல இரண்டு மூன்று அல்லது அதனை விட அதிகமான கால இடை வெளியில். சில நேரம் கடைகளுக்கு முன்னதாக விநியோகித்து ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் கடந்த பிறகு தாமதமாக பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படலாம். என்ன நடக்கும் பாடபுத்தகங்கள் ஒவ்வொரு வருடமும் விநியோகிக்கபடாவிடின் மாணவர்கள் பழைய புத்தகங்களை பயன்படுத்த நேரிடும். இதன்போது பணம் படைத்தவர்களின் பிள்ளைகள் கடைகளில் விற்பனையாகும் புதிய பாடபுத்தகங்களை வாங்கி பயன்படுத்த ஆரம்பிப்பார்கள். இது மாணவர்களிடையே கடுமையான தாழ்வு சிக்கலை உருவாக்கிடும். பின் ஏனைய மாணவர்களும் தன் பெற்றோரை நச்சரிக்க ஆரம்பித்து விடுவார்கள். பாசமிகு பெற்றோர்கள் கடன் வாங்கியேனும் தன் பிள்ளைகளுக்கு புதிய பாடநூல்களை வாங்கி கொடுத்து விடுவார்கள். மறுபுறம் தற்போது பெற்றோர்கள் தன் பிள்ளைகளை மூன்றாம் தவணை விடுமுறையிலேயே அடுத்த வருடம் கற்க வேண்டிய பாடங்களை கற்பதற்காகவும் பாடசாலைகளில் கற்பிக்க முன் பிள்ளைகளுக்கு கற்பித்து பிள்ளைகளை திறமையாளர்களாக்கிட வேண்டும் என்ற ஆவலிலும் மேலதிக வகுப்புகளிற்கு அனுப்ப ஆரம்பித்துவிடுகின்றனர். இந்த நிலையில் பாடபுத்தகங்கள் கடையில் கிடைக்கும் ஆயின் எப்பாடு பட்டாலும் அதனை வாங்கிகொடுத்து விடுவார்கள் நம் பெற்றோர்கள். காலபோக்கில் இது சாதாரணவிடயமாகிட இலவச பாடபுத்தக விநியோகமும் நிறுத்தப்படும். அப்போது அது ஒரு பிரச்சினையாகவே தோன்றாது. ஆனால் நடுத்தர வர்க்கத்திற்கு இந்த நிலையை சமாளிக்க கூடியதாகவிருப்பினும் தொழிலாளர்கள், மீனவர்கள், கூலி விவசாயிகளுக்கு இது பெரும் நெருக்கடியையே தரும். இந்த விடயமே கிராம சேவையாளர்கள் மூலம் சீருடை விநியோகிக்கப்பட்டதின் மூலமும் முயற்சிக்கப்பட்டது. அத்தனை சவால்களையும் சிரமங்களையும் சுமந்து பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றார்கள் பெற்றோர்கள். ஆனால் இன்று பரீட்சை வினாத்தாள்கள் பிழையாக தயாரிக்கப்படுகின்றன. விடைத்தாள் திருத்துவதில் குழறுப்படிகள் நடக்கின்றன. பாடபுத்தகங்களில் பிழைவிடப்படுகின்றன. தொடர்ச்சியான இப்படியான குளறுப்படிகள் கல்வியின் தரத்தினை வீழ்ச்சியடைய செய்துள்ளதோடு மாணவர்கள் கல்வியின் மீது கொண்டிருந்த நம்பிக்கையும் ஆர்வமும் இழக்க செய்யப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் என்ன? காரணம் மிக தெளிவானது. அரசாங்கம் மக்களுக்கு கல்வியை வழங்கும் பொறுப்பிலிருந்து விலகி அந்த பொறுப்பினை தனியார் கைகளில் ஒப்படைத்திடும் திட்டத்தினை மெல்ல மெல்ல அரங்கேற்றி வருகின்றது. இலவச கல்வியானது சூட்சமான முறையில் தனியார் மயமாகும் இடைமாறு காலகட்டத்தின் நெருக்கடிகள் தான் இவை. இடைமாறுகால கட்டமே இத்தனை நெருக்கடிகளை தருகிறது என்றால், இலவச கல்வி முற்றுமுழுதாக தனியார் மயமானால் ஏற்படப்போகும் நிலையை அனுமானிக்க கூடியதாகவிருக்கும். அரசாங்கம் ஏன் கல்வியை தனியார் மயமாக்கிறது என்ற வினா எழலாம் உங்களுக்கு. அரசாங்கம் இதற்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களில் அதிகமானவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று கல்விகற்கின்றார்கள். இலங்கையில் தனியார் கல்வி நிறுவனங்களை அமைத்தால் வெளிநாடுகளுக்கு சென்று கல்வி கற்கும் மாணவர்கள் செலவழிக்கும் பணத்தினை சேமிக்கலாம், மாணவர்களுக்கு கல்வி கற்க உள்நாட்டிலே அதிக வாய்ப்பும் தெரிவும் கிடைக்கும், வெளிநாட்டு மாணவர்களை இலங்கையில் கல்வியை தொடர வரவழைப்பதின் மூலம் அந்நிய செவவானியை உழைக்க முடியும் என மூன்று காரணங்களை கூறுகின்றது.

உண்மையில் வெளிநாடுகளுக்கு இந்நாட்டின் சாதாரண குடும்ப பிள்ளைகள் சென்று படிப்பதில்லை. நாட்டின் செல்வந்தர்களின் பிள்ளைகளே வெளிநாடுகளுக்கு சென்று கல்வி கற்கின்றார்கள். இவர்கள் வெளிநாடுகளின் சிறந்த பல்கலைக்கழகங்களில் கௌரவத்திற்காக சென்று படிப்பவர்கள். அதனை விட சாதாரண குடும்பங்களை சேர்ந்தவர்கள் தொழில் செய்வதற்காகவே, தொழில் விசா கிடைக்காததினால் இலகுவாக பெற கூடிய மாணவர் விசாவில் சென்று பகுதி நேரமாக படித்துக் கொண்டு தொழில் செய்கின்றார்கள். அதனை விட கணிசமான அளவில் படிப்பதற்காக செல்லும் மாண வர்கள் அந்நாடுகளில் பகுதிநேர தொழில் செய்தே படித்து வருகின்றார்கள். இதன் படி பார்த்தால் வெ ளிநாடு செல்லும் மாணவர்களை என்ன செய்தாலும் தடுத்து நிறுத்திட முடியாது என்பதுடன் அவ்வாறு செல்பவர்களினால் குறிப்பிட்டளவு பணம் நாட்டிற்கு வருகிறது என்பதுவே உண்மையானதாகும்.


அடுத்ததாக தனியார் கல்வி மூலம் அனைவருக்கும் விருமபியதினை தெரிவு செய்து கற்கும் வாய்ப்பு கிடைக்கும் என்பது முற்றுமுழுதான பொய் பிரச்சாரம் ஆகும். உதாரணத்திற்கு தற்போது மாலபே எனும் இடத்தில் தனியார் மருத்துவ கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. இங்கு மருத்துவ பட்டபடிப்பிற்கான கட்டணம் அறுபத்தைந்து இலட்ச ரூபாய்களாகும். அத்துடன் ஒரு மாணவனுக்கான மாதாந்த செலவு ஒருலட்சத்து பத்தாயிரம் ரூபாய்களாகும். இந்த நாட்டில் எத்தனை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இவ்வாறான தொகையை செலவு செய்து மருத்துவ படிப்பினை பெற்று கொடுக்க கூடியவர்களாக இருக்கின்றனர்? கல்வி தனியார் கைகளில் கிடைத்தால் அது பணம்படைத்தவர்களுக்கு மட்டும் உரியதானதொன்றாகிவிடும். அப்படியாயின் அரசாங்கம் கல்வியை தனியார் மயப்படுத்துவதில் விடாபிடியாக நிற்பதன் காரணம் என்ன? எம் நாட்டு அரசாங்கத்திற்கு அதிகளவு கடன்கொடுத்து இயக்குவது உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமுமே ஆகும். இவை இலங்கைக்கு கடன் வழங்கும் போது மக்களுக்கான நலன்புரி சேவைகளை வழங்குவதற்கு மேற்கொள்ளும் செலவீனங்களை குறைத்திடுமாறு நிபந்தனை விதிக்கின்றனர். காரணம் இந்த உலக நிறுவனங்களின் பின்னால் இருப்பது உலக ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளே ஆகும். அவர்கள் இந்நிறுவனங்களினூடாக எம்போன்ற நாடுகளுக்கு கடன் கொடுப்பதன் நோக்கம் அந்நாடுகள் எம்நாட்டில் முதலீடுகளை செய்து வருமானமீட்டுவதற்கான உட்கட்டமைப்புக்களை ஏற்படுத்துவதற்கே ஆகும். சுய உற்பத்தி பொருளாதாரம் இல்லாத ஒரு நாட்டு அரசினால் மக்களுக்கு நலன்புரி சேவைகளை இலவசமாக வழங்கி கொண்டு உட்கட்டமைப்புக்களை ஏற்படுத்த முடியாது. அதற்கு பதிலாக அரசின் செலவீனங்களை குறைத்து கிடைக்கும் கடனில் உட்கட்டமைப்புக்களை விருத்தி செய்கிறது. உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் நிபந்தனையையும் தன் தாரக மந்திரமாக கொண்டு அரசாங்கம் செயற்படுகிறது, ஏற்கனவே போக்குவரத்து சேவையும் சுகாதார சேவையும் தனியார் மயமாக்கப்பட்டுவிட்டது. அடுத்தது கல்வித்துறை தான்.

அதன் அடிப்படையில் தான் இவ்வாண்டிற்கான கல்விக்கான நிதி ஒதுக்கீடாக 1.1% எனும் மிககுறைந்த தொகையை ஒதுக்கியது தற்போதைய அரசாங்கம். உலகளவில் கல்விக்கு தேசிய உற்பத்தி வருமானத்தில் 6% நிதி ஒதுக்கப்படல் வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையும் அதில் கையெழுத்திட்டுள்ளது. ஆனால் இதுவரை அந்தளவு நிதி ஒதுக்கப்பட்டது இல்லை. கடந்த வருடம் 2.2% ஒதுக்கப்பட்டது. அதனை இவ்வருடம் 1.1% குறைத்தது அரசாங்கம். குறைத்ததும் இல்லாமல் நிதியமைச்சரான சனாதிபதி தன் வரவு செலவு திட்ட உரையில் அரசாங்கம் ஒதுக்கும் நிதியையும் பெற்றோர்கள் செலவு செய்யும் நிதியையும் இராணுவத்திற்கு கல்வி வழங்க ஒதுக்கபடும் நிதியையும் சேர்த்து கல்விக்கு நாட்டில் 5.5% செலவு செய்யப்படுவதாக கணக்கு காட்டி எல்லோர் தலையிலும் மிளகாய் அரைத்தார். நம் நாட்டின் சனாதிபதிக்கு மட்டும் தான் இப்படி பொய் கூற முடியும். இவ்வாறு கல்விக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்படும் போது அரசு கல்வியை வழங்கும் பொறுப்பிலிருந்து விலகி தனியாரிடம்

**(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)**

# சீனாவின் ஏகாதிபத்திய கனவும் அணுஆயுத – விண்வெளி ஆதிக்கமும்





பெய்ஜிங்கில்,அமெரிக்க பொதுவுடமை எதிர்ப்பாளன் செனற் உறுப்பினர் ஜோப் மெக்கார்த்திக்கு சிலை வைக்கப் படவில்லை. ஆனால் சீனாவின் அணுவாயுத, விண்வெளி ஆராய்ச்சிக்கும், இன்று அது அடைந்துள்ள அணுவாயுத - விண்வெளிசார் அபிவிருத்திக்கும் ஜோசப் மெக்கார்த்தி தான் உண்மையான தந்தை என்பதால் சீனர்கள் அவருக்கு சிலை வைத்திருக்க வேண்டும்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் சீனாவைச் சேர்ந்த விஞ்ஞானியான Qian Xuesen, அமெரிக்க பாதுகாப்புச் சார்ந்த நிறுவனமான Pentagon இல் உள்ள Jet Propulsion Laboratory இல் ஆய்வாளனாக பணியாற்றினார். விண்வெளி மற்றும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகலம் பற்றிய ஆய்வுமுடிவுகளும், அவரின் திறமையும் US Air Force தலைமையை ஆச்சரியம் கொள்ள வைத்தது. அதனால், அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமை அவரை ஜெர்மனிக்கு அனுப்பி, ஹிட்லரின் ஜெர்மன் ஏவுகலத்திட்டத்தின் மூளையாகவிருந்த Werner von Braun இடம் மேலும் கற்றுக்கொள்ள வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. ஏவுகல ஆராய்ச்சியில் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிப் பயணப்பட்ட Qian ஜேர்மனியில் இருந்து திரும்பிய பின் McCarthyism அவரை 1950 இல், கம்யூனிஸ்டு எனக் குற்றம் சாட்டி சிறை யிலடைத்தது.

அதன் பின் வீட்டு காவலில் வைக்கப்பட்ட Qian Xuesen, 1955 ம் ஆண்டு மாவோ சேதுங் இன் ஆட்சியிலிருந்த சீனாவிற்க்கு நாடு கடத்தப்பட்டார் . இந் நாடு கடத்தலை, அமெரிக்க பாதுகாப்பு தலைமைகள் எதிர்த்த போதும் நிறுத்த முடியவில்லை. உதாரணமாக, கடல்சார் போர்ப்படைகளுக்கு பொறுப்பாயிருந்த மந்திரி Daniel Kimball, “Massachusetts Institute of Technology (MIT) ல் பயின்ற Qian Xuesen, ஐந்து படையணிகளுக்கு நிகரானவர். Qian Xuesen நாடு கடத்தப்படுவதை விட அமெரிக்காவிலேயே அவரைக் கொன்று விடுவது நல்லதென்று விவாதித்தார். அவரது விவாதங்களும், தலையீடும் கூட நாடு கடத்தலை நிறுத்த முடியவில்லை.

சீனாவுக்கு நாடுகடத்தப்பட்ட Qian Xuesen, தலைவர் மாவோவினால் இருகரங்களும் நீட்டி வரவேற்கப்பட்டார். மாவோ முன்னிலையில், க்யான் சீனக் கம்யூனிசக் கட்சியின் ஆட்சிக்கு விசுவாசமாக உறுதிமொழி ஏற்றுக்கொண்டு, சீனாவின் நீண்ட தூர ஏவுகணைகளை உருவாக்கும் திட்டத்தை உருவாக்கி, அதற்கு தலைமை வகித்தார். 1964 ல் சீனாவின் முதல் அணுவாயுதப் பரிசோதனையின் பின், 1966 இல், கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு வெடிபொருள் கொண்ட ஏவுகணை ஜின்ஜியாங் பாலைவனத்தில் பரிசோதிக்கப்பட்டு, வெற்றிகரமான முடிவைத் தந்தது. அதே போன்று Qian Xuesen தலைமையிலான விஞ்ஞானிகள், வெற்றிகரமாக முதலாவது சீன செயற்கைக்கோள் Dong Fang Hong 24 ஏப்ரல் 1970 அன்று விண்ணிற்கு ஏவினர். இவை அனைத்திற்கும் காரணமான Qian Xuesen சீன தேசத்திற்கான நீண்ட சேவையின் பின் 1991 ல் ஓய்வு பெற்ற பின், 2009 ல் இறந்தார். இவ்வாறு சீனாவின் அணுவாயுத - விண்வெளித் திட்டம் மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளால் உன்னிப்பாக கவனிக்கும் நிலையில் இன்று வளர்ச்சி அடைந்துள்ளது.

Qian Xuesen இறப்புக்கு பிற்பட்ட கால அணுவாயுத மற்றும் விண்வெளி ஆய்வுகள், சீனாவினால் மிகச் சிக்கலான அணு -விண்வெளி சார்ந்த அறவியற் சவால்களை வெற்றி கொள்ள வைத்துள்ளது. இதன் பயனாக 2003 இல் புதிய வகை அணுவாயுதப் பரிட்சாத்த வெடிப்புகளை மேற்கொண்டதுடன், அதேவருடம் 14 ஒக்டோபரில் மனிதர்களை ஓட்டிகளாகக் கொண்ட விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டது. இதன் அடிப்படையில், அமெரிக்கா, ரசியாவுக்கு அடுத்ததாக மூன்றாமிடத்தில் விண்வெளிசார் ஆதிக்கச் சக்தியாக சீனா உருவெடுத்துள்ளது. சீனாவின் விண்வெளித் திட்டமும் அதன் நண்பர்களும் இது ஒருபக்கமிருக்க, ரஷிய, அமெரிக்க நாடுகளின் வியாபாரக்களமாக இருந்துவரும் விண்வெளிக்குச் செயற்கைக் கோள்களை அனுப்பும் வணிகத்திலும், மேற்படி நாடுகளுக்கு இணையாகச் சீனா களமிறங்கியுள்ளது. இந்தக் களத்தினை விரிவுபடுத்தவும், தனது ராணுவ - பாதுகாப்பு மற்றும் ஏகாதிபத்திய நலன்களுக்கு ஏதுவாக செயற்கைக்கோள்களை அனுப்பும் வியாபாரத்தை உபயோகிக்கவும் பயன்படும் வகையில் சீன விண்வெளி நிறுவனம் (CNSA) 90 களின் ஆரம்பத்தில் தொடங்கப்பட்டது.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின் வந்த காலத்திலேற்பட்ட, சர்வதேச அரசியல் வெற்றிடத்தைக் கையாளும் வகையிலான முறையில் திட்டங்களைத் தீட்டிய சீனா, கூடுமான அளவுக்கு நடுத்தர வருமானங்களைக் கொண்ட ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளைத் தன் நண்பனாக்கியது. வட்டியில்லாக் கடன், நீண்டகால அடிப்படையில் இலகுகடன், நட்பு அடிப்படையில் இலவசமாக உட்கட்டமைப்புகளைக் உருவாக்குதல், உள்நாட்டு அரசியலில் தலையிடாத கொள்கையின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல் போன்ற வழிமுறைகள் மூலம் சீனா பல நாடுகளை தன் நண்பனாக்கியது. இவ்வகையில் சீனாவின் நண்பர்களாக இருப்பவர்களில், வெனிசுவேலா, பாகிஸ்தான், பிரேசில், இந்தோனேசியா, இலங்கை, நமிபியா, கென்யா போன்றன குறிப்பிடத்தக்கவை. இந்த நாடுகளை இங்கு குறிப்பிடக் காரணம், இவை அனைத்தும் இன்று சீனாவின் அணு - விண்வெளி நிகழ்ச்சித் திட்டத்துக்கு உட்பட்டவைகளாக இருக்கின்றன. இந்த நாடுகளுடன் இன்றுவரை பகிரங்கமாகச் சீனா அணுவாயுத ஒப்பந்தம் செய்யாத போதும், இந்நாடுகளுடன் நேரடியாக விண்வெளிசார் பாதுகாப்பு, வர்த்தகம் சார்ந்த ஒப்பந்தங்களைச் சீனா கைச்சாத்திட்டுள்ளது. இந்நாடுகளுக்காக செயற்கைக்கோள்கள் அனுப்புவது, அவற்றை நிர்வகிப்பது போன்ற வேலைகளை இன்று சீன நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

இன்று சீனாவின் செயற்கைக்கோள்கள் நிர்வகிப்பு நிலையங்கள் பாகிஸ்தான், கென்யா, கிரிபத்தி, நமிபியா போன்ற நாடுகளில் உள்ளது. இலங்கையிலும், மேலும் பதினைந்து நாடுகளிலும் நிறுவும் வேலைகளை சீன நிறுவனங்கள் இன்று மேற்கொள்கின்றன.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட செயற்கைக் கோள்களை அனுப்பும் வணிகத் திட்டத்தின் தொடர்ச்சியாகவே - அதற்கு இணைவாகவே, கடந்த வருடம் இலங்கைக்கு சொந்தமான செயற்கைக்கோள் சீன அரச நிறுவனமான China Great Wall Industry Corp இனால் ஏவப்பட்டது . அதனை விடுத்து மகிந்த ராஜாபக்சவின் மகனாகிய ரோஹித்தாவின் விருப்பத்தில் பெயரிலும், அவரின் வழிகாட்டுதலின் மூலமும் மேற்படி செயற்கைக்கோள் சீனாவால் ஏவப்படவில்லை. சீனாவால் ஏவப்படும் செயற்கைக் கோள்கள், வியாபாரரீதியான, தொலைத்தொடர்புக்கான வணிகக்கோள்கள் எனக் கூறப்பட்டாலும், அவை அனைத்தும் சீனாவின் அணு - விண்வெளி மேலாதிக்க - ஏகாதிபத்திய நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற உபயோகப்படுத்தப்படக் கூடியவை என்றே அணு - விண்வெளி ஆய்வுசார் நோக்கர்கள் கூறுகின்றனர். இக்கருத்துக்கு, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்களும் ஆமோதிப்பு தெரிவிக்கின்றனர்.

### சீனாவின் வளர்ச்சியும், கிழட்டு ஏகாதிபத்தியங்களின் கவலையும்

சீனாவின் அணுவாயுத மற்றும் விண்வெளிசார் கேந்திர முக்கியத்துவ ஆயுத உற்பத்தியும், அது சார்ந்த சீனாவின் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சித் திட்டமும், கிழட்டு ஏகாதிபத்திய நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளையும், ஏகாதிபத்தியக் கனவிற் திளைத்தபடி, மேற்கு ஏகாதிபத்திய நாடுகளுக்கு அடிவருடியாகச் செயற்படும் இந்தியா, இஸ்ரேல் போன்ற நாடுகளையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

அணுவாயுதத்தையும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தன் ஆயுதங்களையும், சுயபாதுகாப்பிற்காக - தன் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின் மட்டுமே உபயோகப்படுத்தப் போவதாகச் சீனா ஆரம்பத்திலிருந்தே கொள்கைப்பிரகடனம் செய்திருக்கின்றது. அத்துடன் விண்வெளியை, நாடுகளுக்கிடையிலான பாதுகாப்புச் சார்ந்த முரண்பாடுகளை தீர்க்கும் இடமாக இருப்பதைத் தவிர்க்க வேண்டுமெனவும் அது பேசிவருகிறது. ஆனாலும் இப்பிரகடனங்கள் எவையும் மேற்படி ஏகாதிபத்திய நாடுகளையும், அதன் அடிவருடிகளையும் திருப்திப்படுத்தவில்லை. காரணம், இன்றுவரை சீனாவின் அணுவாயுத- மற்றும் விண்வெளிசார் கேந்திர முக்கியத்துவ ஆயுதங்களின் தொகை, வகை யாருக்கும் தெரியாமல் இருப்பதே. இந்த வகையில் (Ballistic rocket with nuclear warhead) கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு வெடிபொருள் கொண்ட ஏவுகணைகள், (nuclear warhead)- அணு வெடிபொருள் கொண்ட கணைகள், (strategic bombing air-crafts and submarines) கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த குண்டுவீச்சு விமானங்கள் மற்றும் நீர்மூழ்கிக்கப்பல்கள் எத்தனை சீனாவிடம் உள்ளது என்ற விவாதத்தில் இறங்கியுள்ளன ஏகாதிபத்திய நாடுகளின் பாதுகாப்புக் கொள்கை வகுக்கும் நிறுவனங்கள்.

ஸ்டாக்ஹோம் ஐ தலைமையகமாகக் கொண்ட (International Peace Research Institute - SIPRI) சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் கருத்துப்படி, சீனா 2009 ல் இயங்குநிலைக்கு தயாராக 186 கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அணுஆயுதங்களை வைத்திருந்தது. அதே வேளை International Panel on Fissile Material (IPFM) அணுஉலைகள் மற்றும் யுரேனிய பொருட்கள்சார் சர்வதேசக் கண்காணிப்பு குழு (IPFM) 240 கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுதங்களை சீனா 2010 இல் வைத்திருந்தது என கூறுகிறது. இத்தகவல்கள் உண்மையானால், அமெரிக்கா மற்றும் ரஸ்சிய அணுவாயுத எண்ணிக்கையுடன் ஒப்பி டுகையில் மிக மிக குறைவானதே. அமெரிக்காவிடம் 5000 கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அணு வெடிபொருள் கொண்ட ஏவுகணைகளும், ரஸ்சியாவிடம் 7000 இக்கு மேற்பட்டவைகளும் இருப்பதாக அந்நாடுகளே பகிரங்கமாகக் கூறுகின்றன.

### ஏகாதிபத்தியங்கள் காகிதப்புலிகள்

இன்று மறுபடியும் ஒரு அறிவிக்கப்படாத, ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலான, ஒருவரை ஒருவர் விஞ்சி இருக்க மேற்கொள்ளும் சூழ்ச்சிப் போர்(cold war) ஆரம்பக் கட்டத்தை அடைந்துள்ளது என, சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் போர்பொருள்- ஆயுத உற்பத்திசார் அவதானிகளின் கருத்துத் தெரிவிக்கின்றனர். இம்முறை இப்போர் ரஷியாவுக்கும், அமெரிக்காவுக்கும் அந்நாடுகளின் அடிவருடிகளுக்கும் இடையில் நடக்கப் போவதில்லை. அது அமெரிக்க சார்பு நாடுகளுக்கும், சீனா தலைமையிலான அதன் நட்பு நாடுகளுக்கும் இடையிலேயே நடக்கப்போகிறது. முதலாவது ஆயுதப் போட்டியும் அது சார்ந்த சூழ்ச்சிப்போரும் மேற்குநாடுகள் மற்றும் வடதுருவ நாடுகளை மையப்படுத்தியே நடந்தது. இம்முறை ஆசிய நாடுகளை மையமாகக் கொண்டு நடைபெறும் சாத்தியங்களே காணப்படுகிறது. அமெரிக்கா, ஆசிய நாடுகளில் நடாத்தும் யுத்தங்களும், அது மத்திய- கிழக்கு நாடுகளில் முன்னெடுக்கும் விண்வெளிசார் யுத்தத்தயாரிப்புகளும் இதையே கட்டியம் கூறுகின்றன.

சீனாவின் மாபெரும் தலைவர் மாவோ, தனக்கே உரித்தான சிலேடையில், ஏகாதிபத்தியங்களைக் கடதாசிப் புலிகள் என வர்ணித்தார். இன்று அவரால் உருவாக்கப்பட்ட பாதுகாப்புத் திட்டங்களும், அறிவியல் வளர்சிக்கான கட்டமைப்புகளும் இன்று தவறாகப் பாவிக்கப்பட்டு, மாவோவின் தேசத்தையே காகிதப்புலியாக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது மனிதகுல வரலாற்றின் முரண்நகை எனலாம்.
இதேவேளை, ஆசியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் மற்றும் - மக்கள் நலம் சார் சக்திகள் முன் மாபெரும் பொறுப்பு மலையாய் குவிந்துள்ளது. இப்பொறுப்பை சரியாகக் கையாளுவதன் மூலமே, மறுபடியும் வரலாற்றை மாற்றி எழுத முடியும்.





# மாணவர்... (13ம் பக்க தொடர்ச்சி)

கல்வியை வழங்கும் பொறுப்பினை ஒப்படைக்க முயல்வதோடு ஒதுக்கீட்டை இடைவெட்டுவதினால் துண்டு விழும் தொகையினை சுமக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களிடம் சுமத்தப்படுகிறது. கல்வி தனியார் மயமாக்கப்படும் போது அரச பல்கலைக்கழகங்கள், பாட சாலைகள் தற்போது தனியார் போக்குவரத்து சேவையின் முன் அரச போக்குவரத்து சேவை அடைந்திருக்கும் நிலைக்கே சீரழிந்து செயலிழந்து செல்லும். கடந்த வருடங்களில் ஒரு கிழமைக்கு ஒன்று என மொத்தம் 350 பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டுள்ளமையானது தனியார் மயமாக்கலின் முன் இலவச கல்வியின் எதிர்கால நிலையை கட்டியம் கூறி நிற்கின்றது. தற்போது சபிரி பாடசாலை திட்டம் எனும் திட்டத்தை நடைமுறைபடுத்தி வரும் அரசாங்கம் அதன் மூலம் 9000 அதிகமான பாடசாலைகளில் வெறும் 3000 பாட சாலைகளை தேர்ந்தெடுத்து அபிவிருத்தி செய்கின்றது. பாடசாலை அபிவிருத்திக்கு வேறு நிதி ஒதுக்கீடுகள் இல்லாத நிலையில் ஏனைய 6000 கும் அதிகமான பாடசாலைகள் நிர்கதியாய் விடப்பட போகின்றன. தற்போது நடப்பது போல அந்த பாடசாலைகளை பெற்றோர்களும் பழைய மாணவர்களும் பொறுப்பேற்று நடத்தாவிட்டால் அவை கட்டம் கட்டமாக மூடப்படும். எதிர்காலத்தில் உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கி ன்றதோ அந்தளவிற்கு தான் உங்கள் பிள்ளைகள் கல்வியை பெற முடியும். அப்படியே கிடைத்தாலும் அது சமத்துவமாக கிடைக்கபோவதில்லை. தற்போது சந்தையில் அசல் ஐ போன்கள் அதிக விலையிலும் அதே போன்ற நகல் சீன அழைபேசிகள் குறைந்த விலையிலும் விற்பனை செய்யப்படுவது போல கல்வி துறையிலும் இவ்வாறான பாடநெறிகள் விற்பனை செய்யப்படும். இந்த நிலை கல்வி சமத்துவத்தை ஒழித்து பாரிய ஏற்ற தாழ்வுகளை உருவாக்குவதோடு கல்வியின் தரத்தினையும் குறைத்திடும். இறுதியாக கல்வி அனைவருக்குமான சமூக உரிமை என்ற நிலையில் இருந்து பணம்படைத்தவர்களுக்கான வரப்பிரசாதமாக மாறிடும்.

இந்த நெருக்கடியின் முன் அனைவருக்கும் இரண்டு தெரிவுகள் தான் இருக்கின்றன. முதலாவது தெரிவு. பணம் உழைப்பது. மேலதிக பகுதி நேர வேலை செய்வது அல்லது இரண்டு தொழில்கள் செய்வது குடும்பம் பிள்ளைகள் உறவினர்கள் என தனிபட்ட வாழ்க்கையின் முக்கால் வாசியை தியாகம் செய்து விட்டு பிள்ளைகளின் கல்விக்காக உழைப்பது. அரச துறையில் தனியார்துறையில் உயர்தொழிலில் இருப்பவர் கள் இவ்வாறு ஓரளவிற்கு ஈடுகொடுக்க முடிந்தாலும். முன்பு கூறியது போல கூலி விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் தம் பிள்ளைகளை இந்த போட்டியில் இருந்து விலக்கி கல்வியை இடைநிறுத்தி வேலைக்கு அனுப்பவே நேரிடும். அல்லது களவெடுக்க வேண்டும், லஞ்சம் பெற வேண்டும் அல்லது மோசடி செய்திட வேண்டும். அண்மையில் புத்தளம் பகுதியில் ஒரு மாணவி பாடசாலை கட்டணம் செலுத்த தேங்காய் திருடிய சம்பவத்தினை கொஞ்சம் நினைவுபடுத்தி கொ ள்ளுங்கள். எப்படியாயினும் இந்த தெரிவில் இறுதியாக எஞ்சுவது ஏமாற்றமும் விரக்தியும் தான். இரண்டாவது தெரிவு கல்வி தனியார் மயமாக்கலை எதிர்த்து இலவச கல்வியை வென்றெடுக்கும் போராட்டத்தை நடத்தி கல்வியை சமூக உரிமையாய் வென்றெடுத்தல். மாணவர்கள் கடந்த 30 வருடங்களாக பல்வேறு தியாகங்களை செய்து போராடி வருகின்றார் கள். அவர்களது போராட்டம் குறிப்பிட்ட நிகழ்வுகள் சார்ந்ததாகவே அமைந்திருந்தது. அந்தந்த காலப்பகுதி யில் ஏற்படும் நெருக்கடிகளை எதிர்த்து போராடினார்கள் ஆனால் அந்த போராட்டங்கள் முழுமையானதாக அமையவில்லை. ஆனால் மாணவர் போராட்டங்களே இலவச கல்வியை அழிவிலிருந்து பாதுகாத்து வந்தது. ஆனால் இனியும் மாணவர்களால் அது தொடர்ந்து சாத்தியமில்லை. மாணவர்கள் மாணவர் பருவத்தில் இலவச கல்விக்காக போராடுகின்றார்கள். அதன் பின் அவர்கள் தொழிலிற்கு சென்ற பின் அந்த போராட்ட த்தை கைவிட்டு தன் பிள்ளைகளுக்கு கல்வியை பெ ற்று கொடுப்பதற்கான பொருளாதார போராட்டத்தில் இறங்கி விடுகின்றார்கள். இது மாணவர்களின் வர்க்க இயல்புடன் தொடர்புடையது. உண்மையில் பாதிக்கப்டும் பெற்றோர்களாகிய உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் வேடிக்கை பார்த்து கொண்டிருருப்து தான் போராட்ட த்தினை முழுமையடைய செய்யாமல் இருக்கின்றது. போராடும் மாணவர்களும் பாதிக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களும் கூட்டணி அமைத்து போராட வேண்டும். அதுவே உண்மையான திசையில் போராட்டத்தினை தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கான வழி. எனவே மாணவர்களும் தொழிலாளர்களும் கரம் கோர்த்து இலவச கல்வியை வென்றெடுக்க போராடுவதே எம்முன் இருக்கும் ஒரே தெரிவாகும்.

# விஞ்ஞானம் என்றால்... (12ம் பக்க தொடர்ச்சி)

இயற்கையை சார்ந்து வாழ்வும், இயற்கையை ச் சார்ந்து உழைப்பு ஏற்படுத்திய பிளவு, அறிவு சார்ந்த பிளவாகியது. வாழ்விடம், சூழல், உழை ப்பின் வேறுபாடுகள் அறிவு சார்ந்த பிளவாகி யது. உழைப்புச் சார்ந்த அறிவு கூர்மையாகின்ற போது, அதுவே நுட்பமாகி மனிதனுக்கு அன்னியமாகியது. சமூகத்தில் இருந்தும் அறிவு தனிப்பிரிவாகின்றது. உழை ப்பு பலவகை யாக, தொடர்ந்து பிளவுற்றது. பொருள் பற்றி பகுப்பாய்வு நுட்பமாகிய போது, அறிவு மனிதர்களுக்கு எதிரான தனிப்பிரிவாகி யது. பொ ருளை தனிவுடமையாக்கி உழை ப்பை பொ ருளில் இருந்து பிரித்த போது, பொருள் மீதான அறிவும் அன்னியமானது. படிப்படியாக உழைப்பு சார்ந்தும், உழைப்பு சாரா த அறிவாகவும் பிளவுறுகின்றது. அதேநேரம் உழைப்பின் தனி வகை, பொருள் அல்லாத உழைப்பாக பிரிந்தது. உதாரணமாக கலை ஞர்கள் (ஆடல், பாடல், நடனம்) தொடங்கி விஞ்ஞானிகள் வரை யாக உழைப்பு சாராத ஒன்றாக வேறுபடத் தொடங்கியது.

பிரிவுகளும், பிளவுகளும் தனித்துறை சார்ந்த அறிவாக மக்களில் இருந்து பிரிகின்ற போது, மக்களில் இருந்து அறிவு அந்நியப் பட்டுவிடுகின்றது. பொருள் தனிவுடமையாகி அறிவு அன்னியமாக, பொருள் பற்றி அறிவு மேலும் நுட்பமாகி ஆய்வுகூட அறிவாக, அறிவு மனிதனில் இருந்து விலகி தனிமைப்பட்டு தனிவுடமையாகின்றது. அறிவை தங்கள் சுய அறிவாக, தங்கள் தனி உரிமையாக, உடமையாக மாற்றி விடுகின்றனர். மக்கள்
பொருளை பயன் படுத்தும் போது, அப் பொ ருள் பற்றிய அறிவில் இருந்து அந்நியமாகி விடுகின்றனர். விளைவு பொருளுக்கு மனிதனை அடிமையாக்கி விடுகின்றது. இன்று தான் பயன்படுத்தும் பொருள் பற்றிய அறிவின்றிய மனித வாழ்வு, பொருளுக்கு அடிமையாக்கி விடுகின்றது. பொருள் பற்றிய அறிவை விடுத்து, பொருளைப் பூசிக்கின்ற அந்நிய மாதல் அறிவாக மாறுகின்றது. மனிதர்களுக்கு இடையேயான கூட்டு வாழ்வு சார்ந்த உணர்வுகள் உறவுகளில் இருந்து தனிமைப்பட்ட ஒன்றாக, பொருளுக்கு கீழ்ப்பட்ட மனித உணர்வாக உறவாக மாறிவிடுகின்றது.

விஞ்ஞானம் தனிமனித கண்டுபிடிப்பாக, அவனின் உரிமையாக, மூலதனத்தின் சொத்தாக தனிவுடமை அமைப்பில் இருக்கின்றது. உதாரணமாக மஞ்சள், வேம்பு...என மரங்கள் தொடங்கி மனிதனின் உடல் சார்ந்த மரபு கூறுகள் வரை மனிதனுக்கு சொந்தமில்லை. மனிதனின் பாரம்பரிய அறிவியல் உண்மைகள் அனைத்தையும் மனிதனில் இருந்து பிரி த்து எடுத்து, அவை அனைத்தும் மூலதனத் தின் உரிமையாக்கப்படுகின்றது. நுகர்வுக்குரிய மனித மிருகமாகவும், அதற்காக உழைக்குமாறும் மனிதன் மந்தையாக்கப்படுகின்றான்.

**(அடுத்த இதழில் தொடரும்)**

# நவ தாராளமய கொள்ளை... (9ம் பக்க தொடர்ச்சி)

மக்களை நகரங்களிலிருந் விரட்டிவிட்டு, நவ நகரங்களில் மத்தியதர வர்க்கத்தினரை குடியெற்றி வேறுபட்ட மக்கள் கலந்து வாழும் இடங்களாக மாற்றுவதேயாகும். விஷேடமாக கொழும்பு போன்ற நகரங்கள் " ஏழைகள் இல்லாத " நகரங்களாக மாற்றுவதோடு, ஏழ்மையை ஒழித்துக் கட்டுவதற்குப் பதிலாக ஏழைகள் நகரங்களிலிருந்து விரட்டப்படுவார்கள். இதற்காக முன்வைக்கப்பட்டிருக்கு மற்றைய வாதம், "இடர் முகாமைத்துவமாகும்" இந்த நகைப்பிற்கிடமான வாதத்திற்கேற்ப, கடற்கரையை அண்டிய நிலப் பகுதி சுனாமி ஆபத்து ஏற்படக்கூடிய பிரதேசமாகும். மலைப் பிரதேசங்கள் மண்சரிவு அபாயம் இருப்பதனால் மக்கள் வசிப்பதற்கு உகந்த இடங்களல்ல. அந்தப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களும் அங்கிருந்து வெளியேற்றப்படுவர். உல்லாசப் பிரயாண வலயங்கள் அமைப்பதற்காக கடற்கரையை அண்டிய நிலங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்படுவதற்கு இதனை ஒப்பிடலாம். இவ்வாறாக பல்வேறு நகைப்பிற்கிடமான காரணங்களை முன்வைத்து மக்கள் தற்போது வாழ்ந்து வரும் பிரதேசங்களிலிருந்து அவர்களை வெளியேற்றுவதன் ஊடாகவும் அதி நகர்புற பிரதேசங்களை அமைப்பதன் ஊடாகவும் சமூகத்தில் எப்படியான விளைவுகளை உண்டாக்கும் என்பதை கவனித்துப் பார்க்க வேண்டும்.

இதன் மூலம் இலங்கை மக்களினதும், மதங்களினதும் வியாபித்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு, வர்க்கங்களின் வியாபித்தல் முறையில் மாற்றம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருப்பது தெரிகிறது. அது ஒரு விதத்தில், வலுக்கட்டாயமாக கலப்பதற்கான திட்டமாகவும், மறுபக்கத்தில், அனைத்து வசதிகளையும் கொண்ட மத்திய தர வர்க்கத்தினர் வசிக்கும் பிரதேசங்கள் மற்றும் எவ்வித வசதிகளும் இல்லாத ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் பிரதேசங்களாகவும் குடியிருப்பு முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான திட்டமும் இதில் அடங்கியுள்ளது. இலங்கையில் நவ தாராளமய முதலாளிய மறுசீரமைப்பிற்குத் தேவையான சமூக பின்புலத்தை உருவாக்குவதோடு, அதனால் ஏற்படக் கூடிய பின்விளைவுகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

இதன் ஊடாக மேற்கொள்ளப்படவிருக்கும் கோட்பாட்டு ரீதியிலான அழுத்தத்தையும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. திறக்கப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையிலும் நாளொன்றிற்கு ஆகக் குறைந்தது இரண்டு விமானப் பயணங்களையாவது மேற்கொள்ள முடியாதுள்ள மத்தள சர்வதேச விமான நிலையமும், எப்போதாவது ஒரு முறை வரும் அரசாங்கத்தின் கப்பலைத் தவிர, இரண்டு வருடங்களாக பாழடைந்து காணப்படும் ஹம்பாந்தோட்டை துறைமுகமும் பொருளாதார ரீதியில் தோல்வியடைந்த திட்டங்களாகும். ஆனால், அவை "ஆசியாவின் ஆச்சரியம்" குறித்து சைகை காட்டி சமூகத்திற்கு கண்ணோட்ட ரீதியிலான பாரிய அழுத்தத்தைக் கொடுத்தது. இது நவ தாராளமயத்தின் முதலாம் கட்டத்தில் துரித மகாவலி திட்டம் உள்ளிட்ட மின்வலு திட்டங்கள், நெடுஞ்சாலைகள் போன்றவற்றின் ஊடாக ஏற்படுத்திய கண்ணோட்ட வற்புறுத்தலோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியும். ஆகக் குறைந்தது மக்களின் வாழ்க்கை தரத்தை ஒரு அங்குலத்திலாவது உயர்த்த முடியாத இலங்கை போன்ற பின்தங்கிய முதலாளித்துவத்திற்கு, இவ்வாறான மாயாஜாலங்கள் மூலம் தமது இருப்பை தக்க வைத்துக் கொள்ள முடியும். அந்த மாயாஜாலத்தின் ஊடாக தமது வர்க்க ஆதிக்கத்தையும் அரச அதிகாரத்தையும் நிலைபெறச் செய்ய முடியுமாயிருந்தால், சமூகம் என்ற வகையிலும், சூழல் ரீதியிலும் எப்படியான அழிவுகள் ஏற்பட்டாலும் ஆட்சியாளர்களுக்கு கவலை இல்லை.

அரசாங்கத்தின் 20 வருட திட்டத்தினால் ஏற்படக்கூடிய அழிவுகள் குறித்து இவ்வாறான சிறிய ஆக்கத்தின் மூலம் விளக்கமளிப்பது முடியாத காரியம். சில துறைகள் விடயத்தில் மாத்திரம் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. எப்படியிருந்தாலும், இந்த அனைத்திலிருந்தும் ஒரு விடயம் மாத்திரம் தெட்டத் தெளிவாகிறது. நவ தாராளமயத்தின் இரண்டாம் கட்டம் இலங்கையில் ஆரம்பமாகியுள்ளது. சில அரசியல் ஆய்வாளர்கள் "நவ தாராளமய மிலேச்சத்தனம்" என குறிப்பிட்ட செயற்பாட்டை நேரடியாக அனுபவிக்கும் சந்தர்ப்பம் எமக்கு கிடைத்துள்ளது. இப்போது இடதுசாரி இயக்கத்தின் முன்னிருக்கும் சவாலாக இருப்பது, ஆசியாவின் போலி ஆச்சரிய கனவில் மூழ்கடித்திருக்கும் சமூகத்தை அதிலிருந்து மீட்டெடுக்கும் சவாலேயாகும். அரசாங்கத்தின் போலி ஏகாதிபத்திய எதிர்பிற்கு பின்னால் மறைந்திருக்கும் ஏகாதிபத்திய மூலதனத்தின் தேவைகளை இணங்காட்டுவது மற்றும் அந்த அறிவை சமூகமயப்படுத்துவதும் இன்னொரு சவாலாகும். உத்தேச சர்வதேச உள்ளக விமான நிலையங்கள்

# நெஞ்சில் உரமுமின்றி.... (4ம் பக்க தொடர்ச்சி)

தொழில் உரிமைகளை வென்றெடுப்பதற்கான பொருளாதார போ ராட்டம். இதற்கான வலுவினை தருவது தான் தொழிலாளர்களின் ஒன்றினைவான தொழிற்சங்கங்கள். இந்த தொழிற்சங்கங்களை உருவாக்கி செயற்படவேண்டியவர்கள் தொழிலாளர்களே அன்றி தேயிலை தோட்டங்களின் உரிமையாளர்கள் அல்ல. இந்த பொருளாதார போராட்டங்களின் போது அதிகாரத்துடன் மோதும் பலம் தொழிற்சங்கங்கள் மூலமே கிடைக்கின்றது. தொழிற்சங்கங்கள் பலமானதாக அமைய வேண்டுமெனில் தொழிலாளர்கள் அனைவரும் தாம் முதலாளிகளினால் சுரண்டபடுவதற்கு எதிராக தொழிற்துறை, தொழிற்சாலைகள், மொழி, இனம், மதம், சாதி என்பவற்றினை கடந்து தொழிலாளர்கள் என்ற ரீதியில் ஒன்றினைய வேண்டும். தோட்ட தொழிலாளர்களும், ஆடைத் தொழிலாளர்களும், இறப்பர் தொழிலாளர்களும், தெங்கு தொழிலாளர் களும் இன்னும் பிற தொழிலாளர்களும் ஒன்றாய் கரம் கோர்க்கும் போதே மாபெரும் சக்தியாய் உருவெடுத்து அடக்கியாளும் முதலாளி களின் அதிகாரத்தினை தகர்த்தெறிந்து தொழிலாளர் அதிகாரத்தினை நிலைநாட்டி முடியும். ஆனால் மலையக தொழிற்சங்கங்களோ இதனை தவிர்த்து தோட்ட தொழிலாளர்களை ஏனைய தொழிலாளர்களை தொழில் அடிப்படையிலும் இன அடிப்படையிலும் ஏனைய தொழிலாளர்களிடமிருந்து பிரித்து தனிமைப்படுத்தி அபிவிருத்திகளை செய்வோம் என்று கூறி பதவிகளை பெற்றுகொள்வதற்கான பகடை காய்களாக பயன்படுத்துகின்றன. இதற்கு எதற்கு கொள்கை. குழிபறிக்கவும் ஏமாற்றவும் உணர்ச்சி பொங்க உரையாற்றவும் வஞ்சகம் செய்யவும் லஞ்சம் கொடுக்கவும் தெரிந்தால் போதும். அதை தான் மலையக கட்சிகள் செய்துகொண்டிருக்கின்றன. கருத்து முரண்பாடுகள் என்று பிரிந்து நின்று வாக்கு கேட்பவர்கள் எல்லாம் பதவிகளை பெற்றவுடன் மகிந்தவிடம் சரணடைந்து நாம் எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதினை நிருபித்து வருகின்றார்கள். பாதை, மின்சாரம், தண்ணீர், இன்ன பிறவை மட்டும் தான் தொழிலாளர்களின் தேவை என்றால் அதன் மூலம் தான் சுபீட்சம் என்றால் மலையக கட்சி ஊடாக ஒருவரை தெரிவு செய்து அவர் அரசாங்கத்துடன் இணைந்து பேரம் பேசி என ஏன் சுற்றி வளைத்து காரியம் ஆகவேண்டும்? நேரடியாக ஆட்சி யமைக்க கட்சிக்கு வாக்களித்து அபிவிருத்திகளை பெற்று விடலாமே? மலையக தோட்ட தொழிலாளர்களின் உண்மையான முதன்மையான பிரச்சினைகள் அபிவிருத்தியல்ல. வாழும் நிலத்தின் உரிமையாளராக வேண்டும். கௌரவமான வாழ்க்கை தேவை. இதனை வென்றெடுக்க வேண்டுமாயின் அனைத்து தொழிலாளர்களுடன் பொருளாதார போரா ட்டங்களுக்காக கைகோர்ப்பதுடன் அதனையும் தாண்டி சென்று மனி தனான வாழும் வாழும் நிலத்தின் மீது உரித்துடையவனாகும் உரிமை யை வென்றெடுக்க அனைத்து ஒடுக்கப்பட்டவர்களுடனும் கைகோர்த்து போராட வேண்டும். பாரளுமன்றத்திற்கு ஒடுக்குபவர்களுடன் பேரம் பேசி ஒடுக்காதே என்று கெஞ்சி விடுதலையையோ உரிமையையோ வெல்ல முடியாது. வென்றதாக சரித்திரமும் இல்லை. ஒடுக்குபவர்களுக்கு எதிரா ன ஒடுக்கப்பட்டவர்களின் ஒன்றுபட்ட எழுச்சியே எப்போதும் எமக்கான உரிமைகளை வென்றிருக்கின்றன. இந்த எழுச்சிக்கு முட்டுகட்டை போ ட்டு தொழிலாளர்களை பிரித்து பதவிக்காக எம்மை பகடை காய்க ளாக பயன்படுத்தும் நெஞ்சில் உரமும் நேர்மை திறனும் அற்ற இந்த நயவஞ்சக தலைவர்களையும் தொழிற்சங்கங்களையும் நெஞ்சிவ் எட்டி உதைத்து ஓட செய்து ஒடுக்கபட்ட தொழிலாளர்கள் உரிமைக்காக ஒன்றாய் கரம் கோர்த்திட வேண்டும். இதற்கு தலைமை வழங்க கூடிய விஞ்ஞான பூர்வமான வழிக்காட்டல்களை வழங்க கூடிய தொழிலாளர்களுக்கு மாணவர்கள், விவசாயிகள் என அனைவரின் ஒத்துழைப்பையும் பெற்று தர கூடிய முற்போக்கு இயக்கத்தினை கட்டியெழுப்பிட வேண்டும்.

# போராட்டம்

400/2, தலவத்துகொட பாதை, மாதிவெல, கோட்டே தொலைபேசி/தெலைநகல்: 094-112799432
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com

## நாடு பூராவும் சுதந்திர கல்வி வலயங்கள் முதலீட்டாளர்களுக்கு

வெளிநாட்டு பல்கலைக்கழுகங்கள் உள்ளிட்ட கல்விக்காகத் தேவைப்படும் வசதிகளை ஸ்தாபிப்பதற்காக நாடு பூராவும் சுதந்திர கல்வி வலயங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதோடு, இவற்றை தனயமார் முதலீட்டார்களிடம் ஒப்படைக்க தயாராகி வருகிறது.

கம்பஹா, புத்தளம், கிளினொச்சி, ஹம்பந்தோட்டை, திருகோணமலை மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் இவ்வாறான கல்வி வலயங்களை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக உயர் பல்வி அமைச்சின் செயலாளர் கூறுகிறமார்.

“ மேற்படி சுதந்திர கல்வி வலயங்கள் தொடர்ப்பாக எதிர்வரும் வரவு-செலவு திட்டத்தின்போது முன்மொழிவாக உட்படுத்துவது தொடர்பில் நாங்கள் ஆலோசித்து வருகிறோம். இதன்போது தனியார் முதலீட்டாளரொருவருக்கு 100 ஏக்கர் காணி வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. முதலீட்டாளரால் இந்த வலயத்தில் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களை அமைக்க முடியும். அதோடு தனியார் துறையோடு இணைந்து விடுதிகள், விளையாட்டுத் திடல்கள் போன்ற வசதிகளை முன்னேற்றவும் முடியும்” என உயர் கல்வி அமைச்சின செயலாளர் குறிப்பிட்டார்.

## முஸ்லிம்கள் மீதான எதிர்ப்பை வலுப்படுத்த “திராவிடன் சேனை”

கிழக்க மாகாண முஸ்லிம்களை துன்புறுத்துவதற்காக திராவிடன் சேனை என்ற பெயரிலான இயக்கமொன்று டீ.எம்.வீ.பி. கடசியின் அனுக்கிரகத்தோடு செயற்படுவதாக கிழக்கு மாகாணத்திலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் மற்றும் சொத்தழிப்புகள் தொடர்பிலான விசாரனைகளுக்கு அரசாங்கத்தோடு உறவாடும் டீ.எம். வீ.பி. கட்சியன் அரசியல்வாதிகள் இடையூறு செய்வதாகக் கூறப்படுகிறது. கடந்த ஜூலை 20ம் திகதி மட்டக்களப்பு, உறுகாமம் பிரதேசத்தில் முகம்மது பரீத் என்ற முஸ்லிம் வியாபாரி சொந்தமான வியாபாமர நிலையம் தாக்கி சேதப்படுத்தியது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தாலும், இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் மீதான எதிர்ப்பை தூண்டுவதற்கு திராவிடன் சேனை பதாதைகளை ஒட்டுதல், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கன்றது, சமீபத்தில் செங்கலடிப் பாதையில் ஒட்டப்பட்டிருந்த முஸ்லிம் எதிர்ப்பு பதாதை இவர்களின் கைங்கரியம் தானெனக் கூறப்படுகின்றது.

## வழங்கிய 21 நியமனங்கள் திரும்பப் பெறப்பட்டன

மாத்தறை, தெவுந்தர பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த பயிலுனர் பட்டதாரிகளுக்கு ஆகஸ்ட 14ம் திகதி வழங்கப்பட்ட நிரந்தர அரச நியமனங்கள் ஆகஸ்ட் 21ம் திகதி ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக பட்டதாரிகள் மத்திய நிலையத்தின் செயலாளர் தம்மிக முனசிங்க கூறுகிறார்.

பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த நியமனக் கடிதங்கள் பிரதேசச் செயலாளரினால் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும், இது குறித்து பிரதேச செயலாளரிடம் விசாரித்தபோது, அரச நிர்வாக மற்றும் உள்விவகார நடவடிக்கைகள் அமைச்சின் உத்தரவிற்கமைய அவை திரும்பப் பெறப்பட்டதாகக் கூறினார்.

மேற்படி பட்டதாரிகளின் பயிற்சிக் காலம் 18 மாதங்களையும் கடந்துள்ளது. பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளம்போது, 6 மாத கால பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதாகக் கூறினாலும், அரசாங்கம் அதனை மீறியிருப்பதாக பட்டதாரிகள் மத்திய நிலையத்தின் இணைச் செயலாளர் தம்மிக முனசிங்க சுட்டிக் காட்டுகிறார். இதுவரை அரச சேவையில் நியமனம் பெறாத பயிலுனர் பட்டதாரிகள் சுமார் 20,000 பேர் இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## காணாமல் போனவர்களை மறந்து விடவேண்டுமாம்.

வடமாகாண சபைத்தேர்தல் பிரச்சாரத்திற்கு சென்ற பசில்ராஜபக்ச காணாமல் போனவர்கள், காணாமல் போனவர்கள் தான், எனும்தொனிப்படபேசியுள்ளார். காணாமல் போனவர்களின் சொந்தபந்த உறவுகள் தொடர்ந்தும் காணாமல் போனவர்களை நினையா வண்ணம் செய்திகளை வெளியிட வேண்டும் எனவும் ஊடகங்களுக்கும் பணித்துள்ளார். ”ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவிபிள்ளை சிறிலங்காவுக்கான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் சிறிலங்கா அதிபர் மகிந்தராஜபக்ச வடக்கு-கிழக்கில் யுத்தத்தின் போதுகாணாமற் போன மக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமித்திருந்தார். இந்த ஆணைக்குழுவானது ஆறுமாதத்திற்குள் காணாமற் போனோர் தொடர்பான விசாரணை அறிக்கையை சிறிலங்கா அதிபரிடம் கையளிக்கவேண்டும்.” எனவும் சொன்னார்.மகிந்த அரசின் அண்ணன் தம்பிகள் யுத்தத்தில் காணாமல் போனவர்கள் விடயத்தில் எதைத்தான் சொல்கின்றார்கள். அண்ணன் இருக்கென்கின்றார். விசாரணைகளுக்கு ஊடாகக் கண்டறிய வேண்டுமென்கின்றார். தம்பி அப்படியெதுவுமில்லை மறந்து விடுங்கள் என்கின்றார் உண்மையில் ”காணாமற்போன தமது உறவுகள், இறந்து விட்டார்களா அல்லது அவர்கள் இன்னமும் உயிருடன் உள்ளனரா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள முடியாது உணர்வு ரீதியாகவும் சமூகரீதியாகவும் பாதிக்கப் பட்டு ள்ளனர். ”சமூக உளவியல் சார்சேவை வழங்குனர்கள் உளவியல் தாக்கத்திற்குட்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு அரசியல் சார் பிரச்சினைகள் தடையாகக் காணப்படுகின்றன என்பதை பல மனித உரிமைமைய ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மகிந்த அரசுமக்களின் அபிலாசைகளைக்கொண்ட, மக்கள் நலன்சார் அரசல்ல. அது அந்நிய நலன்களின் தாராளமயமயப்பட்டது. எனவே அந்நியங்களினதும், அதன் நலன்களையும், தன் குடும்பநல ஆதிகத்தையுமே எப்பொழுதும் பாதுகாக்கும்

## விதிமுறைகளை மீறி வில்பத்துவில் கிரவல் வெட்டப்படுகிறது.

முல்லிக்குளம் - சிலாவத்துறை பாதை அமைப்பதற்குத் தேவையான கிரவல் மண பெற்றுக் கொள்வதற்காக தேசிய வனப்பூங்காவில் சட்டத்திற்கு விரேராதமாக கிரவல் மண் வெட்டப்படுவதாக சுற்றாடல் பாதுகாப்பு பொறுப்பாயம் கூறுகிறது.

30 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட இந்த பாதையை அமைப்பதற்காக வில்பத்து தேசிய வனப்பூங்காவின் 4ம் இலக்கத்திற்குச் சொந்தமான பிரதேசத்தில் இவ்வாறு கிரவல் வெட்டப்படுவதாக பொறுப்பாயம் குற்றஞ்சாட்டுகிறது. 2009 22ம் இலக்கு சட்டமூலத்தில் இறுதியாகத் திருத்தப்பட்ட 1937 2ம் இலக்க வனவிலங்கு மற்றும் மரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 3,4,6 உறுப்புரைகள் அனைத்தும் மீறப்பட்டு வனப்பூங்காவிற்குள் அனுமதியின்றி நுழைதல், பெகோ இயந்திரங்களைக் கொண்டு கிரவல் வெட்டுதல், காடழித்தல், பாதை அமைத்தல், டிபர் வாகனங்களின் மூலம் ஏற்றிச் செல்லல் ஆகிய சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த இடத்தில் குளமொன்றை அமைப்பதாகக் கூறி கடந்த ஜூன் 13ம் திகதியிலிருந்து இதுவரை

3 பெகோ இயந்திரங்களையும, 50 டிபர் வாகனங்களையும் பயன்படுத்தி தேசிய வனப்பூங்காவில் 100 ஏக்கருக்கும் கூடுதலான காடு அழிக்கப்பட்டு 20 அடி ஆழமான குழிகள் வெட்டப்பட்டிருப்பதாக சுற்றாடல் பொறுப்பாயம் கூறுகிறது.








முன்னிலை சோசலிசக் கட்சி யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில், மாகாணசபை தேர்தல் சம்பந்தமாக துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தது. மாகாணசபைகள் தொடர்பாக தமது நிலைப்பாடு குறித்து வடபகுதி மக்களை தெளிவுபடுத்துவதே இதன்நோக்கமாக இருந்தது. முன்னிலை சோசலிசகட்சின் பிரச்சாரச்செயலாளர் , புபுதுஜெயகொட தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கட்சி தோழர்கள் தேர்தல் மற்றும் சமூக - அரசியல் பற்றிமக்களுடன் விவாதித்தனர் .

கோட்டே, மாதிவெல, தலவத்துகொட பாதை, இலக்கம் 400/2ல் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.